தமிழ் இலத்தீன் பாலம்

[Bridge Between Tamil And Latin]

ஆசிரியர்:
புலவர் சுந்தர சண்முகனார்
தமிழ்ப் பேராசிரியர், புதுவை.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.
Madras-1. (South India)

தமிழ் இலக்கியப் பாலம்

ஆசிரியரின் ஐம்பதாவது வெளியீடு
(பொன் விழா நூல்)
சூலைத்திங்கள், 1970

*

பொருளுதவி புரிந்த புரவலர்:
உயர்திரு. ந. இரத்தினவேலு அவர்கள்
'அசோக் மெடிக்கல்சு'
நேரு நெடுந்தெரு,
புதுச்சேரி-1.

*

வெளியீடு:
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
61-C, வைசியர் தெரு, புதுச்சேரி-1
Pondicherry-1. (South India)

*

விலை ரூ. 7-50

இளங்கோ அச்சகம், புதுச்சேரி.

பதிப்பகத்தார் உரை

' பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ''
- பாரதியார்.

'தமிழ் இலத்தீன் பாலம்' என்னும் புதுத் துறைநூல் தருகிறோம். ஓரின மொழிகட்குள்ளே 'மொழி ஒப்பியல்' என்னும் புதுக்கலை அறிஞர் பெருமக்களால் தோற்றுவிக்கப் பெற்று வளர்ந்து வருகிறது. ஆனால், ஈரின மொழிகளாகிய தமிழுக்கும் இலத்தீனுக்கும் பாலமாக உள்ள இந்த நூலில் அந்த இருமொழி ஒப்பியல் தரப்பட்டுள்ளது. இது சார்பான விளக்கங்களை இந்நூலைத் தொடர்ந்து படிப்பவர் விரிவாக அறிவர். ஆசிரியர் சுந்தர சண்முகனாரின் இந்தப் படைப்பு, இதுவரையும் வெளிவராத ஒருவகைப் புது முயற்சியே!

இந்த அரிய மொழியியல் ஆராய்ச்சி நூல் வெளியாவ-தற்குத் தாமாக முன்வந்து பொருளுதவி புரிந்த புரவலர், புதுவையில் பெயர் பெற்ற மருந்தகமாகிய 'அசோக் மெடிக்கல்சு' என்னும் பெரிய வாணிக நிறுவனத்தின் உரிமை யாளர் உயர்திரு ந. இரத்தினவேலு அவர்கள் ஆவார். அவர்தம் உள்ளத்தின் பரப்பு விசும்பினும் பெரிது! அவர்கட்கு எவ்வளவு நன்றி செலுத்தினும் போதாது!

புதுவை பிரெஞ்சு கலைக் கழகத்தின் தமிழ் - பிரெஞ்சு ஆராய்ச்சித் துறைத் தலைவராய் வீற்றிருந்து பல அரிய பெரிய பழந் தமிழ் நூற்களைப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்து உலகப் புகழ் பெற்றுள்ள 'மொழியாக்கச் செல்வர்' உயர்திரு ரா. தேசிகப் பிள்ளையவர்கள் இந்த நூலுக்கு அருள்கூர்ந்து நல்ல அணிந்துரை நல்கியுள்ளார்கள். அவர்கட்கும் சால நன்றி! ஆதரவளிக்க அனைவரையும் வேண்டுகிறோம்.

அணிந்துரை

'மொழியாக்கச் செல்வர்' உயர்திரு. ரா. தேசிகப்பிள்ளை,
B. A., B. L., Officier d'Académie,
ஓய்வு பெற்ற தமிழ் - பிரெஞ்சு ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
பிரெஞ்சு கலைக்கழகம், புதுச்சேரி.

உலகத்திற் சிறப்புற்றுக் காணப்படும் மொழிகள் சிலவற்றுள் தமிழ் மிகச் சிறந்த ஒரு மொழியாக மதிக்கப்படுகிறது. அஃது உயர்தனிச் செம்மொழி என்று பலராலும் பாராட்டப் பெறுகிறது. சொல்லாலும் பொருளாலும் இனிமையும் நயமும் உடையது தமிழ்.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள், பண்டைக்காலம் முதல் இன்றுவரை தம் மொழியை உயிரினும் சிறப்புடையதாக மதித்துப் போற்றி வருகின்றனர். தமிழின் உயர்வும் தமிழரின் பெருமையும் பிற நாட்டினர் மனத்தினைக் கவர்ந்தன. இக்கவர்ச்சி அவர்களைத் தமிழ் நாட்டோடும் தமிழர்களோடும் தொடர்பு கொள்ளத் தூண்டிற்று என்னலாம். இத்தூண்டுதல் காரணமாகக் கடல் கடந்துவந்த பல நாட்டினர் தமிழின்பால் ஆர்வம் கொண்டு அதனைக் கற்கவும் அதனோடு தொடர்பு கொள்ளவும் முற்பட்டனர். அவர்களுள் இலத்தீன் மொழியை நன்கு கற்ற ஐரோப்பியர்கள் தமிழின் அருமை பெருமைகளை அறிந்து, இலத்தீன் மொழி வாயிலாகத் தமிழை ஐரோப்பியர்க்குக் கற்பிக்கும் முயற்சியையும் மேற்கொண்டனர்.

இலத்தீன் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு விளங்கிய மக்கள் 'இலத்தினர்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் 'இலத்தியோம்' என்னும் நாட்டில் வசித்து வந்தனர். உரோமாபுரி மக்கள் அவர்களோடு தொடர்பு கொண்டவர்கள். சமயத் துறையில் அவர்களைப் பின்பற்றிப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

லெவியஸ் ஆந்த்ரோனிக்குய்ஸ் (Levies Andronicus: கி. மு. 284 - கி. மு. 204) என்னும் பெரும் புலவர் காலத்திலிருந்து படிப்படியாகப் பெருவளர்ச்சி பெற்று வந்த இலத்தீன் மொழி, அரசியல் செல்வாக்கு இழந்ததால், கி. பி. ஐந்தாவது நூற்றூண்டுக்குப் பின், பேச்சு வழக்கினின்றும் சிறிது சிறிதாக விலகித் தன் உயிர்த் தன்மையை இழக்கலாயிற்று. ஆயினும், கிறித்துவர் கோயில்களிலும் நீதித் துறையிலும் அதன் செல்வாக்குக் குறையவில்லை. இலத்தீன் மொழியின் பண்டைய சிறப்பு, அதனைப் பழங் காலத்து முறையில் இருந்தபடியேனும் இருக்கச்செய்து அதன் அருமை பெருமையினை விளங்க வைத்துக்கொண்டிருக்கிறது.

இந்த இலத்தீன் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே யுள்ள தொடர்புச் செய்திகளைத் தமிழ் மக்களுள் ஒரு சிலரே அறிவர். அவற்றைப் பற்றிப் பலரும் தெரிந்து கொள்ளும்வண்ணம் புலவர் திரு. சுந்தர சண்முகனார் 'தமிழ் இலத்தீன் பாலம்' என்னும் பெயரிய இந்நூலை இயற்றி உதவியிருப்பது பெரிதும் பாராட்டற்குரியது.

நூலின் தொடக்கத்தில் மொழி ஒப்பியலைப் பற்றி ஆராய்ந்த ஆசிரியர், தொடர்ந்து, தமிழ் - இலத்தீன் மொழிகள் பற்றியும், தமிழ் இலத்தீன் பாலம் அமைத்த அறிஞர்கள் பற்றியும், தமிழ் இலத்தின் பாலமாக உள்ள நூற்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து விளக்கிக்கொண்டு செல்கிறார். ஆசிரியர் சுந்தர சண்முகனார் தந்துள்ள 'இலத்தீன் ஒலிப்பு முறை' என்னும் பகுதி, இலத்தீன் கற்க முயலும் தமிழர்க்குப் பெரும்பயன் அளிப்பதாகும். ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ள இலத்தீன் – தமிழ் இயற்கை ஒற்றுமைகள் அனைத்துமே படிப்பதற்கு மிகவும் சுவை பயப்பினும், அவற்றுள், 'எண்ணுப் பெயர் ஒற்றுமை' என்னும் பகுதியில் அவரது

ஆராய்ச்சித் திறன் நன்கு சுடர்விட்டுத் தெரிகிறது. நூலின் இறுதியில், தமிழ் - இலத்தீன் அகராதி அமைத்திருப்பது போற்றுதலுக்குரிய ஓர் அரிய முயற்சி எனலாம்.

ஈண்டு எனது விருப்பம் ஒன்றை வெளியிட்டு இந்த அணிந்துரையை முடிக்கிறேன். 'கால்டுவெல்' என்னும் ஆங்கிலப் பெரியார், 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் அரிய நூலைப் படைத்ததற்காக, இங்கிலாந்திலுள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு 'டாக்டர்' என்னும் சிறப்புப் பட்டம் அளித்துச் சிறப்புப் பெற்றது எனப் புலவர் சுந்தர சண்முகனார் ஓரிடத்தில் (பக்கம் - 15, 16) எழுதியிருப்பதைக் கண்ணுற்று வியப்பெய்தினேன். ஆங்கிலேயக் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தார்க்கு, தென்னிந்தியத் திராவிட மொழிகளிடம் என்ன அவ்வளவு அக்கறை வேண்டிக்கிடக்கிறது? ஆயினும், அறிஞர் கால்டுவெல் அவர்களின் அரிய உழைப்பினைப் பாராட்டுமுகத்தான் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது அந்தப் பல்கலைக் கழகம்.

அங்ஙனமெனில், புதிய முறையில் தமிழ் - இலத்தீன் ஒப்பிலக்கண ஆராய்ச்சி நூல் இயற்றிய புலவர் சுந்தர சண்முகனார்க்கும் அத்தகையதொரு சிறப்புச் செய்ய வேண்டும் என யான் விரும்புகிறேன். எந்தப் பல்கலைக் கழகமாவது, அப்படியொரு சிறப்பினை, ஆராய்ச்சித் திறன் மிக்க நம் புலவருக்கு அளித்துப் பெருமை கொள்ளவேண்டும் என்பது அடியேனது அவா!

1-7-1970 ரா. தேசிகன்

அ. கணேசன்

உள்ளுறை

முதல் பாகம்

மொழி யியல் செய்திகள்

இரண்டாம் பாகம்

பிற் சேர்க்கை

தமிழ் இலத்தீன் பாலம்

முதல் பாகம்

மொழி யியல் செய்திகள்

தமிழ் இலத்தீன் பாலம்

நூன் முகம்

கண்ணைக் கவரும் தோற்றமுடைய புத்தம் புதிய நூற்களை வாங்குவதில் சிலருக்கு மகிழ்ச்சி மிகுதி. எனக்கோ, பல்லாண்டுகட்கு முன் பதிப்பிக்கப் பெற்ற பழைய நூற்களை வாங்குவதில் ஆர்வம் மிகுதி. அதிலும், மொழிகள் பற்றிய நூற்கள் எனக்கு உயிர். பள்ளிக்கூடம் விட்டு வரும் போது பழைய நூற்கள் விற்கும் கடைகளில் புகுந்து பல நூற்களை வாங்கிச் சுமந்துகொண்டு வருவது எனக்குப் பல்லாண்டுகளாக உள்ள பழக்கமாகும். வாங்கி வரும் நூற்களை வைக்க இடமில்லையே என்று என் குடும்பத்தினர் முணு முணுப்பதைக் கேட்காதவன் போல் மெள்ள வீட்டிற்குள் நுழைந்து நூற்களை எங்கேயாவது திணித்து வைப்பது என் வழக்கம்.

பெறலருஞ் செல்வம்:

இப்படியாக யான் வாங்கிவந்த மக்கி மடிந்து போன பழைய நூற்களுள் சில பெறலருஞ் செல்வங்களாகும் என்னும் செய்தி பின்னர்ப் பின்னர்த் தெரியலாயிற்று. அச்செல்வங்களுள் இலத்தீன் மொழி தொடர்பான நூற்கள் மிகவும் இன்றியமையாதவை. இந் நூற்களின் துணை கொண்டு இலத்தீன் இலக்கணம் பற்றி ஓரள

வேனும் தெரிந்துகொள்ளும் முயற்சியைப் பதினைந்து ஆண்டுகட்கு முன்பே தொடங்கினேன். இலத்தீன் இலக்கண இன்பத்தை மிகக் குறைந்த அளவில் ஒருசிறிது சுவைத்த நான், 'சுவை கண்ட பூனை' என்பதேபோல, மேலும் பன்மொழிகளைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் வழிகாட்டி நூற்களை (guides) வாங்கியடுக்கத் தொடங்கினேன். இந்த மொழிநூற்களோடு பொழுது போக்குவது எனக்கு ஒரு பெரும் பித்து என்றே கூறலாம். எத்தனை வழிகாட்டி நூற்களை வாங்கிப் படிப்பினும், அத்தனையும் ஆசிரியர் இல்லாத அரைகுறை முயற்சியே யாதலின், எந்த மொழியிலும் போதிய புலமை பெறவில்லை என்னும் பெருங் குறையையும் வெளிப்படையாக யான் ஒத்துக்கொண்டேயாக வேண்டும்.

தாய் மொழியாகிய தமிழ் மொழியிலக்கணத்தை இளமை தொட்டு முறையாகக் கற்றுள்ள நான், பிறமொழி யிலக்கணங்களைக் கற்கும்போது அவற்றின் கூறுகளைத் தமிழிலக்கணக் கூறுகளோடு ஒற்றுமைப்படுத்தியும் வேற்றுமைப் படுத்தியும் நோட்டமிட்டுச் சுவை காண்பது வழக்கம். இத்தகு முயற்சி வரிசையில், தமிழ்-இலத்தீன் இலக்கண ஒற்றுமையில் கண்ட இன்பம் பேரின்பமாகும். எனவே, தமிழுக்கும் இலத்தீனுக்கும் பாலம்போல் தொடர்பாக உள்ள செய்திகள் குறித்தும் நூற்கள் குறித்தும் ஆராயத் தொடங்கினேன். அந்த முயற்சியின் வடிவமே தமிழ் இலத்தீன் பாலம்' என்னும் இந்த நூலாகும்.

நூற் பொருள்:

இந்நூலின் முதல் பாகத்தில், மொழி ஒப்பியல், பன்மொழிப் பாலங்கள், பாலம் அமைத்தோர், தமிழ்-இலத்தீன் மொழி பற்றிய குறிப்புக்கள், இலத்தீன் ஒலிப்புமுறை, தமிழ்-இலத்தீன் பாலமாக உள்ள படைப்புக்கள், இலத்தீன்-தமிழ் இயற்கை ஒற்றுமைகள் முதலிய தலைப்புக்களில் மொழியியல் செய்திகள் தரப்பட்டுள்ளன. நூல் இறுதியில், தமிழ் கற்றவர்கள் இலத்தீன் சொற்களையும் இலத்தீன் கற்றவர்கள் தமிழ்ச் சொற்களையும் ஓரளவேனும் அறிந்துகொள்ளத் துணை புரியும் வகையில் 'தமிழ்-இலத்தீன் அகரவரிசை' (அகராதி) தரப்பட்டுள்ளது. இந்த அகர வரிசை இரண்டாம் பாகமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏறக் குறைய மூவாயிரத்தெண்ணூற்று முப்பது (3830) தமிழ்ச் சொற்கட்கு நேர்ப்பொருளுடைய இலத்தீன் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசை பற்றி:

தமிழும் இலத்தீனும் நன்கு கற்றவர்களே இம் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதை யான் நன்கு உணர்கிறேன். தமிழ் கற்றாற்போல் இலத்தீனைக் கல்லாத எளியேன் ஒரு பெருங் குற்றவாளியின் உணர்வுடனேயே இம்முயற்சியில் ஈடுபடலானேன். அதற்குக் காரணம் அடக்க முடியாத எனது அவாவே யாகும். உலகப் பெரும் புலவராகிய கம்பர் பெருமானே,

* "ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ".

என்னும் பாடலில், 'ஒரு பூனை பாற்கடலை முற்றும் குடிக்கப் புகுந்தாற்போல, இராமன் கதையை ஆசை பற்றி யான் அறையலுற்றேன்' - என்று அவையடக்கம் கூறியுள்ளார். இது முற்றிலும் பொய்யான அவையடக்கமாகும். ஆனால், 'தமிழ்-இலத்தீன் பாலம் என்னும் இந்நூலை அடக்க முடியாத அவாக்கொண்டு எளியேன் எழுதலானேன்' என்று ஏழையேன் கூறுவேனேயாயின் அதுதான் நூற்றுக்கு நூறு உண்மையாகும். எனவே, இலத்தீன் மொழி தொடர்பாக யான் கூறியுள்ள கருத்துக்களுள் எனக்குத் தெரியாத பிழைகளும் இருக்கலாம். அவற்றை அறிஞர் பெருமக்கள் சுட்டிக்காட்டின் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ளலாம்.

நன்றி:

இந்நூல் எழுதுவதற்குத் துணையான சில நூற்கள் புதுச்சேரி பிரெஞ்சு கலைக்கழகத்தில் (French Institute) உள்ளன. யான் அங்குப் பன்னாள் சென்று படித்துக் குறிப்பெடுத்துக்கொள்வதற்குப் பிரெஞ்சு கலைக்கழகத்தினர் அன்புடன் இசைவு தந்தனர். அங்குள்ளார் அனைவரையும் யான் என்றும் மறக்க முடியாது. கலைக்கழகத்தின் தலைவர்

---

* கம்ப ராமாயணம் - பால காண்டம் - பாயிரம் - 4.

உயர்திரு ழான் ஃபிலியோசா (Jean Filliozat) அவர்கட்கு என் பெரு நன்றி உரியது. அடுத்து, இத்தகைய உதவி புரிந்த புதுச்சேரி அரசு நூலகக் காப்பாளர்க்கும் என் நன்றி உரித்து. மற்றும், எனக்குப் பல வகையிலும் உதவி புரிந்த அறிஞர் கட்கும் நண்பர்கட்கும் மிக்க நன்றி செலுத்துகிறேன்.

பாலம் திறப்பு:

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கப் பெற்று, உலக நாடுகளில் உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பெற்று, தமிழ்மொழி 'உலகத் தமிழ்' என்னும் சிறப்புப் பெயருடன் உலகில் பரவத் தொடங்கியுள்ள இந்நாளில், யான் புதிதாகத் தமிழ்-இலத்தீன் பாலம் கட்டவில்லை; இதற்கு முன்பே தமிழ் 'உலகத் தமிழ்' ஆகும் அளவில் பன்னூட்டறிஞர்களால் கட்டிவைக்கப்பெற்றுள்ள தமிழ் இலத்தீன் பாலத்தை யான் திறந்து வைக்கிறேன்—அவ்வளவுதான்!

தமிழ் மொழியோடு பிற மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் நூற்கள் வரவேற்கப்படும் என்று தகுதி வாய்ந்த பெரியோர்களால் அறிவிக்கப்படும் இந்நாளில் சிறியேனது நூலுக்கு எத்தகைய வரவேற்பு இருக்குமென அறியேன். எனது முயற்சிக்கும் போதிய வாய்ப்பளித்து என்னை ஊக்கிப் பணி கொள்ளுமாறு தொடர்புள்ள அனைவரையும் வேண்டுகிறேன். வணக்கம்.

மொழி ஒப்பியல்
(Comparative Philology)

ஒரு பொருளோடு மற்ருெரு பொருளை ஒப்பிட்டுப் பார்க்கும் வழக்கம் உலகியலில் உண்டு. நாம் இதற்குமுன் பார்த்தறிந்தவர் போன்றுள்ள மற்ருெருவரைக் காணின், உடனே முன்னவரின் நினைவு வருகிறது. அவர்போலவே இவரும் இருக்கிருரே என்று எண்ணுகிருேம். இருவரிடையே காணப்படும் ஒற்றுமை தொடர்பாக ஒரு சிறிய ஆராய்ச்சியிலும் சிலர் ஈடுபடுவதுண்டு. இவர் என்ன - அவர் பிள்ளையா யிருப்பாரா என்று சிலரும், உடன் பிறந்தவரா யிருப்பாரா அல்லது பங்காளியா யிருப்பாரா என்று சிலரும் எண்ணக்கூடும். ஒற்றுமை யுடையவர்களுள் பெரும்பாலார் உறவினராயிருப்பர்; சிறுபாலார் ஒருவகை உறவும் இன்றியே, இயற்கையாக - தற்செயலாக ஒற்றுமை அமையப்பெற்றிருப்பர். இவ்வாறு ஒருவரோடு இன்னொருவரை ஒப்பிட்டுப் பார்ப்பது போலவே, ஒரு மொழியோடு பிற மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து ஆராயும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது.

நாம் வாழும் இவ்வுலகம் பல்வேறு பகுதிகளாய்ப் பிரிந்து கிடக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் பற்பல மொழிகள் பேசப்படுகின்றன. உலகில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பேசப்படும் மொழிகள் ஒன்றோடொன்று ஒற்றுமை யுடையனவாய் இருத்தல் இயல்பு. ஒற்றுமையுடைய மொழிகள் 'ஒரு குடும்ப மொழிகள்' என மொழியியல் அறிஞர்களால் கூறப்படுகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம், சித்திய மொழிக் குடும்பம், திராவிட மொழிக் குடும்பம், சீனோ—திபேத்திய மொழிக் குடும்பம், ஆப்பிரிக்க மொழிக் குடும்பம், அமெரிக்க மொழிக் குடும்பம் முதலியனவாகப் பல்வேறு மொழிக் குடும்பங்கள் பேசப்படுகின்றன.

ஒரு மொழியும் அதிலிருந்து பிறந்த பல மொழிகளும், ஒரு மொழியும் அதிலிருந்து பிரிந்த பல மொழிகளும், ஒரு மொழி திரிந்து வேற்று மொழிகளின் கலப்பினுல் உரு மாறிய பல மொழிகளும் ஒவ்வொரு குடும்பம் எனக் கூறப்படும். ஒரு குடும்ப மொழிகள் நாளடைவில் தமக்குள் பல்வேறு வகையான மாறுபாடுகள் பெற்றிருப்பினும், அவற்றின் அடிச்சொற்கள் பெரும்பாலும் ஒத்திருக்கும். ஒரு குடும்ப மொழிகட்குள்ளேயே, மிக மிக நெருங்கிய மொழிகளின் அடிச்சொற்கள் கட்டாயம் ஒத்திருக்கும்; நெருக்கம் குறைந்த ஒரு குடும்ப மொழிகளில் பெரும்பாலான அடிச்சொற்கள் ஒத்தில்லாவிடினும், அப்பா, அம்மா முதலிய முறைப் பெயர்

களும், ஒன்று, இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களும் இன்ன பிறவுமாவது ஒத்திருக்கும். இப்படிப் போல உள்ள சில அல்லது பல ஒற்றுமைகளைக் கொண்டு ஒரு குடும்ப மொழிகளை அடையாளங் கண்டு கொள்ளலாம். இந்த அடிப்படையிலேயே உலக மொழிகள் மேற்கூறிய பல்வேறு குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொழிகள் பல குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து மொழி ஒப்பியல் ஆராய்ச்சிகளும் விரிவும் வளர்ச்சியும் அடைந்து வருகின்றன. இந்த ஒப்பியல் மொழியாராய்ச்சி சுவைமிக்க ஒரு கலையாகவும் காட்சியளிக்கிறது.

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் சர். வில்லியம் ஜோன்சு (Sir William Jones) என்பவர் வடமொழி என்கிற சம்சுகிருதம் பயின்ருர். சம்சுகிருத மொழிக்கும் - கிரேக்கம், இலத்தீன் முதலிய ஐரோப்பிய மொழிகட்கும் இடையேயுள்ள சில ஒற்றுமைகள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் ஆராய்ந்து, சம்சுகிருதத்திற்கும் ஐரோப்பிய மொழிகட்கும் உள்ள ஒப்புமைகளை விளக்கி, அவை ஒரு குடும்ப மொழிகள் என்னும் உண்மையை கி. பி. 1786-ஆம் ஆண்டில் வெளியிட்டு 'மொழி ஒப்பியல்' அல்லது 'ஒப்பு மொழியியல்' (Comparative Philology) என்னும் புதுத்துறைக்கு வித்திட்டார். பின்னர் இவரைத் தொடர்ந்து அறிஞர் பலர் இத்துறையில் ஈடுபட்டு ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிடலாயினர்.

2462

'ராஸ்மஸ் ராஸ்க்' (Rasmus Rask) என்னும் டேனிஷ்காரர் (1787-1832) ஆரிய மொழிகள், பின்னே - ஊக்ரிக் மொழிகள், திராவிட மொழிகள் ஆகியவற்றை அரிதின் முயன்று வகைப்படுத்தினர்.

'பல்லஸ்' (P. S. Pallas) என்பவர் 1791-ஆம் ஆண்டிலும், 'அதெலுங்' (J.C. Adelung) என்பவர் 1817-ஆம் ஆண்டிலுமாக, பல மொழிகளினின்றும் சொற்களைத் தொகுத்துச் சொல் அட்டவணைகள் சில படைத்தார்கள். இவ்வாறு மற்றும் சிலர் மொழி ஒப்பியல் ஆராய்ச்சியில் கருத்து செலுத்தினர்.

இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாக, சம்சுகிருதமும் மேற்கு ஆசிய மொழிகளும் ஐரோப்பிய மொழிகளும் 'இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பம்' என்னும் பிரிவைச் சேர்ந்தவை என்னும் உண்மை நாளடைவில் தெளிவுபடலா யிற்று. ஆனால், வட இந்திய மொழிகளேயன்றித் தென்னிந்திய மொழிகளுங்கூட, சம்சுகிருதம் என்னும் ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் தவறான எண்ணம் ஐரோப்பிய மொழி நூலறிஞர் பலரிடையே நெடுங்காலம் நிலவி வந்தது.

இங்கிலேயில், நேப்பாளத்தில் நெடுநாள் இருந்த ஹாட்சன் § (Hodgson) என்னும் பெரியார், வட இந்திய — தென்னிந்திய மொழிகளிலுள்ள சொற்களைத் தொகுத்துச் சில ஆய்வுரைகளை வெளி

§ Linguistic Survey of India VOL. 1.

யிட்டு, வட இந்திய மொழிகளும் தென்னிந்திய மொழிகளும் வெவ்வேறு குடும்பத்தவை என்னும் உண்மைக்குப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே வித்திட்டார். பம்பாயில் பன்னுள் வாழ்ந்த 'பெறி' என்னும் பேரறிஞர், இந்திய மொழிகளை நன்காராய்ந்து, வட இந்திய மொழிகள் ஆரியக் குடும்பத்தையும் தென்னிந்திய மொழிகள் தமிழ்க் குடும்பத்தையும் சேர்ந்தவை என்னும் கொள்கையை வெளியிட்டார். இந்த ஆராய்ச்சி முடிவுகள் ஐரோப்பிய அறிஞர் சிலரின் உள்ளத்தை ஈர்த்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் கால்டுவெல் (Caldwell) என்னும் பெரியார் தமிழ் நாட்டில் வந்து தங்கினுர்; தென்னிந்திய மொழிகளைக் கற்றுர்; அம்மொழிகளினிடையே உள்ள இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து பதினேந்து ஆண்டுகாலம் ஓயாது உழைத்து 'திராவிட (தென்னிந்திய) மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative grammar of Dravidian Languages) என்னும் அரிய நூலை ஆக்கி 1856-ஆம் ஆண்டில் வெளியிட்டு 'ஒப்பிலக்கணம்' என்னும் புதுத்துறையைத் தொடங்கி வைத்தார். இப்புது முயற்சியை மொழி நூலறிஞர்கள் மிகவும் வியந்து பாராட்டினர். ஒப்பிலக்கணத் துறையின் தந்தையாக விளங்கிய கால்டுவெல் அவர்களின் புதுத்துறைப் படைப்பைப் பாராட்டி, இங்கிலாந்திலுள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகம் 'டாக்டர்'

என்னும் சிறப்புப் பட்டம் அளித்துச் சிறப்புப் பெற்றது.

கால்டுவெல் அவர்களின் படைப்பைக் கண்டு ஊக்கங்கொண்ட ஐரோப்பிய மொழி நூலறிஞர் சிலர், தாமும் அவர் பாதையைப் பின்பற்றி ஒப்பிலக்கண நூற்கள் படைக்கலாயினர். அறிஞர் 'ழீல் பிளோக்' (Jules Bloch) என்பவர் 'திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு' என்னும் தலைப்பில், திராவிட மொழிகளின் இலக்கணத்தை ஆராய்ந்து பிரெஞ்சு மொழியில் நூலொன்று படைத்தார். 'பாப்' (Fronz Bopp) என்பார் (*1791 1867*) இந்திய — ஐரோப்பிய மொழிகளின் ஒப்பிலக்கணம் இயற்றினர். 'புருக்மன்' (Brugmann) என்பவர் (*1849—1919*) இந்திய—ஐரோப்பிய மொழிகட்குப் பொது ஒப்பிலக்கணம் படைத்தார். மற்றும், கோல் புருக், கிரீம், மாக்ஸ் முல்லர், விட்னி முதலிய அறிஞர் சிலரும் இத்துறையில் ஈடுபட்டுப் பணியாற்றினர். இவ்வாறு இவர்கள் இந்திய — ஐரோப்பிய மொழிகளை ஆராய, 'பிளீக்' (Bleek) என்பவரோ, தென்னாப்பிரிக்க மொழிகளை ஆராய்ந்து அவற்றிடையே உள்ள ஒப்பிலக்கணக் கூறுகளைத் துருவியெடுத்துத் தந்து 'தென்னாப்பிரிக்க மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative Grammar of the South African Languages) என்னும் நூலை வெளியிட்டார். இப்படியாக 'ஒப்பு மொழியியல்' (Comparative Philology) என்னும் கலைக்

குள்ளேயே 'ஒப்பிலக்கணம்' என்னும் துறையும் ஒரு பிரிவினதாய் வளர்ந்து வரலாயிற்று.

கால்டுவெல் அவர்களின் படைப்பை அடிப் படையாகக் கொண்டு, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூற்கள் பல தோன்றலாயின. இந்தத் துறையில் தேவநேயப் பாவாணர், வேங்கடராசுலு ரெட்டியார் முதலிய அறிஞர்கள் பல நூற்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளனர். இன்னும் இந்தத் துறை ஓர் எல்லையில் நின்றுவிடாமல் வளர்ந்து கொண்டே வருகிறது.

இவ்வாறு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழி கட்குள்ளே உள்ள ஒப்புமைகளை ஆராய்ந்து வெளி யிடுவது ஒருபுற மிருக்க, வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த மொழிகட்குள்ளே உள்ள ஒப்புமைகளை ஆராயும் முயற்சியிலும் அறிஞர் சிலர் ஈடுபடலா யினர். கால்டுவெல் அவர்களேகூட, தென்னிந்தி யாவில் பேசப்படும் திராவிடக் குடும்ப மொழி கட்கும், ஆசிய நாடுகளில் பேசப்படும் சித்தியக் குடும்ப மொழிகட்கும் இடையே ஒற்றுமை யிருப்ப தாக ஆய்ந்து தெரிவித்துள்ளார். இந்திய மொழி களை ஆராய்ந்த கிரையர்சன் (Dr. Grierson) போன்றோர் சிலர் திராவிடக் குடும்ப மொழிகளை வேறு உலகக் குடும்ப மொழிகளோடு ஒத்திட்டுக் கூறத் துணியாவிடினும், இலங்கைப் பேரறிஞரான ஞானப்பிரகாச அடிகளார் (Rev. S. Gnana Prakasar, O. M. I.), ஆக்சுபோர்டு, பல்கலைக்கழகப் பேராசிரி யர் டி. பர்ரோ (T. Burrow), கலிபோர்னியாப்

பல்கலைக் கழகப் பேராசிரியர் எம். பி. ஏமெனோ (M. B. Emeneau) போன்றோர் சிலர் திராவிட மொழிகளை உலக மொழிகளோடு பிணைத்துப் பேசியுள்ளனர்.

ஞானப்பிரகாச அடிகளார் 1938-ஆம் ஆண்டளவில், 'சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி' (An Etymological And Comparative Lexicon of the Tamil Language) என்னும் அகராதி யொன்று படைத்தார். இதில், சொற்பிறப்பும் மொழி ஒப்பியலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லாலும் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறப்பட்டிருக்கும் இவ்வகராதியில், எடுத்துக்கொண்ட ஒரு சொல், எந்த வேரிலிருந்து எப்படிப் பிறந்து உருவாகிறது என்பது காட்டப்பட்டிருப்பதோடு, அத்தமிழ்ச் சொல் மற்ற இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் ஒத்த நிலையில் வழங்கப்படுகிற அவ்வம் மொழியுருவங்களும் (Indexes of Words Quoted from Indo-European Languages) கொடுக்கப்பட்டிருப்பது, இவ்வகராதிக்கு மட்டுமன்றித் தமிழ் மொழிக்கும் மாபெருஞ் சிறப்பளிக்கிறது. ஞானப்பிரகாச அடிகளார், நூலின் முன்னுரையில் பின்வரும் கருத்துக்களைத் துணிந்து வெளியிட்டுள்ளார்:

"தமிழ்ச் சொற்கள் முதல்முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை;

தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்கள், மக்களினத்தின் பொதுப் பண்பைக்குறிக்கும் அடிப் படையாகும்; எனவே, கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவங்கொண்டன என்பது புலப்படும்''.

இவ்வாறு ஞானப்பிரகாச அடிகளார், திரா விடக் குடும்பத்தின் தலைமை மொழியாகிய தமிழோடு உலக மொழிகளை முடிச்சுப் போட் டுள்ளார். பேராசிரியர்கள் பர்ரோ, ஏமெனோ ஆகிய இருவரும் இணைந்து 'A Dravidian Etymological Dictionary' என்னும் அகராதியொன்றை 1961-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளனர். இந்த அகராதியில் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய பத்தொன்பது திராவிடக் குடும்ப மொழிகளிலுள்ள ஒத்த உருவமுடைய சொற்கள் சிலவற்றை ரோமன் (ஆங்கில) எழுத்தால் எழுதி, அவற்றிற்கு ஆங்கிலத் தில் பொருள் கூறியுள்ளனர். இந்நூலில் திராவிட மொழிகளுக்குள் தமிழே முதன்மை பெற்றுள்ளது. முதலில் ஒரு தமிழ்ச் சொல் நிறுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளது; அதனையடுத்து அதே பத்தியில் அந்தத் தமிழ்ச் சொல்லோடு ஏறக்குறைய ஒத்த தோற்றமுடைய வேறு சில திராவிட மொழி களின் சொற்கள் நிறுத்தப்பட்டுப் பொருள் கூறப் பட்டுள்ளன. சில சொற்கட்குப் பொருள் கூறு மிடத்து, திராவிட மொழிகளிலுள்ள ஒத்த உருவ முடைய சொற்களேயன்றி, திராவிட மொழிகளி லிருந்து இந்தோ - ஆரியன் மொழிகளிலும்

ஐரோப்பிய மொழிகளிலும் சென்று கலந்துள்ள சில சொற்களும் உடன் கொடுக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன. இந்த அகராதியில், பத்தொன்பது திராவிட மொழிகளும், வட இந்தியா, நேபாளம், சிலோன் ஆகிய நாடுகளில் வழங்கும் பதினைந்து இந்தோ — ஆரியன் மொழிகளும், அரபு, பாரசீகம், பலுச்சி ஆகிய ஆசிய மொழிகளும், கிரீக், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய ஐரோப்பிய மொழிகளும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது

இவ்வாறு திராவிடக் குடும்ப மொழிகட்கும் வேறு உலகக் குடும்ப மொழிகட்கும் இடையே பாலம் அமைக்க முயன்றனர் பலர். இந்த முயற்சியின் தொடர்ச்சியாகவே, 'தமிழ் இலத்தீன் பாலம்' என்னும் இந்நூலும் எழுகிறது. ஆனால், பிறர் அமைத்துள்ள மொழிப் பாலங்களினும், தமிழ் இலத்தீன் பாலத்தின் அமைப்பு வேறு வகையானது.

தமிழுக்குப் பல மொழிகளோடு பாலங்கள்

இந்திய மொழிகள் சிலவற்ரோடும் ஐரோப்பிய மொழிகள் சிலவற்ரோடும் தமிழுக்குப் பாலங்கள் பல அமைத்துள்ளனர் அறிஞர் பலர். இந்தப் பாலங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமிழ் நூற்களைப் பிற மொழிகளிலும் பிற மொழி நூற்களைத் தமிழிலும் மொழிபெயர்த்தல் ஒருவகை; தமிழிலக்கணத்தைப் பிற மொழிகளிலும் பிற மொழியிலக்கணங்களைத் தமிழிலும் இயற்றுதல் இன்னொரு வகை; தமிழ்ச் சொற்கட்குப் பிற மொழிகளில் பொருள் கூறியும் பிற மொழிச் சொற்கட்குத் தமிழில் பொருள் கூறியும் அகராதி ஆக்குதல் மற்று மொருவகை. இம்மூன்று வகைகளில் உலக மொழிகள் பலவற்ரோடு தமிழுக்குப் பாலங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக மொழி பெயர்ப்புப் பாலங்களை எடுத்துக் கொள்ளின் அவற்றிற்கு அளவேயில்லை. தமிழிலுள்ள திருக்குறள் நூல் நூற்றுக்கு மேற் பட்ட உலக மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது உலகறிந்த உண்மை. மற்றும், நாலடியார், சிலப்பதிகாரம், திருவாசகம், கம்பராமாயணம், புறப்பொருள் வெண்பாமாலை, தாயுமானவர் பாடல், பஞ்சதந்திரக்கதை, கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருப்பாவை, ஆத்திசூடி - கொன்றை

வேந்தன் - மூதுரை - நல்வழி - நன்னெறி முதலிய நீதி நூற்கள், பரிபாடல் முதலிய பல துறை நூற்கள் உலக மொழிகள் சிலவற்றில் பெயர்க்கப் பட்டுள்ளன. இம்மொழிகளுள், வடமொழி, இந்தி, இலத்தீன், பிரெஞ்சு, செர்மனி, ஆங்கிலம், ரழ்சியன் முதலிய மொழிகள் குறிப்பிடத்தக்கன.

அடுத்து இலக்கண நூற்கட்கு வரின், — தமிழ் இலக்கணத்தை அறிந்துகொள்ள ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் முதலிய மொழிகளில் வழி காட்டும் துணை நூற்கள் (Guides) பல உண்டு. அதே போல, வடமொழி, இந்தி, தெலுங்கு, மலாய், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் முதலிய மொழி களின் இலக்கணங்களைக் கற்றுக்கொள்ளத் தமிழ் மொழியில் துணை நூற்கள் சில உண்டு.

ஆங்கிலம் நாட்டை யாண்டதாலும் உலக மொழியாயிருப்பதாலும் தமிழ் மொழியைப் பற்றியும் இலக்கண இலக்கியங்களைப் பற்றியும் பல்வேறு கலைகளைப் பற்றியும் ஆங்கிலத்தில் எண்ணற்ற நூற்கள் எழுந்திருப்பதில் வியப் பொன்றுமில்லை. அடுத்தபடியாக, தமிழகத்தின் ஒரு பகுதியாகிய புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரர் ஆண்டதால், தமிழிலக்கணம் பற்றிப் பிரெஞ்சு மொழியிலும் பல நூற்கள் இயற்றப்பட்டுள்ளன. துய்புய் (Dupuis), மூசே (Mousset), ஷெனோ (chenot), ழீல் பிளோக் (Jules Bloch), சொன்னேரா (Sonnerat), பெரான் (Perrin), லஃப்லோத் (La Flotte), பியர் சுயோ (Pierre suau),

புளேஸ் (Baulez), வான்சான் ழுலியான் (Vinson Julien), லாப் (Lap), மெயில் (P. Meile), ழான் ஃபிலியோசா (Jean Filliozat) முதலிய பிரெஞ்சுக்காரப் பேரறிஞர்கள் தமிழ்மொழி இலக்கணம் குறித்துப் பிரெஞ்சு மொழியில் நூற்கள் எழுதித் தமிழ் — பிரெஞ்சுப் பாலம் அமைத்துள்ளனர். இத்தாலியராகிய பெஸ்கி (Beschi) எனப்படும் வீரமாமுனிவர் முதலியோர் தமிழிலக்கணம் பற்றி இலத்தீனிலும் இலத்தீன் இலக்கணம் பற்றித் தமிழிலும் நூற்கள் சில இயற்றியுள்ளனர்.

மூன்றாவதாக அகராதித் துறைக்கு வருவோம்: ஒரு மொழிக்கும் இன்னொரு மொழிக்குமிடையே சிறந்த பாலமாக இருப்பது அகராதிதான். தமிழோடு பிறமொழிகள் பிணைந்த அகராதிகள் பல உண்டு. தமிழ்—சம்சுகிருதம், சம்சுகிருதம்—தமிழ், கிரந்தம்—தமிழ், தமிழ்—இந்தி, இந்தி—தமிழ், தமிழ்—தெலுங்கு—மராத்தி முதலியனவாகத் தமிழ் மொழியோடு இந்திய மொழிகள் பிணைந்த அகராதிகள் பல இருப்பதன்றி, கே. சதாசிவம் பிள்ளை என்பவரால் தமிழ்-மலாய் அகராதியும் ஆக்கப்பட்டுள்ளது. மற்றும், இலத்தீன், பிரெஞ்சு, போர்த்துகீசியம், ஆங்கிலம், ரழ்சியன் முதலிய ஐரோப்பிய மொழிகளுடன் தமிழ் பிணைத்து ஆக்கப்பட்டுள்ள அகராதிகள் பல உள. ஐரோப்பியக் கிறித்துவத் துறவியர்களாகிய வீரமாமுனிவர் (பெஸ்கி), முசே, துய்புய், சூரி முதலியோர்

தமிழ்—இலத்தீன், இலத்தீன்—தமிழ் அகராதிகள் தொகுத்துள்ளனர். வீரமாமுனிவர், மூசே, தூய்புய், பிலின் (Blin) முதலியோர் தமிழ்—பிரெஞ்சு, பிரெஞ்சு—தமிழ் அகராதிகள் படைத்துள்ளனர். 'ஆந்தம் தெ ப்ரோயன்சா' (Fr. Antem de Proenca), வீரமாமுனிவர் முதலியோர் தமிழ்—போர்த்துகீசியம், போர்த்துகீசியம்—தமிழ் அகராதிகள் ஆக்கியுள்ளனர். தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ் அகராதிகள் தமிழர்களாலும் ஐரோப்பிய—அமெரிக்கர்களாலும் மிக்க எண்ணிக்கையில் ஆக்கப் பட்டுள்ளன. இத்துறையில், பெஸ்கி (Beschi), ஃபாபிரிசியஸ் (Fabricius), கிறிஸ்தியன் ப்ரெய்தாப்ட் (Christian Breithaupt), நைட் (J. Knight), ராட்லர் (Rottler), வின்சுலோ (Winslow), ஸ்பால்டிங் (Spaulding), பெர்சிவல் (Percival), ஜி. யு. போப் (G. U. Pope), பர்ரோ (T. Burrow), ஏமெனோ (M. B. Emeneau) முதலிய வெள்ளையர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். மற்றும் இத்துறையில் அரும்பாடுபட்டு உழைத்துள்ள தமிழர்கள் அளவற்றவராவர். மேலும், தமிழ்—ரழ்சியன், ரழ்சியன்—தமிழ் அகராதிகளை அ. மொ. பியாதிகோர்ஸ்கி (A. M. Piathikorski), லெ. கே. ரூதின் (L. K. Routhin), மி. செ. அந்திரோனவ் (M. S. Anthironav), அ. ஷ. இப்ரகிமவ் (A. Sha. Ibrahimav), நீ. நி. யுகானவா (N. N. Ukanava) ஆகியோர் அரிதின் முயன்று அமைத்துள்ளனர்.

இவ்வாறாக, தமிழுக்குப் பல மொழிகளோடு பல்வேறுவகைப் பாலங்கள் அறிஞர் பலரால் அமைக்கப்பெற்றுள்ளன. இந்நூலில் சொல்லவந்த தமிழ் - இலத்தீன் பாலத்தின் அருமை பெருமையைப் பிறமொழிப் பாலங்களோடு ஒத்திட்டு ஆராய்பவர்க்கு உதவுவதற்காகவே, மேலுள்ள செய்திகள் இந்நூலில் குறிப்புச் சுருக்கமாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.

தமிழ்—இலத்தீன் பாலம்

ஆங்கில மொழியும் பிரெஞ்சு மொழியும் புதுச்சேரி—காரைக்கால் உட்பட்ட தமிழகத்தை ஆண்டதால் இம்மொழிகளோடு தமிழுக்குப் பாலங்கள் ஏற்பட்டதில் அவ்வளவாக வியப்பொன்றுமில்லை. தமிழகத்தோடு எந்தத் தொடர்பும் பெற்றிராத இலத்தீன் மொழியோடு தமிழுக்குப் பாலம் ஏற்பட்டதுதான் நயத்தற்கும் வியத்தற்கும் உரியது. வட இந்திய மொழிகளின் முதல் மொழியும் இந்தியாவில் சமய—சடங்குத் துறைகளில் ஆட்சி செலுத்தும் மொழியுமாகிய வடமொழி எனப்படும் சம்சுகிருதம்போல், ஐரோப்பாவில் பல மொழிகட்கு முதல் மொழியாகவும், சமயத்துறையில் ஆட்சி செலுத்தும் மொழியாகவும் திகழ்வது இலத்தீன் மொழியாகும்.

பொதுவாக - மொழியினை ஒரு கருவிப்பாடம் (Tool Subject) என்று சொல்வது மரபு. எல்லாத் துறைகளையும்—கலைகளையும் மொழியின் வாயிலாகத் தானே அறிந்துகொள்ள முடியும்? மொழிகளுள்ளும், பலராலும் பின்பற்றப்படும் ஒரு மொழியினை, கருத்துக்கள் வரவும் போகவும் உதவும் ஒரு பெரு வாயிலாகக் கூறலாம். இந்த அடிப்படையில் நோக்குங்கால் இலத்தீன் மொழியின் இன்றியமையாமை நன்கு புலப்படும். இம்மொழி ஐரோப்பிய மொழிகள் பலவற்றின் முதல் மொழியாக இருப்பத

ஞலும் அரசியல்-சட்ட ஆட்சி மொழியாக இருந்தத ஞலும் சமயச்சடங்கு மொழியாக இருப்பதஞலும், பண்டு ஐரோப்பாவில் பரவலாகப் பல நாடுகளிலும் இந்த மொழி கற்கப்பட்டு வந்தது; இன்றும் ஓரளவு பலராலும் கற்கப்படுகிறது. எனவே, தமிழ் மொழியைப்பற்றி இலத்தீன் மொழியில் எழுதிஞல், பல்வேறு ஐரோப்பிய நாட்டினரும் தமிழைப்பற்றி அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படும். மேலும், இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ள தமிழிலக் கணத்தை, ஐரோப்பியர் பலரும் தத்தம் மொழி களில் பெயர்த்துக்கொள்ளவும் முடியும். இது நடைபெற்றும் இருக்கிறது பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதிய தமிழிலக் கணம் ஆங்கிலம், பிரெஞ்சு உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பெற்றுப் படிக்கப்பட்டது. தமிழகத்தை யாண்ட ஆங்கிலமும் பிரெஞ்சுங்கூட, இலத்தீனிலிருந்து தமிழிலக்கணத்தைத் தாம் பெற் றன என்ருல், இலத்தீன் மொழியின் இன்றியமை யாச் சிறப்பும், அம்மொழியில் தமிழிலக்கணம் எழுதப்பெற்ற அருமை பெருமையும் இனிது புலஞகுமே!

தமிழ் மொழி குறித்தும் இலக்கண விளக்கங் குறித்தும் இலத்தீனில் பல நூல்கள் எழுதப்பட் டிருப்பது போலவே, இலத்தீன் மொழி-இலக்கணம் பற்றித் தமிழிலும் சில நூல்கள் எழுதப்பட்டுத் தமிழ்-இலத்தின், இலத்தீன் தமிழ்ப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்-இலத்தீன் பாலம் அமைத்தவர்களுள் வீரமாமுனிவர், மூசே, துய்புய், குரி ஆகிய வெள்ளைத் துறவியர் நால்வரும் இன்றியமையாதவராவர். இவருள்ளும் தலையாயவர் வீரமாமுனிவராவார். மற்றும் இந்த வரிசையில், டாக்டர். கிரௌவல், சீகன்பால்க் எனனும் செர்மானிய அறிஞர் இருவரையும் மறந்து விடுவதற்கில்லை.

இனி, இந்நூலில் பேச எடுத்துக்கொண்ட தமிழ் மொழி பற்றியும், இலத்தீன் மொழி பற்றியும், தமிழ்-இலத்தீன் பாலம் அமைத்த அறிஞர்கள் பற்றியும், பாலமாக அந்த அறிஞர்கள் படைத்த படைப்புக்கள் பற்றியுமான செய்திகள் சிலவற்றை முறையே காண்பாம்.

தமிழ் மொழி

தமிழ் மக்களால் பேசப்பெறும் மொழி தமிழ் மொழி; தென்னிந்தியாவில் வடக்கே திருவேங்கடம், தெற்கே கன்னியாகுமரி, மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்கக்கடல் ஆகிய எல்லைக்கு உட்பட்ட நிலப்பகுதியில் வழங்கப்பெறும் மொழி தமிழ் மொழி; இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, பீஜித்தீவு, மோரீசுத் தீவு தென்னாப்பிரிக்காமுதலிய வெளிநாடுகள் பலவற்றில் பன்னூருயிரவரால் பேசப்படும் மொழி தமிழ் மொழி; பல்வேறு வெளி நாட்டவரால் பயிலப்படும் மொழி தமிழ் மொழி.

கி. மு. இத்தனையாவது நூற்றாண்டில் தோன்றியது-இன்ன மொழியிலிருந்து தோன்றியது–இன்ன மொழியின் எழுத்தைப் பெற்றிருப்பது-என்றெல்லாம் சொல்ல முடியாதபடி, படைப்புக் காலத்திலேயே தோன்றிய மொழி தமிழ் மொழி; தானாகவே தோன்றிய முதல் மொழி - மூத்த மொழி தமிழ் மொழி; சொந்த எழுத்துக்களை உடைய மொழி தமிழ்மொழி; உலகமொழிகள் பலவற்றிற்கும் அடிப்படையாக உள்ள வேர்ச்சொற்களை உடையது என ஆராய்ச்சியாளரால் பாராட்டப்பெறும் மொழி தமிழ் மொழி. வேறு மொழிகளின் துணை வேண்டப்படாமலேயே தானாகவே தனித்தியங்க வல்ல மொழி தமிழ் மொழி. பேச்சு வழக்கு, எழுத்து

வழக்கு ஆகிய இரண்டிலும் அழியாது நின்று நிலைத்து நீடித்து மேன்மேலும் வளர்ந்துகொண்டிருக்கும் மொழி தமிழ் மொழி. இனிமை என்னும் பொருளுடைய 'தமிழ்' என்னும் பெயரைப் பெற்று, பெயருக்கேற்றாற்போல் இனிமையுடையதாய் விளங்கும் மொழி தமிழ் மொழி.

திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மை மொழி – மூத்த மொழி தமிழ் மொழி; மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, குடகு, தூதம் கோடம் கொலாமி, நாய்க்கி, பர்சி, கடபா, கோந்த், கோண்டா, கூ, கூய், குருக், மால்டோ, பிராகுய், கவர் மொழி, உராவன் மொழி முதலிய திராவிட மொழிகளின் தலைமை மொழி - தாய்மை மொழி தமிழ் மொழி. தன்னிடமிருந்து பல மொழிகள் கிளைத்துப் பிறந்திருப்பினும், தான் ஆண்டால் மூத்திருப்பினும், என்றும் அழியாத - மாறாத இளமைப்பொலிவுடன் நின்று நிலவும் கன்னி மொழி தமிழ் மொழி.

எழுத்து வளமும் இலக்கிய இலக்கண வளமும் நிறைந்த மொழி தமிழ் மொழி; இந்திய மொழிகட்கெல்லாம் எழுத்தமைப்பைக் கற்றுக்கொடுத்த மொழி தமிழ் மொழி. இலத்தீன் முதலிய ஐரோப்பிய மொழிகளில் உயிர்மெய் எழுத்து இல்லை; சம்சுகிருத மொழியிலும் அதன் வழிமொழிகளான வட இந்திய மொழிகளிலும் உயிர்மெய் எழுத்து உண்டு: சம்சுகிருதமோ, ஐரோப்பிய மொழிகளைப்

போல இந்தோ-ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பதை, இந்நூலில் வேறோர் இடத்திலுள்ள இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்ப மரபுவழி அட்டவணையால் உணரலாம்; இங்ஙிலையில், சம்சுகிருதத்திலும் அதன் வழி மொழிகளிலும் உயிர்மெய்யெழுத்து உண்டென்றால், அது, தமிழ் மொழியைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகத் தானே இருக்கவேண்டும்? எனவே, இந்திய மொழிகட்கெல்லாம் எழுத்து வளம் ஈந்த மொழி தமிழ் மொழியாகும்.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே அதாவது கி. மு. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே அகத்தியம், தொல்காப்பியம் முதலிய பேரிலக்கண நூற்களைப் பெற்ற மொழி தமிழ் மொழி; பல துறைகளைச் சார்ந்த பழைய கலை நூற்கள் பலவற்றை இழந்துவிட்டிருப்பினும், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, சங்க இலக்கியங்கள் எனப்படும் சிறந்த இலக்கிய நூற்கள் பலவற்றைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழி; கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக - இற்றை நாள்வரை, நூற்றாண்டு - நூற்றாண்டுதோறும் தொடர்ந்து பல்வேறு இலக்கிய இலக்கணங்களையும் பல துறைக் கலை நூற்களையும் பெற்றுத் திகழ்ந்துவரும் மொழி தமிழ் மொழி. சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டுமெனின், உலகப் பேரிலக்கியமாகத் திருக்குறளை வையகத்துக்குத் தந்து வான்புகழ் கொண்ட உயர்தனிச் செம்மொழி தமிழ் மொழியாகும்.

இலத்தீன் மொழி

தமிழில் 'இலத்தீன்' என அழைக்கப்படும் இம் மொழி, ஆங்கிலத்தில் 'Latin' என எழுதப்பட்டு 'லாட்டின்' என ஒலிக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியில் 'Latin' எனவே எழுதப்பட்டு 'லத்தா(ன்)' என்று ஒலிக்கப்படுகிறது. ஆனால், தன் (இலத்தீன்) மொழியிலோ, 'Latino' என எழுதப்பட்டு 'லத்திநோ' என்று ஒலிக்கப்படுகிறது.

இலத்தீன் உலகத்தின் பழைய மொழிகளில் ஒன்று; இந்தோ – ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தது. பண்டு இத்தாலி நாட்டில் வழங்கிய மொழிகளுள் சிறந்தவை சில; அவற்றுள் தலையாயது இலத்தீன். 'டைபர்' (Tyber) ஆற்றின் கரைப் பகுதிகளிலும் 'ரோம்' நகரத்திலும் வாழ்ந்த 'Latium' என்னும் மக்கள் பேசிய மொழியே லத்தீன். Latium என்பதை ஆங்கிலத்தில் 'லேஷியம்' என ஒலித்தாலும், இலத்தீன் மொழியில் 'லத்தியொம்' என ஒலிக்கின்றனர்; எனவே, லத்தியொம் மக்களால் பேசப்பட்ட மொழி லத்திநோ மொழியாயிற்று.

கி. மு. 90-ஆம் ஆண்டளவில் ரோம் நகர மன்னர் வட்டாரத்திற்கும் இத்தாலி நாட்டு மக்கள் குழுவிற்குமிடையே போர் மூண்டது 'சல்லா' (Sulla) என்னும் படைத்தலைவன் மன்னர்க்கு வெற்றி தேடித்தந்து இத்தாலி நாடு முழுதும் மன்னராட்சி வலுப்படுவதற்கு வழிசெய்தான். அன்று தொட்டு

இத்தாலி நாடு முழுதும் இலத்தீன் மொழி ஆட்சி புரியத் தொடங்கியது. ரோம் அரசு வளர வளர இலத்தீனும் வளங்கொழித்து வளர்ந்தது. ரோமப் பேரரசு ஐரோப்பாவில் மேன்மேலும் பல நாடுகளை வென்று அங்கெல்லாம் தன் ஆணையுடன் இலத்தீன் மொழியையும் பரப்பி நிலைபெறச் செய்தது. ஆங்கு வழங்கிய மொழிகளின் இடத்தை, நூல் வழக்கிலே யன்றிப் பேச்சு வழக்கிலும் இலத்தீன் பிடித்துக் கொண்டது. நாளடைவில் இம்மொழி சிதைந்து பல்வேறு மொழியுருவம் பெற்றது. இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகல், ருமேனியன் முதலிய மொழிகள் இலத்தீனின் சிதைவு மொழி களே. அதனால் இம்மொழிகளை 'ரோமான்சு' (Romance) அதாவது ரோமன் மொழிகள் எனல் மரபு. அமெரிக்கக் கண்டத்தில் பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகல் ஆகிய மொழிகள் வழங் கப்படும் ஆர்ஜெண்டினா, பிரேசில், கொலம்பியா, குவாட்டமாலா முதலிய இருபது நாடுகள் 'இலத் தீன் அமெரிக்கா' என அழைக்கப்படுவஃது ஈண்டு ஒப்புநோக்கற்பாலது.

கி. மு. முதல் நூற்றாண்டில் மிகவும் செழிப்புற் றிருந்த இலத்தீனின் செல்வாக்கு, 'அகஸ்ட்டஸ்' (Augustus) என்னும் ரோமவேந்தன் இறுதி யெய் தும்வரை - அதாவது கி. பி. 14-ஆம் ஆண்டுவரை நிலைத்திருந்தது. பின்னர் ரோமப் பேரரசு வீழ்ச்சி யடைந்ததும் இலத்தீனின் செல்வாக்கும் குறைய, அது பல்வேறு மொழிகளாகச் சிதைந்து மாறியது.

தொடக்கத்தில் இலத்தீன் மொழியின் இலக்கிய வழக்கும் மக்களின் பேச்சு வழக்கும் ஒன்றுகவே இருந்தன. நாளடைவில் பேச்சு வழக்கில் மாறுதல் ஏற்பட்டதால், 'ரோமன் மொழி' (Lingua Romana) என்னும் பெயரில் எளிய மக்கள்மொழி யொன்று உருவாயிற்று. இது வளர வளர, பழைய இலக்கிய இலத்தீன் மொழி, பேச்சு வழக்கிலிருக்கும் பெருமையை யிழந்து ஏட்டளவில் நின்றுவிட்டது.


இப்பொழுது ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகள் எழுதப்படும் A முதல் Z வரை யுள்ள இருபத்தாறு எழுத்துக்களையும் 'ரோமன் எழுத்துக்கள்' (Roman Letters) எனல் மரபு. இந்த இருபத்தாறனுள்ளும் J, U, W என்னும் மூன்று எழுத்துக்களும் பண்டு இலத்தீன் மொழியில் இருக்கவில்லை; இப்பொழுதுங்கூட W என்னும் எழுத்து இலத்தீனில் இல்லை, இலத்தீன் நெடுங்கணக்கு (எழுத்துக்கள்), கிரேக்க மொழியைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கிரேக்கம் இலத்தீனினும் பழமையானது.

இலத்தீன் மொழியானது, தமிழ், சம்சுகிருதம், கிரேக்கம் ஆகிய மொழிகளைப்போல் மிக மிகப் பழமையானது என்று சொல்லமுடியாதாயினும், வேறு எத்தனையோ உலக மொழிகளை நோக்க மிகப் பழமையானது என்று கூறமுடியும். கி. மு. மூன்றும் நூற்றுண்டு தொடங்கி கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை சிறந்த அறிஞர் பலரால் சிறப்பு


மிக்க நூற்கள் பல இலத்தீனில் இயற்றப்பெற்றுள்ளன. அவர்களுள் ஒரு சிலரின் பெயர்கள் காலத்துடன் வருமாறு:—

லெவியஸ் ஆண்டிரானிக்ஸ் (Levies Andronicus) - கி. மு. 284 - கி. மு. 204; நேயஸ் நேவியஸ் (Gnaeus Naevius) - கி. மு. 270 - கி. மு. 199; குயின்டஸ் என்னியஸ் (Quintus Ennius) - கி. மு. 239 - கி. மு. 169; மாக்சியஸ் பிளோட்டஸ் (Maccius Plautus) - கி. மு. 254 – கி. மு. 185; டெரன்ஷியஸ் (Terentias) -கி. மு. 185 - கி. மு. 159; பார்ஷியஸ் காட்டோ (Portius Cato) - கி. மு. 234 - கி. மு. 149; மார்க்கஸ் டல்லியஸ் சிசரோ (Marcus Tullius Cicero) - கி. மு. 106 - கி. மு. 43; கார்னிலியஸ் நெப்பாஸ் (Cornelius Nepos) - கி. மு. 100 – கி. மு. 25; லிவி (Livi) - கி. மு. 59 - கி. பி. 17; வர்ஜில் என்னும் பப்ளியஸ் வர்ஜிலியஸ் மாரோ (Publius Virgilius Maro) - கி. மு. 70 - கி. பி. 19; ஹொராஷியஸ் ஃபிளாக்கஸ் (Horatius Flaccus) - கி. மு. 65 - கி. பி. 8; ஆவிட் (Ovid) - கி. மு. 43 - கி. பி. 18; பிளினி (Pliny) - கி. பி. 23 - 79; ஜூவெனல் (Juvenal) - கி. பி. 60 - 140.

மேற்கூறிய அறிஞர்களுள் குயின்டஸ் என்னியஸ், மாக்சியஸ் பிளோட்டஸ், டெரன்ஷியஸ், வர்ஜில் ஆகியோர் காவியங்களும் நாடகங்களும் படைப்பதில் தலைசிறந்து விளங்கினர். பார்ஷியஸ் காட்டோ, மார்க்கஸ் டல்லியஸ் சிசரோ ஆகியோரை உரைநடை மன்னர்கள் எனலாம்.


இந்தோ - ஐரோப்பிய
கெண்டும் கிளை
கெல்ட்டிக்
கேலிக்
ஐரிஷ்
வெல்ஷ்
டியூட்டானிக் (ஜெர்மானியம்)
காத்தியம்
ஜெர்மன்
நார்வீஜியன்
சுவீடிஷ்
டேனிஷ்
டச்சு
பிளெமிஷ்
(பழம்) சாக்சன்
ஆங்கிலம்
இத்தாலியம்
(பழம்) - இலத்தீன்
இத்தாலியன்
பிரெஞ்சு
ஸ்பானியம்
போர்ச்சு-கீசியம்
கிரேக்கம்
ஹிட்டைட்டு
தொக்கா-ரியன்

மொழிக் குடும்ப மரபுவழி



கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலுமான ஐந்நூறாண்டு கால அளவில் சிறந்த படைப்புக்கள் பலவற்றைப் பெற்றுச் செழித்து வளர்ந்த இலத்தீன், பின்னர்-பின்னர், அரசியல் செல்வாக்கும் பேச்சு வழக்கும் இழந்தமையால் போதிய மேல்வளர்ச்சியின்றி, கிறித்தவர்களின் சமயச் சடங்குமொழி என்ற அளவில் நின்றுவிட்டது. இருப்பினும், பழம் பெருஞ் சிறப்புமிக்க மொழியாதலின், ஐரோப்பியப் பள்ளிகளில் பரவலாகப் பலராலும் படிக்கப்பட்டு வந்தது; இன்றும் ஓரளவு படிக்கப்படுகிறது. எவர் படித்தாலும் படிக்காவிட்டாலும், கிறித்தவ சமயத் துறவியர்க்குப் பயிற்சிப் பள்ளிகளில் இலத்தீன் மொழி பயிற்றப்படுகிறது. பேச்சு வழக்கற்று நூல் வழக்கோடிருக்கின்ற பழம் பெரு மொழிகளின் பட்டியலில் தானும் ஒன்றாக இடம் பெற்றிருப்பதுதான் இன்றைய இலத்தீன் மொழியின் நிலைமையாகும்.

எடுத்துக்கொண்டுள்ள ஆராய்ச்சிக்கு, பின்னர் உதவுவதற்காக, இலத்தீன் மொழி சார்ந்துள்ள இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்ப மரவுவழிப் பட்டியல் இங்கே (பக்கம்: 36-37) தரப்பட்டுள்ளது.

இலத்தீன் ஒலிப்பு முறை

தமிழ் - இலத்தீன் பாலத்தில் நடப்பவர்கள், இலத்தீன் எழுத்துக்களையும் சொற்களையும் ஒலிக்க வேண்டிய முறையினையும் அறிந்துகொள்ள வேண்டும். இலத்தீன் சொற்கள் இப்போது பலவிதமாய் ஒலிக்கப்படுவதாகத் தெரிகிறது. இலத்தீனைச் சிலர் ஆங்கிலம் போல் ஒலிக்கின்றனர்; சிலர் இத்தாலி மொழிபோல் ஒலிக்கின்றனர்; பழமையில் ஊறிய வர்கள் - பழமையை நன்கு அறிந்தவர்கள் பழைய இலத்தீன் ஒலிப்பு முறையில் ஒலிக்கின்றனர். இலத்தீனுக்குரிய அந்தப் பழைய ஒலிப்பு முறை வருமாறு:-

இலத்தீன் எழுத்துக்களைத் தனித்தனியாக ஒலிக்கும்போது பின்வருமாறு ஒலிக்கவேண்டும்:

A—அ	J—யி	R—ஏர்
B—பெ	K—க்க	S - எஸ்
C—செ	L—எல்	T—த்தே
D—தெ	M—எம்	U—உ
E—எ	N—என்	V—வெ
F—எஃப்	O—ஒ	X—இக்ஸ்
G—ழெ	P—ப்பெ	Y—இகிறெக்
H—அஷ்	Q—க்கு	Z—செத்
I—இ		

குறிப்பு:- ஆங்கிலத்தில் B—P, D—T என்பவற்றை எவ்வளவு வேற்றுமையான ஒலியில் ஒலிப் போமோ—அவ்வளவு வேற்றுமை ஒலியில் இலத்தீனிலும் ஒலிக்க வேண்டும்.

மேலுள்ளவாறு இலத்தீனில் இருபத்தைந்து எழுத்துக்களே உள்ளன. பிரெஞ்சு- ஆங்கிலம்போல் இலத்தீனில் 'W' என்னும் எழுத்து இல்லை. இந்த எழுத்தினை ஆங்கிலத்தில் 'இரண்டு யூ' என்னும் பொருளில் 'டபிள் யூ' (Double U) என்கின்றனர். பிரெஞ்சு மொழியிலோ 'இரண்டு வே' என்னும் பொருளில் 'டூப்ள் வே' (Double V) என்கின்றனர். 'W' என்பதை ஆங்கிலமும் பிரெஞ்சும் ஓர் எழுத் தாகக் கொள்ளாமல் இரண்டு எழுத்துக்களாகக் கூறுகின்றன; எனவே இலத்தீனில் இக் கூட் டெழுத்து இல்லாததில் வியப்பில்லை. பிரெஞ்சிலும் அவ்வளவாக இது பயன்படுத்தப்படுவதில்லை.

இலத்தீனில் a, e, i, o, u, y என்னும் ஆறும் உயிர் எழுத்துக்கள்; மற்றவை மெய்யெழுத்துக்கள். இம்மொழியில் Æ, Œ, AU என ஈருயிர்ப் புணர்வு (Diphthongi) எழுத்துக்களும் உள்ளன. இவை நெட்டெழுத்தாகக் கருதப்படும். Æ=ஏ; Œ=ஏ; AU=ஓ - என இவற்றை ஒலிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக:

Ætas =ஏத்தாஸ்;	AUrora = ஓரோரா;
CŒlum=சேலொம்;	TAUrus = தோருஸ்.

'Y' என்பது சொல்லில் வரும்போது 'இ' என்பது போல் ஒலிக்கும். எ—கா: abyssus=அபிஸ்சுஸ்; gyrus = ழிருஸ்.

'AU' என்பது சொல் இறுதியில் 'அஉ' என்பது போல் ஒலிக்கும். எ—கா!

Saul=சஉல்; Menelaus= மெனெலஉஸ்.

'Ph' என்பது f போல் அதாவது 'எஃப்' போல் ஒலிக்கும்: Philosophus = ஃபிலொசொஃபுஸ் (filosofus—போல).

ii என இரண்டு i சேர்ந்தால் 'இயி' என ஒலிக்கும்: Filii = ஃபிலியி.

'h' என்பது இலத்தீனில் ஒலி பெறுவதில்லை. habet என்பது abet என்பது போலவே - அதாவது· 'அபெத்த்' என்றே ஒலிக்கப்பெறும்.

'C' என்பது மொழிக்கு முதலிலும் இடையிலும் 'க' அல்லது 'க்க' என ஒலிக்கும்:

Cado = காதொ; acumen = அக்குமென்.

'C' என்பது பக்கத்தில் e,i என்னும் உயிரெழுத்துக்களுள் ஏதேனும் வந்தால் 'ச' என ஒலிக்கும்:

ceciderunt = செசிதெரொன்த்த்;

civis = சிவிஸ்.

'ch' என்பது எதுவரினும் 'க்க' என ஒலிககும்: charus = க்காருஸ்; chimera = க்கிமெரா.

'g' என்பது 'க' (ங்க) என ஒலிக்கும்:

gallus = கல்லுஸ்; ago = ஆகோ.

'g' என்பது பக்கத்தில் e, i, y என்னும் உயிரெழுத்துக்களுள் ஏதேனும் வந்தால் 'ழ' என ஒலிக்கும்:

genitrix = ழெனித்திறிக்ஸ்;

angelus = அன்ழெலுஸ்.

agilis = அழிலிஸ்.

gyrus = ழிருஸ்.

't' என்பது இயற்கையாக 'த்தெ' என ஒலிக்கும். ஆனால், இதன்பின் 'ti' என 'i' சேர்ந்து 'i' பக்கத்தில் உயிரெழுத்து வந்தால் 'சி' என ஒலிக்கும்:

gratia = கிறாசியா; natio = நாசியோ; dentium = தென்சியொம்; nuntius = நொன்சியுஸ்.

'ti' முன்னால் 'S' அல்லது 'X' வந்தால் 'ti' என்பது 'தி' என ஒலிக்கும். ஒரோவழி 'N' வந்தாலும் அப்படியேயாம்:

Justior = ழுஸ்தியோர்; Mixtio = மிக்ச்தியோ; Antiochus = ஆந்தியோக்குஸ்.

'S' என்பது இரண்டு உயிர்கட்கிடையே வரின் 'Z' போல் ஒலிக்கும். Asina என்பதை Azina என்பது போலவும், Misi என்பதை Mizi என்பது போலவும் ஒலிக்கவேண்டும்.

'Sc' பின்னே e, i வந்தால் 'Sc' என்பது 'ஸ்ச' என்றும், மற்ற எழுத்துக்கள் வரின் 'ஸ்க' என்றும் ஒலிக்கும்:

sca = ஸ்க	sce = ஸ்செ	scra = ஸ்கிற
sco = ஸ்கொ	sci = ஸ்சி	scre = ஸ்கிறே
scu = ஸ்கு		

'u' என்பதன் இயற்கையான ஒலி 'உ' என்பது. ஆனால் இவ்வெழுத்தே, m, n எனும் எழுத்துக் கட்கு முன்வரின் 'உ' என ஒலிக்காமல் 'ஒ' போல் ஒலிக்கும்:

Pium = பியொம்; Dominum = தொமினொம். Undecim = ஒன்தெசிம்; Colunt = கொலொந்த்; Dicunt = திக்கொந்த்.

இந்த 'U' என்பதே ஒரோவழி 'N' முன் 'உ' போல் ஒலிக்கப்பெறுவதும் உண்டு:

Tunc = துங்க், Nunc = நுங்க்.

மேலே, 'nc' என்பதற்கு முன்னால் 'u' என்பது 'உ' போல் ஒலிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம்.

'X' என்பது 'க்ச' என ஒலிக்கும்:

xerxes = க்சேர்க்சேஸ், Axis = அக்சிஸ்.

'Q' என்பது 'க்க' போல் ஒலிக்கும். எடுத்துக் காட்டாக, - 'squa' என்பதை 'ஸ்குஅ' என்றும், 'squu' என்பதை 'ஸ்கூ' என்றும் ஒலிக்கவேண்டும்.

இனி, இலத்தீன் சொற்களையும் சொற்றொடர் களையும் ஒலித்துப் படிப்பதற்குத் துணை புரியும் வகையில் — ஒரு மாதிரியாக — 'Salutatio Angelica' என்னும் தலைப்புடைய ஓர் இலத்தீன் பகுதியையும் அதன் நேர்த் தமிழ் ஒலிப்பையும் கீழே காண்பாம்: -

Salutatio Angelica
சலுத்தாசியோ அந்ழெலிக்கா

‘Ave, Maria, Gratia, Plena, Dominus
‘ஆவெ, மரியா, கிறாசியா, ப்பிளெனா, தொமினுஸ்
tecum: benedicta tu in mulieribus, et
த்தெகொம்: பெனெதிக்த்தா த்து இன் முலியெரிபுஸ், எத்த்
benedictus fructus ventris tui Jesus.
பெனெதிக்த்துஸ் ஃபிறுக்த்துஸ் வெந்த்திறிஸ் த்துயி ழெசுஸ்.
Sancta Maria Mater Dei, ora pro nobis
சங்க்த்தா மரியா மாத்தேர் தெயி, ஒறா ப்பிறொ நோபிஸ்
peccatoribus, nunc et in hora mortis
ப்பெக்காத்தோறிபுஸ், நுங்க் எத்த் இன் ஒறா மொர்த்திஸ்
nostræ Amen.’
நொஸ்த்திறே. ஆமென்.’

இலத்தீன் சொற்களை—சொற்றொடர்களை மேலுள்ள மாதிரியில் ஒலித்துப் படிக்கவேண்டும். பொதுவாக இலத்தீன் மொழியை ஒலித்துப் படிக்கக் கற்றுக் கொள்வதற்கும், சிறப்பாகத் ‘தமிழ் இலத்தீன் பாலம்’ என்னும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள இலத்தீன் சொற்களை ஒலித்துப் படித்தறிவதற்கும் துணைபுரியும் வகையில் மேலுள்ள செய்திகள் ‘இலத்தீன் ஒலிப்பு முறை’ என்னும் இத்தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. படிப்பவர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக!

தமிழ் - இலத்தீன் பாலம் அமைத்தோர்

தமிழ் இலத்தீன் பாலம் அமைத்தோருள் வீரமாமுனிவரின் வரலாறு விரிவாகத் தெரிகிறது. துய்புய், மூசே என்பார் இருவரும் பிரான்சிலிருந்து வந்த துறவியர்கள்; இவர்கள் வரலாறும் ஓரளவு தெரிகிறது. குரி துறவியார் பற்றியும், டாக்டர் கிரௌல், சீகன்பால்க் ஆகிய செர்மானியர் இருவர் பற்றியும், பின்னே அவர்தம் நூற்களைப்பற்றிக் கூறியுள்ள பகுதியில் சில செய்திகள் காணலாம். தமிழ்-இலத்தீன் பாலம் அமைத்தவர்களுள் மிகவும் தலையாயவராய வீரமாமுனிவரின் வரலாறு குறித்தும், அடுத்து, துய்புய், மூசே ஆகியோர் வரலாறு குறித்தும் ஈண்டு ஓரளவு காண்பாம்.

வீரமா முனிவர்

வீரமாமுனிவரின் இயற்பெயர் 'ஜோசப் கான்ஸ்டான்ஸ் பெஸ்கி' (Joseph Constance Beschi) என்பதாகும். இது, ஆங்கில ஒலிப்பு முறையில் அழைக்கப்படும் பெயராகும். ஆனால், வீரமாமுனிவர் பிறந்த இத்தாலி நாட்டின் பண்டைய மொழியாகிய இலத்தீனில் இவரது பெயர் 'Josepho Constantio Beschio' என்று எழுதப்பட்டுள்ளது. இவர் இத்தாலி நாட்டில் காஸ்திகிலியோனே என்னும் ஊரில் கி. பி. 1680- ஆம் ஆண்டு பிறந்தார்; இளமையிலேயே பல

கலைகளையும் மொழிகளையும் கற்றார்; பதினெட்டாம் வயதில் (1698) கத்தோலிக்கத் திருப் பேரவையின் துறவுப் பயிற்சிக் கூடத்தில் சேர்ந்து பன்னீராண்டு பயின்று 1709-ஆம் ஆண்டு துறவுப் (குரு) பட்டம் பெற்றார். இக்காலத்தில் துறவி பெஸ்கியவர்கள், இலத்தீன், இத்தாலியம், கிரேக்கம், ஈப்ரு, பிரெஞ்சு, போர்த்துகீசியம் முதலிய மொழிகளில் போதிய திறன் பெற்றிருந்தார். கல்விக் கருவூலமாக விளங்கிய அடிகளார் பெஸ்கி, தென்னிந்தியாவில் கிறித்துவம் பரப்புவதற்காக 1710-ஆம் ஆண்டு கப்பலேறி 1711-ஆம் ஆண்டு தென் பாண்டி நாடு வந்தடைந்தார்.

தமிழ் நாடு வந்த முனிவர் பெஸ்கி தமிழ்த் துறவியர் போலவே நடையுடை தோற்றம் கொண்டு 'வீரமா முனிவர்' என அழைக்கப்பெற்றார். 'தைரிய நாதசுவாமி' என்ற பெயர்வழக்கும் இவருக்கு உண்டு. கான்ஸ்டான்ஸ் (Constance) என்ற இவரது இயற் பெயர் வீரம் - தைரியம் என்னும் பொருளுடையது; அப்பெயரின் அடிப்படையில் எழுந்த தமிழுருவமே வீரமாமுனிவர் என்னும் பெயர். Constantia என்னும் இலத்தீன் சொல்லுக்கு, உறுதி, திடம், தைரியம், வீரம், ஊக்கம் என்றெல்லாம் பொருள் உண்டு.

வீரமா முனிவர் நன்கு தமிழ் பயின்று ஆழ்ந்த புலமை யெய்தினார். மேலும், வடமொழி, தெலுங்கு, உருது ஆகிய மொழிகளும் பயின்றார். மேலை நாட்டி லிருந்து வந்து தமிழ் மக்களிடையே கிறித்துவம் பரப் பிய வீரமா முனிவர், அம்மக்களின் மொழியாகிய தமிழை உலகத்தில் பரப்பி ' உலகத் தமிழ் ' ஆக்க

வித்திட்டார்; தமிழிலும் இலத்தீனிலும் பல நூற்கள் இயற்றினார்.

முனிவர் தமிழ் மொழியில் தேம்பாவணி என்னும் பெருங்காவியம், திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை முதலிய செய்யுள் நூற்களும், தொன்னூல் விளக்கம் என்னும் சிறந்த இலக்கண நூலும், வேத விளக்கம், பேதக மறுத்தல், வேதியர் ஒழுக்கம், லூத்தேரினத்தார் இயல்பு, பரமார்த்தகுரு கதை முதலிய உரைநடை நூல்களும், சதுர் அகராதி என்னும் பெயரில் தமிழுக்குத் தமிழ் அகராதியொன்றும் இயற்றியருளினார். பண்டு தமிழ் அகராதித் துறை நூற்கள், இக்கால அகராதிகள் போல் இல்லாமல், நிகண்டு என்னும் பெயரில் செய்யுள் வடிவில் இருந்தன. முதல் முதலாக வீரமாமுனிவரே சொற்களை அகர வரிசையில் அடுக்கிப் பொருள் எழுதி இக்கால அகராதி நூற்களின் அமைப்புக்கு வித்திட்டார்; அதனால் முனிவர், 'தமிழ் அகராதியின் தந்தை' என்னும் சிறப்புப் பெயரால் செல்லமாக அழைக்கப்பெறுகிறார். இஃதன்றி, 'வட்டார வழக்குத் தமிழ் அகராதி' ஒன்றும் இவர் இயற்றியுள்ளார்.

இவ்வாறு தமிழில் பன்னூற்கள் இயற்றிய முனிவர், தமிழ்- இலத்தீன் பாலமாகத் தமிழ் தொடர்பாக இலத்தீன் மொழியிலும் பல நூற்கள் அருளியுள்ளார். இவர், திருக்குறளின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்துள்ளார். தமிழில் தாம் எழுயுதிள்ள

பரமார்த்த குரு கதைஎன்னும் கதைநூலை இலத்தீனிலும் பெயர்த்துள்ளார். இவ்வாறு மொழிபெயர்ப்பு வாயிலாகத் தமிழ்மொழியை உலக அரங்கில் அறிமுகப்படுத்தியதல்லாமல், 'கொடுந்தமிழ் இலக்கண விளக்கம்', 'செந்தமிழ் இலக்கணச் சுருக்கம்', 'செந்தமிழ் இலக்கணத் திறவுகோல்' ஆகிய தமிழிலக்கணம் பற்றிய நூற்களை இலத்தீன் மொழியில் எழுதி, ஐரோப்பியர் தமிழிலக்கணம் கற்க வழிசெய்து தேன் தமிழொலி உலகமெல்லாம் பரவச் செய்தார். மற்றும், தமிழ்—இலத்தின்அகராதி, இலத்தீன்-தமிழ் அகராதி, போர்த்துகீசியம்—இலத்தீன்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, தமிழ் ஆங்கில அகராதி முதலிய அகராதிகள் பல தொகுத்து மிகுந்த அளவில் தமிழ் பரவச்செய்து உலகின் தமிழ்த் தூதுவராய் விளங்கினர்.

தமிழரோடு தமிழராய்க் கலந்து உறைந்து, தமிழ் நூற்களை ஆராய்வதிலும் — தமிழ் நூற்கள் எழுதுவதிலுமே தம் காலத்தின் பெரும் பகுதியைச் செலவழித்தார் வீரமாமுனிவர். தமிழகத்தில் காமநாயக்கன்பட்டி, கயத்தாறு, மதுரை, அரியலூர், தஞ்சாவூர், கோனன்குப்பம், ஏலாக்குறிச்சி, தூத்துக்குடி முதலிய ஊர்களில் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்த முனிவர் பெருமான், இறுதியில் மலையாளத்திலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரில் சின்னாள் தங்கியிருந்து 1747-ஆம் ஆண்டு இயற்கையெய்தினர்.

முனிவர் தமிழ்—இலத்தீன் பாலமாக இயற்றியுள்ள நூற்களைப் பற்றிய விவரங்கள் பின்னும்

விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. முனிவரின் நூற்களின் அருமை பெருமைகளை அறிந்தவர்கள், அவருக்கு மிக்க நன்றி செலுத்துவதுடன், 1968-ஆம் ஆண்டு சனவரித்திங்களில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டின்போது சென்னைக் கடற்கரையில் அவருக்குச் சிலை அமைத்தது மிகவும் பொருத்தமாகும் என்று பாராட்டவுஞ் செய்வர்.

துய்புய் முனிவர்

இவரது முழுப்பெயர் 'லூயி சவினியன் துய்புய்' (Louis Saviniene Dupuis) என்பதாகும். இவர் பிரான்சில் 'சசி' (Sacis) என்னும் நகரில் கி. பி. 1806-ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினெட்டாம் நாள் பிறந்தார். 1832-ஆம் ஆண்டு துறவுப் பட்டம் பெற்றார்; சமயத்தொண்டு புரிவதற்காக 1835-ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு வந்துசேர்ந்தார்; உடனே பெங்களூருக்கு அனுப்பப்பட்டு அங்கே எட்டாண்டுகள் பணிபுரிந்தபின் மீண்டும் புதுச்சேரிக்கு அழைக்கப்பெற்றுத் தம் வாணாளைப் புதுச்சேரியிலேயே கழித்து முடித்தார்.

முனிவர் துய்புய் புதுவை வட்டத்திலுள்ள நெல்லித்தோப்பு, உழவர்கரை முதலிய ஊர்த் திருக்கோயில்களின் பொறுப்பாளராகப் பணிபுரிந்துள்ளார். இவர் பெண் கல்விக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டார்; 1844-ஆம் ஆண்டு பெண் துறவியர் கன்னிமாடமும் (Convent) பெண் பள்ளியும் புதுவையில் ஏற்படுத்தினார்.

அக் கன்னி மாடத்தின் பெயர் 'தேவமாதாவின் மாசற்ற திரு இருதய சபை மடம்' (The Immaculate Heart of Mary's Convent) என்பதாகும்.

சமயத் தொண்டுடன் கல்வித் துறையிலும் கருத்து செலுத்திய துய்புய் அடிகளார் தமிழ் மொழியை நன்கு கற்றார். முனிவர் முசே அவர்களுடன் இணைந்து தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு- தமிழ் அகராதி, இலத்தீன்– பிரெஞ்சு-தமிழ் அகராதி ஆகிய 'அகர வரிசை' நூற்கள் தொகுத்து வெளியிட்டார்; தாம் தனியே பல நூற்கள் எழுதினார்; பழைய நூற்கள் பலவற்றைப் பதிப்பித்தார்; சில நூற்களை மொழிபெயர்க்கவும் செய்தார். இவர் இயற்றிய நூற்கள் சில வருமாறு:—

தமிழ் - பிரெஞ்சு இலக்கணம், வேத தர்க்கம், தேவ சினேக முயற்சி, தேவ சினேக முகாந்திரம், துறவற உதயணம், இல்லற உதயணம் முதலியன வாம். இவையே யன்றிப் பல துறவியரின் வரலாறு களும் எழுதினார். இவர்தம் மொழிபெயர்ப்பு நூற்களாவன.—

அருள் துறவியரின் அன்றாட வாழ்க்கை முறைகள் (The Daily Lives of Saints), மாசில்லாமல் உற்பவித்த தேவமாதாவின் திரு இருதய அனுசரணம், மேல்நிலைத் தலைவர்கட்கு ஒரு வழி காட்டி (A Guide to Superiors) முதலியனவாம்.

இவ்வாறு பல்வேறு பணிகள் புரிந்த துய்புய் அவர்கள் 1874 சூன் நான்காம் நாள் புதுவையில் உயிர் நீத்தார்.

முனிவர் முசே

இவரது முழுப்பெயர் 'லூயி மரீ முசே' (Louis Marie Mousset) என்பது. பிரான்சு நாட்டில் 'புவாத்தியர்' (Poitiers) என்னும் ஊரில் 1808 பிப்ரவரி ஏழாம் நாள் பிறந்த இவர், துறவுப் பட்டம் பெற்று, சமயப் பணி புரிவதற்காக, 1835 செப்டம்பர் இரண்டாம் நாள் புதுச்சேரி வந்து சேர்ந்தார். துய்புய் முனிவர் போலவே இவரும் சில ஊர்க் கோயில் பொறுப்பாளராகப் பணிபுரிந்ததுடன், செந்தமிழைச் சிறக்கக் கற்ருர்; நூற்கள் சில எழுதினுர்; துய்புய் அவர்களுடன் இணைந்து தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, இலத்தீன்-பிரெஞ்சு - தமிழ் அ க ரா தி ஆகிய அகராதி நூற்கள் தொகுத்து வெளியிட்டார். இந்த நூற்களில் முசே பெயரே முதலில் குறிப்பிடப்பட்டிருப்பதால், இந்த அகரவரிசை நூல் தொகுப்புப் பணிக்கு இவரே தலைமை தாங்கியிருக்கிருர் என்பது புலனுகிறது.

தமிழ்-இலத்தீன்-பிரெஞ்சுப் பாலம் அமைத்த முசே 1888 பிப்ரவரி எட்டாம் நாள் புதுவையில் இறுதியெய்திஞர்.

படைப்புக்கள்

தமிழ்-இலத்தீன் பாலம் அமைத்த பன்னுட்டறிஞரும் மிகவும் பாராட்டற்பாலர். அவர்தம் பணியின் அருமை பெருமையினை அறிந்துகொள்ளும் வகையில், தமிழ்-இலத்தீன் பாலமாக அவர்கள் படைத்துள்ள நூற்களைப் பற்றிய விவரங்களை இனி ஆராய்வோம். முதலில் வீரமா முனிவர் நூற்களையும் அடுத்து ஏனையோர் நூற்களையும் காண்பாம்.

கொடுந் தமிழ் இலக்கண விளக்கம்

பேச்சுத் தமிழையும் தமிழகத்தின் சுற்றெல்லைகளில் பேசப்படும் தமிழ் வழக்காற்றையும் 'கொடுந் தமிழ்' என்றும், நல்ல இலக்கியத் தமிழைச் 'செந் தமிழ்' என்றும் கூறுவது மரபு. இந்த இருவேறு தமிழ் பற்றிய இலக்கணங்களையும் வீரமா முனிவர் இலத்தின் மொழியில் எழுதியுள்ளார். இவற்றுள் முன்னது குறித்து முதலில் காண்பாம்.

கொடுந்தமிழ் இலக்கண விளக்கம் என்னும் நூலுக்கு இலத்தீன் மொழியில் வீரமா முனிவரால்

" Grammatica Latino — Tamulica.
In Qua De
Vulgari Tamulicæ Linguæ Idiomate
கொடுந்தமிழ் Dicto,
Fusius . Tractatur "

எனப் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த இந்நூலின் படி (பிரதி), புதுச்சேரி மாதா கோயில் அச்சகத்தில் 1843 ஆம் ஆண்டு அச்சிடப் பெற்றதாகும். இக் கொடுந்தமிழ் இலக்கண விளக்க நூலுடன் செந்தமிழ் இலக்கணச் சுருக்கம் என்னும் நூலும் அதே அச்சகத்தில் அதே ஆண்டில் அச்சிடப்பெற்று இரண்டும் இணைப்பாகக் கட்டடம் (Binding) கட்டப்பட்டுள்ளன.

இனி, கொடுந்தமிழ் இலக்கண விளக்க நூலைப் பற்றிய விவரம் கூறும் 'நூல் முகப்புப் பக்கம்' (Title Page) அதிலுள்ளவாறு அப்படியே வருமாறு:

A. M. D. G.

—o—

GRAMMATICA

LATINO — TAMULICA

In Qua De

Vulgari Tamulicæ Linguæ Idiomate

கொடுந் தமிழ்

Dicto,

Fusius Tractatur;

Auctore

P. Constantio-Josepho Beschio,

Societatis Jesu, In Regione Madurensi,

Apud Indos orientales, Missionario.

NOVA EDITIO

Cum Notis Et Compendio Grammaticæ

De Elegantiori Dialecto செந்தமிழ் Dicta,

Ab uno Missionario Apostolico

Congregationis Missionum Ad Exteros.

—o—

PUDICHERII,

E Typographio Missionariorum

Apostolicorum Dicte Congregationis.

1843.

Facultate à S. Sede Apostolicâ

II. R. R. Episcopo Drusiparensi V. A. Concessâ.

மேலே கொடுக்கப்பட்டுள்ள பகுதியால், நூலின் இலத்தீன் பெயரையும், ஆசிரியர் வீரமா முனிவரின் P. Constantio - Josepho Beschio என்னும் முழு இலத்தீன் பெயரையும், அவர் மதுரை வட்டக் கத்தோலிக்கத் திருப் பேரவையின் சார்பில் பணி யாற்றினர் என்பதையும், நூல் புதுச்சேரியில் 1843 –ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட செய்தியையும் அறிய லாம்.

கொடுந்தமிழ் இலக்கண விளக்கம் என்னும் நூல் 216 பக்கம் உடையது. இந்நூலில் 1 முதல் 200 வரை எண்கள் கொடுக்கப்பட்டு 200 பத்திகள் உள்ளன. சில பத்திகளில் உள் பத்திகள் சிலவும் உள்ளன. நூலின் தொடக்கத்தில் 'பதிப்பாசிரியர் முகவுரை' பின்வரும் தலைப்புடன் காணப்படு கிறது.

Editoris Praefatio

J. M· J.

Omnibus Operariis Apostolicis, In Tamulicis Regionibus Degentibus, Salutem in Domino plurimum.

இந்தத் தலைப்பு விளக்கத்தை அடுத்து, Apostolicis என்று தொடங்கி, procurandam. Valete. என்று முடிக்கப்பெற்று, நான்கு பக்க அளவில் பதிப்புரை காணப்படுகிறது. எல்லாவற் றிற்கும் இறுதியில்,

Pudicherii. 6. kal. Julii 1843. என, நூல் பதிப்பித்த இடமும் நாளும் குறிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பதிப்புரையை யடுத்து 'நூலாசிரியர் முகவுரை' பின்வரும் தலைப்பு விளக்கத்துடன் உள்ளது:

Auctoris Præfatio

Religiosis Linguæ Tamulicæ candidatis
Constatius Joseph Beschius
Salutem in Domino plurimam.

இந்தத் தலைப்பு விளக்கத்தை யடுத்து, Sæpe என்று தொடங்கி, se deam. Valete. என்று முடிக்கப்பெற்று, நான்கு பக்க அளவில் 'ஆசிரியர் முகவுரை' அமைந்துள்ளது. இதன் இறுதியில்,

E Missiono Madurensi. 4. Kal. Jan. 1728.
என நூல் எழுதி முடித்த இடமும் காலமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நூல் 1728 - ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாக ஆசிரியர் முகவுரை அறிவிக்கிறது. இதற்கு 115 ஆண்டுகட்குப் பின்னுல்-1843 ஆம் ஆண்டில் நூல் அச்சாகும் முயற்சி புதுச்சேரியில் நடைபெற்றதாகப் பதிப்புரை அறிவிக்கிறது. இந்தப் பதிப்பு, கையெழுத்துப் படியைப் பார்த்து அச்சிட்ட முதல் பதிப்பா அல்லது முன்னமேயே அச்சிடப்பட்ட வேறு பதிப்பைக் கொண்டு அச்சிட்ட மறு பதிப்பா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

முன்னே கொடுக்கப்பட்டுள்ள நூலின் முகப்புப் பக்கத்தில் (Title Page), 'NOVA EDITIO' என்னும் இலத்தீன் தொடர் பெரிய எழுத்தில் தனி வரியாக இருப்பதைக் காணலாம். Nova Editio என்றால் New Edition அதாவது 'புதிய பதிப்பு' என்று பொருளாம். முதல் பதிப்பு என்று இல்லாமல், புதிய பதிப்பு என்று தெரிவிக்கப்பட்டிருப்பதால், பழைய பதிப்பு ஒன்று இருப்பது தெளிவு. அஃது எனக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பதிப்பு 1738 - ஆம் ஆண்டு தரங்கம்பாடி மாதா கோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றதாக, பர்னல் (Burnell) என்னும் ஐரோப்பிய அறிஞர், வீரமா முனிவரின் 'Clavis' என்னும் நூற் பதிப்புரையில் § கூறியுள்ளார். இங்ஙனம் முதலிலேயே நூல் அச்சிடப்பட்டிருந்ததனால்தான், புதுச்சேரிப் பதிப்பு NOVA EDITIO (புதிய பதிப்பு) எனக் குறிப்பிடப்பட்டது. இந்தப் புதுச்சேரிப் பதிப்பில், புதுச்சேரி சேசு திருப்பேரவையைச் சேர்ந்த துறவி யொருவர் எழுதிய அடிக்குறிப்புக்களும் (Foot Notes) சில விடங்களில் உள்ளன.

இனி, இந்நூலில், தமிழ் எழுத்துக்களுக்கு நேரான இலத்தீன் எழுத்துக்கள் தரப்பட்டுள்ள அட்டவணை (Translitteration Table) நூலினுள்ளாங்கு வருமாறு:—

---

§ The Tranquebar Mission Press which printed the first Edition of Beschi's Kodun — Tamil Grammar in 1738, now also publishes the first Edition of his more important work.

Tabula Litterarum Tamuli carum

a	â	i	î	u	û	e	ê
அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ
ai	o	ô	au (aou)				
ஐ	ஒ	ஓ	ஔ				

k. g. க

ng. ங hæc vix unquam copulatur vocali.

S. ச	y. ய
gn. ஞ	r. ர
tt. dd. ட	l. ல
n. ண	v. வ
t. d. த	l. j. ழ
n. ந	l. ள
P. ப	rr. ற
m. ம	n. ன

கொடுந்தமிழ் இலக்கண விளக்க நூலில், எழுத்து, பெயர், வினை, தொடர்மொழி, பல்வேறு அன்றாட வழக்காறுகள் என்னும் ஐந்து இயல்கள் உள்ளன. அவற்றையும் அவற்றின் உட்பிரிவுகளையும் அறிவிக்கும் பொருளடக்க அட்டவணை (Index) நூலிலுள்ளாங்கு வருமாறு:—

INDEX

Totius Grammaticæ

Primus Numerus initium propositæ materiæ, secundus paginam indicat.

Caput I. De Litteris.

I. De Numero et formâ Litterarum.
II. De Vi Litterarum.
III. De Variatione Pronunciationis.
IV. De Variatione Figuræ Litterarum.
V. De Augmento Litterarum.
VI De Litteris Grandonicis.

Caput II. De Nomine.

I. De Declinatione Nominum.
II. De Adjectivis.
III. De Pronominibus.
IV. De Pronomine Adjective.
V. De Generibus.

Caput III. De Verbo.

I. De Præsenti.
II. De Præterito.
III. De Futuro.
IV. De Imperativo.
V. De Infinitivo.
VI. De Gerundiis et Participiis.
VII. De Verbo Nagativo.
VIII. De Voce Passivâ.
IX. De Verbis Defectivis.

ஒக்கும்	போதும்
வேணும்	கடவது
மாட்டேன்	தக்க
இல்லை-அல்ல	கூடும்
உண்டு	போல

Caput IV. De Syntaxi.

I. De Constructione orationis.

II. De Nomine quoad syntaxim.
De Nominibus appellativis.
De Nominibus verbalibus.

III. De Verbis quoad syntaxim.
De modo supplendi ea quibus caret hæc lingua.

Imperfectum
Plusquamperfectum
Optativus
Subjunctivus si
Subjunctivus quamvis
Subjunctivus eum
Ablativus absolutus
Gerundia in di et dum
Supina
Participia futuri
Relativum qui, quæ, quod
Adverbia

IV. De Compositione Verborum.

இருக்கிறது
ஆயிருக்கிறது
கொள்ளுகிறது, போடுகிறது, படுகிறது
ஒட்டுகிறது
அருளுகிறது & c
Verba imperii

V. De usu Infinitivi.
De infinitivo ஆக.
De infinitivo கொள்ள.
வாங்கிறது, கொடுக்கிறது.

VI. De aliquot particulis tamulicæ linguæ.

உம்
ஓ
ஆனாலும், என்கிலும்
ஆம்

ஏ
ஐயோ, அன்றோ, ஏன், ஆக்கும்
முன், பின், முந்தி& c
படி
உள்
அப்புறம், அப்பால் & c
மேல், கீழ்
மாத்திரம், அளவு, தனை, & c
வரைக்கும், மட்டும்
அதிகம்
பார்க்க, காட்டிலும்
உடனே
இல்லாமல், அல்லாமல். இன்றி, அன்றி
ஒன்றில்
போல
இடைவிடாமல்
இல்லாவிட்டால்
ஒழிய, தவிர
ஒருப்பட, ஒருமிக்க
ஏறக்குறைய
அற
சூழ
கிட்ட
விலக
கடுக, முடுக, மெள்ள
வலிய

மை, quâ voce fiunt Nomina in sensu abstracto.

Caput V. De Variis quotidiano usui necessariis

I. De Numeris

II. De Mensuris

III. De Gradibus consanguinitatis et affinitatis.

IV. De Diebus | De Mensibus | De Annis.

V. De Ventorum Rhombis | De Signis Zodiaci | De Lunatione.

VI. De correspondentiâ plurium ex particulis,

adverbiis & c, linguæ Latinæ cum vocibus Tamulicis.

Indicis Finis.

இனி, இந்நூலின் (Grammatica) மாதிரிக்காக, நூலின் தொடக்கத்தில் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் முதல் பத்தி வருமாறு;—

"Triginta Litteras Tamulenses numerant, quas எழுத்து nominant: ex his vocales duodecim, consonantes octodecim. Illas உயிர், * uir, has மெய், mey, vocant; ac si dicerent, animam, et corpus: nec omninò inepté; consonans enim sine vocali corpus est sine animâ; hinc consonantem, cuinulla uniatur vocalis, vocant செத்தெழுத்து, id est, littera mourtua."

அடுத்து, மேலை மொழிகளின் இலக்கண அமைப்பு முறையை யொட்டி, 'வளர்' என்னும் வினைச்சொல் பெறும் பல்வேறு விகற்ப வடிவங்கள் (Conjucation - வினை விகற்பப் பட்டி) இந்நூலில் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதைக்கொண்டு, வீரமாமுனிவரது உழைப்பின் அருமை பெருமையை அறியலாம். இனி, அந்த வினை விகற்ப வகுப்புப் பட்டி நூலிலுள்ளாங்கு வருமாறு: —

---

* In designanda pronunciatione quandò venit u debet semper sonari quasi ou in gallicâ linguâ.

CONJUGATIO
Verbi Tamulici

Verbum Neutrum.	Verbum Activum.
* வளருகிறது	வளர்க்கிறது
crescere	educare

Præsens.
Singularis.

வளருகிறேன்	வளர்க்கிறேன்
cresco	educo
வளருகிறாய்	வளர்க்கிறாய்
வளருகிறான்	வளர்க்கிறான்
வளருகிறாள்	வளர்க்கிறாள்
வளருது }	
வளருகுது }	வளர்க்குது

Honorificus.

வளருகிறோம்	வளர்க்கிறோம்
வளருகிறீர்	வளர்க்கிறீர்
வளருகிறார்	வளர்க்கிறார்

Pluralis

வளருகிறோம்	வளர்க்கிறோம்
வளருகிறீர்கள்	வளர்க்கிறீர்கள்
வளருகிறார்கள்	வளர்க்கிறார்கள்
வளருது }	வளர்க்குது
வளருகுது }	

*N. B. 1• Dici etiam potest வளர்கிறது, in præsenti வளர்கிறேன் et in futuro வளர்வேன் & c... 2°. etiamsi non superscribatur punctum litteræ ர sive hic, sive in multis alis locis hujus conjugationis semper lege: quasi superscriberetur வளர்கிறது, வளர்க்கிறது & C ...

Verbum Neutrum – Verbum Activum

Præteritum

Singularis

வளர்ந்தேன் —	வளர்த்தேன்
crevi	educvi
வளர்ந்தாய்	வளர்த்தாய்
வளர்ந்தான்	வளர்த்தான்
வளர்ந்தாள்	வளர்த்தாள்
வளர்ந்தது	வளர்த்தது

Honorificus

வளர்ந்தோம்	வளர்த்தோம்
வளர்ந்தீர்	வளர்த்தீர்
வளர்ந்தார்	வளர்த்தார்

Pluralis

வளர்ந்தோம்	வளர்த்தோம்
வளர்ந்தீர்கள்	வளர்த்தீர்கள்
வளர்ந்தார்கள்	வளர்த்தார்கள்
வளர்ந்தது	வளர்த்தது

Verbum Neutrum – Verbum Activum

Imperativus

Singularis

வளரு vel வளர்	— வளர்
cresce	educa
வளருவாயாக	வளர்ப்பாயாக
வளருவானுக	வளர்ப்பானுக
வளருவாளாக	வளர்ப்பாளாக
வளருவதாக	வளர்ப்பதாக

Honorificus

வளரும்	வளரும்
வளருவீராக	வளர்ப்பீராக
வளருவாராக	வளர்ப்பாராக

Pluralis

வளருங்கள்	வளருங்கள்
வளருவீர்களாக	வளர்ப்பீர்களாக
வளருவார்களாக	வளர்ப்பார்களாக
வளருவதாக	வளர்ப்பதாக

Futurum
Singularis

வளருவேன்	வளர்ப்பேன்
crescam	educabo
வளருவாய்	வளர்ப்பாய்
வளருவான்	வளர்ப்பான்
வளருவாள்	வளர்ப்பாள்
வளரும்	வளர்க்கும்

Honorificus

வளருவோம்	வளர்ப்போம்
வளருவீர்	வளர்ப்பீர்
வளருவார்	வளர்ப்பார்

Pluralis

வளருவோம்	வளர்ப்போம்
வளருவீர்கள்	வளர்ப்பீர்கள்
வளருவார்கள்	வளர்ப்பார்கள்
வளரும்	வளர்க்கும்

Aliter pro quâlibet personâ, præsertim honorificé.

வளர	வளர்க்க
வளரவும்	வளர்க்கவும்

Infinitivus

வளர	வளர்க்க
crescere	educare

Gerundium

வளர்ந்து	வளர்த்து
crescendo	educando

Participium

Præs. வளருகிற	—	வளர்க்கிற
qui crescit	—	qui educat
Præt. வளர்ந்த	—	வளர்த்த
qui crevit	—	qui educavit
Fut. வளரும்	—	வளர்க்கும்
qui creturus est	—	qui educaturus est

Verbum Neutrum – Verbum Activum
Nomina Verbalia

வளரல்	வளர்க்கல்
வளருதல்	வளர்க்குதல்
வளர்தல்	வளர்த்தல்
வளருகிறது வளர்கிறது }	வளர்க்கிறது
crescere	educare
வளர்ந்தது	வளர்த்தது
crevisse	educavisse
வளருவது	வளர்ப்பது
creturum esse	educaturum esse
vel crescere	vel educare
வளர்கை	வளர்க்கை, வளர்ப்பு
acerementum	educatio

Nomina Appellativa

Verbum Neutrum

வளருகிறவன்	ille qui crescit	
வளருகிறவள்	illa quæ crescit	
வளர்ந்தான் வளர்ந்தவன்	ille que crevit	
வளர்ந்தாள் வளர்ந்தவள்	illa quæ crevit	
வளர்வான் வளர்பவன்	ille qui	cresit vel crescet
வளர்வாள் வளர்பவள்	illa quæ	

Verbum Activum

வளர்க்கிறவன்	ille qui educat	
வளர்க்கிறவள்	illa quæ educat	
வளர்த்தான் வளர்த்தவன்	ille qui educavit	
வளர்த்தாள் வளர்த்தவள்	illa quæ educavit	
வளர்ப்பான் வளர்ப்பவன்	ille qui	educat vel educabit
வளர்ப்பாள் வளர்ப்பவள்	illa quæ	

Verbum Negativum

Neutrum vel activum	Activum
வளரேன்	வளர்க்கேன்
non crescam vel non educabo	non educabo
வளராய்	வளர்க்காய்
வளரான்	வளர்க்கான்
வளராள்	வளர்க்காள்
வளராது	வளர்க்காது
வளரா	வளர்க்கா
வளரோம்	வளர்க்கோம்
வளரீர்	வளர்க்கீர்
வளரார்	வளர்க்கார்
வளரோம்	வளர்க்கோம்
வளரீர்கள்	வளர்க்கீர்கள்
வளரார்கள்	வளர்க்கார்கள்
வளராது	வளர்க்காது
வளரா	வளர்க்கா

Imperativus

Neut-vel act.	— Activum
வளராதே	— வளர்க்காதே
ne crescas vel educes	ne educes
வளராதேயும்	வளர்க்காதேயும்
வளராதேயுங்கள்	வளர்க்காதேயுங்கள்

Gerundium

வளராது et வளராமல்	வளர்க்காது et வளர்க்காமல்
non crescendo vel educando	non educando

Participium

வளரா et வளராத	வளர்க்கா et வளர்க்காத
qui non crescit vel educat	qui non educat

Nomina Verbalia et Appellativa Negativa

வளராமை defectus accrementi vel educationis	வளர்க்காமை defectus educationis ex parte educantis
வளராதவன் ille qui / வளராதவள் illa quæ / வளராதது illud quod } non crescit vel educat	வளர்க்காதவன் / வளர்க்காதவள் / வளர்க்காதது } ille qui / illa quæ / illud quad } non edu- cat

N. B. Nomina Verbalia et Appelativa declinantur sicut nomina vel pronomina.

Aliae modificationes Verbi Negative

வளராதிருக்கிறேன் non cresco vel educo	வளர்க்காதிருக்கிறேன் non educo
வளராதிருக்கிறாய் non crecis vel educas	வளர்க்காதிருக்கிறாய் non educas
... ...	... ...
வளராதிருந்தேன் non crevi vel educavi	வளர்க்காதிருந்தேன் non educavi

வளராதிரேன் non deficiam in crescendo vel educando

Dici etiam potest வளராமலிருக்கிறேன் & c.

Vel வளராமல் - வளராதே போகிறேன்

வளர்க்காதிரேன் non deficiam in educando

item வளர்க்காமலிருக்கிறேன் & வளர்க்காமல்-வளர்க்காதே போகிறேன்

Istæ modificationes conjugantur per omnes modos, personas et tempora verbi sive positivi sive negative. Insuper dici etiam potest:

வளருகிறே னில்லை
non cresco

வளருகிறா யில்லை
non crescis

வளர்க்கிறே னில்லை
non educo

வளர்க்கிறா யில்லை
non educas

... ...

வளர்ந்தேனில்லை non crevi — வளர்த்தேனில்லை non educavi

வளருவேனில்லை non crescam — வளர்ப்பேனில்லை non educabo

நான்	வளருகிறதில்லை ...	வளர்க்கிறதில்லை ...	pro præs.
நீ	வளர்ந்ததில்லை ...	வளர்த்ததில்லை ...	pro praæt.
அவன்	வளருவதில்லை ...	வளர்ப்பதில்லை ...	pro fut.
....	வளரவில்லை ...	வளர்க்கவில்லை ...	pro omni tempore

Verbum Imperii

வளருவிக்கிறேன்	வளர்ப்பிக்கிறேன்
crescere facio	educare facio

Verbum Imperii conjugatur per omnes modos, personas et tempora sicut வளர்க்கிறேன்.

Verbum passivum

Præs	... வளர்க்கப்படுகிறேன்	...	educar.
Præt	.... வளர்க்கப்பட்டேன்	...	educatus sum.
Fut	... வளர்க்கப்படுவேன்	...	educabor.
Imp	... வளர்க்கப்படு	...	educare.
Inf	.... வளர்க்கப்பட	...	educari.
ger	... வளர்க்கப்பட்டு	....	educatus.
Part	.... வளர்க்கப்படுகிற, பட்ட, படும்	...	qui educatur ...
Neg.	... வளர்க்கப்படேன்	...	non educabor.

Optativus verbi வளருகிறது

வளருவேனாக, வளருவேனாகக் கடவது,	utinam crescam,
வளருவாயாக, வளருவாயாகக் கடவது,	crescerem,
... ... —	crevero,
நான், நீ, { வளருவதாக, வளருவதாகக் கடவது,	crescas,
அவன்.... { வளரக்கடவது, வளரக்கடவதாக,	cresceres,
	... ... — ...
நான், { வளர்ந்திருக்கக்கடவது, கடவதாக,	{ utinam creverim,
நீ... { வளர்ந்ததாகக்கடவது,	{ creveris.....................
நான், { வளர்ந்திருந்ததாகக்கடவது,	utinam crevissem ..
நீ... { வளர்ந்திருப்பதாகக்கடவது,	utinam crevero...

Subjunctivus si

நான், நீ... வளர்ந்தால், வளரில், வளருகிறது	si crescam,
—வளர்ந்தது—வளருவது உண்டானால்.	crescerem,
வளருவேனே யானால், வளருவேனே யாகில்.	creverim,
வளருவாயானால், & c... வளருவாயாகில் ..	si crescas...
நான், நீ ...வளர்ந்திருந்தால்.	si creverim,
வளர்ந்தேனேயாகில் —ஆனால்....	si crevissem ...
வளர்ந்திருப்பேனே யாகில்—ஆனால்...	

நான் / நீ / அவன் { * வளராதால், வளராவிட்டால்
nisi crescam, si non creverim...
வளராதிருந்தால், வளராமலிருந்தால்,
வளராதே போனால், வளராவிட்டால், } nisi creverim, crevissem
வளராதிருந்தேனே யாகில் . . . .
வளராதிருப்பேனே யாகில் . . . .

Si illi Subjunctivo addas உம். habebis
quamvis cum subjunctivo Ex: நான், நீ...வளர்ந்தாலும்
quamvis crescam, crescerem ..வளர்ந்தேனானாலும்
quamvis crescerem Dicitur etiam வளர்ந்தபோதிலும்.

மேலுள்ளாங்கு 'வளர்' என்னும் வினைச்சொல் பெற்றுள்ள பல்வேறு விகற்ப வடிவங்களை வீரமாமுனிவர் கூர்ந்து அறிந்து குறிப்பிட்டுள்ள திறன் மிகவும் வியக்கத்தக்கது முனிவர் தம் இலக்கண நூலில் சில விடங்களில் தமிழ்த் தொடர்களே யன்றி, விளக்கத்திற்காக இலத்தீன் தொடர்களும் தந்துள்ளார் இவ்வாறு தமிழிலக்கணம் இலத்தீன் வாயிலாக அனைத்துலகிற்கும் முனிவரால் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது.

---

* Illa vox vulgo sumitur pro வளராததினால்.

செந்தமிழ் இலக்கணச் சுருக்கம்

செந்தமிழ் இலக்கணச் சுருக்கம் என்னும் நூலுக்கு வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில்

"Compendium
Grammaticæ De Elegantiori
Linguæ Tamulicæ Dialecto,
செந்தமிழ் Dicta,
Et Tamulicæ Poeseos Rudimentis."

என்று பெயர் குறிப்பிட்டுள்ளார். இலத்தீன் மொழியில் 'Compendium' என்றால் 'சுருக்கம்' என்று பொருளாம். இந்தச் செந்தமிழ் இலக்கணம், 30 பக்கம் அளவு கொண்ட ஒரு சுருக்கமான நூல். இது, புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் 1843-ஆம் ஆண்டு அச்சிடப் பெற்றது.

இச்சிறிய நூல் இரண்டு பாகங்கள் உடையது. முதல் பாகம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகியவை பற்றியது. இரண்டாம் பாகம் யாப்பிலக்கணம் பற்றியது. முதல் பாகத்தில் மூன்று பெரும் பிரிவுகளும் ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகளும், இரண்டாம் பாகத்தில் நான்கு பெரும் பிரிவுகளும் ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகளும் உள்ளன. இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகளை அறிந்துகொள்ளும் வகையில், நூலில் கொடுக்கப்பட்டுள்ள பொருளடக்க அட்டவணை அப்படியே வருமாறு:—

Index Compendii

Pars Prima

Caput III. இனம், id est, de earminum subdivisione

I. தாழிசை; II. துறை; III. விருத்தம்.

Caput IV. De Arte Tamulcæ poeseos

I. I· De dictione poeticâ.
II. De fictione poeticâ.
III. De invocatione.
IV. De diversis poeseos speciebus.

இந்நூலின் (Compendium) மாதிரிக்காக, முதல் பாகத்தில் ஒரு பகுதியும் இரண்டாம் பாகத்தில் ஒரு பகுதியும் காண்பாம். முதலில், முதல் பாகத்தின் தொடக்கத்தில் எழுத்துக்கள் சாரியை பெறுவதைப் பற்றிக் கூறும் முதல் பத்தி வருமாறு:—

"Præter ea quæ in linguæ vulgaris grammaticâ de litteris dicta sunt advertendum est, in sublimiori dialectu, litteras, brevibus addito கரம், et longis காரம், vocari hoc modo: அ dicitur அகரம், ஆ, ஆகாரம், த, தகரம், தா, தாகாரம், et sic de aliis. Nunquam in usum veniunt charecteres Grandonici; sed cæteris litteris additur consonans ஃ, ஆய்தம் dicta, quæ pronunciatur quasi consonans g gutturalis non bene expressa; nunquam jungitur vocali, sed, per occursum suum cum alia consonanti, reddit longam præcedentem syllabam, quanquam naturâ brevem. Sic இது, si scribatur இஃது, igdu, fit metro longum."

அடுத்து, இரண்டாம் பாகத்தில் ஆசிரியப் பாவைப் பற்றிக் கூறும் பகுதி வருமாறு:—

ஆசிரியப் பா

"Hoc versuum genus, அகவல் etiam dictum, ut proprios admittit pedes secundæ classis, et ஆசிரியத் தளை; attamen admittit pedes etiam tertiæ classis, et தேமாங்கனி et புளிமாங்கனி ex quartâ classi; sequitur etiam வெண்டளை et வஞ்சித்தளை. Numerus versuum et pedum pro quâlibet strophe non est determinatus. Pro numero pedum et versuum diversa assumit nomina. Bène cadit ஏ in fine strophes."

செந்தமிழ் இலக்கணச் சுருக்கம் என்னும் இந்த நூலை ஆசிரியர் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் 1730-ஆம் ஆண்டிலேயே எழுதி முடித்துவிட்டார். ஆனால், ஒரு நூற்றாண்டு காலத்துக்குமேல் இஃது அச்சிடாமல், கையெழுத்துப்படியாகவே பலராலும் பல படிகள் எழுதிப் படிக்கப்பட்டு வந்தது. அதனால் ஒரு படிக்கு மற்றொரு படி பிழைகள் மலியத் தொடங்கின. ஒவ்வொரு படியில் சில செய்திகள் விடுபடவும் நேர்ந்தன; சில செய்திகள் மாறுதலுற்றன. பின்னர் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கியவர்கள் அரிதின் முயன்று பல படிகளையும் ஒத்திட்டுப் பார்த்து இயன்றவரையும் திருத்தம் செய்து பதிப்பிக்க வேண்டிய பாட்டிற்கு ஆளாயினர். இச் செய்தியை, அடுத்துள்ள 'A Grammar of The High Tamil' என்னும் நூலைப் பற்றிய விளக்கப் பகுதியில் விவரமாகக் காணலாம்.

A Grammar of The High Tamil

'A Grammar of The High Tamil' என்னும் பெயருடன் ஆங்கிலத்தில் ஒரு நூல் உள்ளது. இந்த ஆங்கிலத் தொடருக்கு 'செந்தமிழ் இலக்கணம்' என்பது பொருள். வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம் பற்றி இலத்தீன் மொழியில்

Compendium
Grammaticæ De Elegantiori
Linguæ Tamulicæ Dialecto,
செந்தமிழ் Dicta,
Et Tamulicæ Poeseos Rudimentis.

என்னும் தலைப்புப் பெயருடன் எழுதியுள்ள நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பே, இந்த 'A Grammar of The High Tamil' என்னும் ஆங்கில நூலாகும்.

இப்படி யொரு நூல் புதுச்சேரி பிரெஞ்சு கலைக் கழகத்தில் இருக்கிறது. இந்நூலின் பெயர், மொழி பெயர்த்தவரின் பெயர், நூல் அச்சான இடம், மொழிபெயர்த்து அச்சிட்ட காலம் முதலியவற்றை யறிவிக்கும் முகப்புப் பக்கம் (Title page) இந்நூலில் காணப்படவில்லை. ஒருவேளை அது கிழிந்துபோய் விட்டிருக்கலாம். கிடைத்துள்ள படியின் (பிரதியின்) தொடக்கத்தில், 'Translator's Prefacc' என்னும் தலைப்பில் மொழிபெயர்ப்பாளர் முகவுரையும், அதை யடுத்து, 'The Author's Introduction' என்னும் தலைப்பில் ஆசிரியர் வீரமாமுனிவரது முன்னுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் காணப்படுகின்றன. மொழிபெயர்ப்பாளரின் முகவுரையில்,

'A Grammar of High Tamil' என்னும் பெயர் காணப்படுதலால், அதுதான், இந்த ஆங்கில மொழி பெயர்ப்புக்கு மொழி பெயர்ப்பாளர் இட்ட பெயர் எனக் கொள்ளப்பட்டது. மொழிபெயர்ப்பாளர் தமது முகவுரையில் பின் வரும் கருத்துக்களைத் தெரிவித்திருப்பது மிக்க பயனளிப்பதாயுள்ளது.

"பெஸ்கியின் கொடுந் தமிழ் இலக்கணம் முன்னமேயே அயல் நாட்டினர் ஒருவரால் இலத்தீனிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நடைமுறையில் பயனளித்து வருகிறது. இந்த நூல் மாணவர் செந்தமிழ் இலக்கணம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய செய்திகளைக் கொண்டுள்ளது...

...... இந்த இலக்கண நூல் கல்லூரி மாணவர்கட்காக எழுதப்பட்டது; அம்மாணவர்களுட் சிலர், இலத்தீனில் எழுதப்பட்டுள்ளதைச் சிறிதும் கடுமையின்றி எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவர்; பலர் ஏறத்தாழப் போதுமான அளவு படித்துணரத் தக்கவர்; இருந்தபோதிலும், இந்நூற் செய்தி ஓரளவு அருமைப்பாடுடைய இலக்கணம் பற்றியதாயிருத்தலின், மாணுக்கரின் உழைப்பை எளிமைப்படுத்துவதற்காக இந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படலாயிற்று........

.... பெஸ்கியவர்கள் இந்நூலை இலத்தீனில் எழுதி ஏறக்குறைய ஒரு நூற்றூண்டு காலம் ஆன பின்னரும் அச்சிடப்படாமல் இருந்தது. பெஸ்கியின் இலத்தீன் கையெழுத்துப் படியைப் பார்த்துப்

பலரும் பல படிகள் எழுதிப் படித்துவரலாயினர். இவ்வாறு பலர் கைப்பட்டதால் தெளிவு குறைந்ததுடன் பிழைகளும் மலிந்து காணப்பட்டன. பல்வேறு இலத்தீன் கையெழுத்துப் படிகளையும் ஒத்திட்டு நோக்கித் திருத்தம் செய்த பின்னரே இந்த ஆங்கில மொழிபெயர்ப்புவேலை மேற்கொள்ளப்பட்டது. இது, ஏறக்குறைய, சரியான-திருத்தமான செய்திகளைக் கொண்டுள்ளது......"

மேலுள்ள கருத்துப்பட பல செய்திகள் மொழிபெயர்ப்பாளரின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த முகவுரையிலிருந்து, பயனுள்ள பல குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவையாவன:—

(1) தமிழ் தெரியாத ஐரோப்பியக் கல்லூரி மாணவர்கள், வீரமாமுனிவர் தமிழ் இலக்கணம் பற்றி இலத்தீனில் எழுதிய நூல் வாயிலாகத் தமிழ் மொழியைப் பதினெட்டாம் நூற்றூண்டிலிருந்தே கற்றுவந்துள்ளனர்.

(2) வீரமாமுனிவர் தமிழ் இலக்கணம் பற்றி இலத்தீனில் எழுதிய நூற்கள் ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டிருந்தன.

(3) இந்திய, ஐரோப்பியக் கல்லூரிகள் சிலவற்றில் கற்ற ஐரோப்பிய மாணுக்கர்கள் சிலர்க்குத் தமிழ் மொழியும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

(4) பெஸ்கி, தமிழிலக்கணம் பற்றி இலத்தீனில் எழுதிய நூலின் கையெழுத்துப் படி,

அச்சிடப்படுமுன்னரே, பலரால் பல படிகள் எடுத்துப் படிக்கப்பட்டு மிகவும் செல்வாக்கு பெற்றிருந்தது.

(5) பெஸ்கி இலத்தீனில் எழுதிய கொடுந் தமிழ் இலக்கணம் முதலில் ஆங்கிலத்தில் பெயர்க்கப் பட்டுப் படிக்கப்பட்டு வந்தது; பின்னர்ச் செந்தமிழ் இலக்கணம் பெயர்க்கப்பட்டது.

இவ்வாறு இன்னும் பல பயனுள்ள குறிப்புக் களை மொழிபெயர்ப்பாளர் முகவுரை அறிவிக்கிறது. இதிலிருந்து, வீரமாமுனிவரின் படைப்புக்கள் தமிழ் மொழியை 'உலகத் தமிழ்' ஆக்கத் துணைபுரிந் துள்ளமை புலனாகும்.

மொழிபெயர்ப்பாளர் முகவுரையை யடுத்து,

THE AUTHOR'S INTRODUCTION

——— o ———

C. J. Beschi

To The Pious Missionaries of The Society of Jesuits

Greeting

என்னும் தலைப்புடன் ஆசிரியர் வீரமாமுனிவரின் முன்னுரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தரப் பட்டுள்ளது. இந்நூலைப் பற்றி ஒருசிறிது அறிந்து கொள்ள உதவும் வகையில், ஆசிரியர் முன்னுரையின் முதல் பத்தியிலுள்ள முதல் தொடர் அப்படியே வருமாறு: -

"When I last year presented you with a grammar of the common dialect of the Tamil language, with the view of aiding your labours as ministers of the gospul, I promised that I would shortly say something respecting the superior dialect; but my time being occupied by more important duties the work was deferred longer than I had at first expected."

மேலுள்ளவாறு தொடங்கிச் செல்லும் முன்னுரையின் முடிவில்,

Ides of September 1730

என்னும் தொடர் இறுதியாகக் காணப்படுகிறது. இது, ஆசிரியர் நூலை எழுதி முன்னுரை முடித்த காலம் என்பது வெளிப்படை.

1730-ஆம் ஆண்டில் இலத்தீன் மொழியில் 'செந்தமிழ் இலக்கணம்' எழுதி முடித்த வீரமா முனிவர், அதற்கும் முந்திய ஆண்டில் 'கொடுந்தமிழ் இலக்கணம்' இயற்றி யளித்திருப்பதாகத் தமது முன்னுரையில் கூறியுள்ளார். அங்ஙனமெனில், 1729ஆம் ஆண்டு 'கொடுந்தமிழ் இலக்கணம்' எழுதி முடிக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். ஆனால் முனிவர், தமது கொடுந்தமிழ் இலக்கண நூலின் முன்னுரை முடிவில்,

E Missiono Madurensi. 4, kal. Jan. 1728.

என அந்நூல் எழுதி முடித்த இடமும் காலமும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி பார்த்தால், 1728-இல்

கொடுந்தமிழ் இலக்கணம் முடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் காலக்கணக்கு முரண்பாட்டைக் கொண்டு, 1728-இல் கொடுந்தமிழ் இலக்கணமும் 1730-இல் செந்தமிழ் இலக்கணமும் எழுதிய ஆசிரியர், 1729-இல் வேறோர் இலக்கண நூலும் எழுதியுள்ளார் எனக் கொள்ளவேண்டியதில்லை. இரண்டாண்டுக்கு முன் கொடுந்தமிழ் இலக்கணம் எழுதினேன் என்று சொல்வதற்குப் பதிலாக, கடந்த ஆண்டு எழுதினேன் (when I last year presented you with a grammar of common dialect of the Tamil language) என ஓராண்டு முன்பின்னுகக் கூறிவிட்டார் முனிவர் என்ற அளவோடு அமைவு பெறவேண்டும். மற்றும், முனிவர் கொடுந்தமிழ் இலக்கணத்தை 1728-இல் எழுதி முடித்திருப்பினும், அது வெளியில் வந்து நடைமுறைப் பயனளிக்க ஓராண்டு காலம் (1729) ஆகியிருக்கக் கூடுமல்லவா?

இனி, Letters and Words, Versification என்னும் இரு பாகங்களையுடைய இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் மாதிரிக்காக, முதல் பாகத்தின் முதல் பிரிவிலுள்ள முதல் இயலின் முதல் பகுதி வருமாறு:—

Part The First.

Chap. 1.

Section The First.

Of Letters.

1. To the rules respecting letters which are given in my other grammar, and which are

equally applicable here, the following are added.

In naming the letters in this dialect, those which are short are distinguished by the affix கரம், and those which are long, by காரம்; thus, அ is termed அகரம், and ஆ, ஆகாரம்; த, தகரம் and தா, தாகாரம். Hence, Thiruvalluven says, அகர முதல வெழுத்தெல்லாம், & c. The alphabet begins with அ. In the Shen Tamil or higher dialect the Grantham characters are never used; but to the letters employed in the common dialect, one consonant is added, which is termed ஆய்தம், and is written thus ஃ: this letter resembles the consonant G, obscurely uttered, with a deep guttural sound : it has the force of a consonant, but is never joined with a vowel; the effect, therefore, of inserting it in any word, is to render the syllable which preceds it long by position, although by nature it be short. Thus, if அது be written அஃது, the first syllable becomes long in prosody, from its position before two consonants. Example.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

— o —

மேலே தரப்பட்டுள்ள பகுதி, வீரமாமுனிவர் எழுதிய இலக்கீன் பகுதியின் ஆங்கில மொழி பெயர்ப்பு என்பது நமக்குத் தெரியும். நாம் முன்பு

பார்த்துள்ள இலத்தீன் பகுதிக்கும் இந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்கும் இடையே சிறு சிறு வேறுபாடு இருப்பது எண்ணத்தக்கது. வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் எழுதிய 'செந்தமிழ் இலக்கணச் சுருக்கம்' என்னும் நூலைப்பற்றிய விவரம் முன்பு தரப்பட்டுள்ளது. (பக்கம்: 73 — 76). அங்கே, நூலின் முதல் பாகத்தின் முதல் இயலின் தொடக்கத்தில், எழுத்துக்கள் சாரியை பெறுவதைப் பற்றிக் கூறும் இலத்தீன் பகுதி (பக்கம் : 75) தரப்பட்டுள்ளது. அதன் மொழிபெயர்ப்புதான் மேலே தரப்பட்டுள்ள ஆங்கிலப்பகுதி. இலத்தீன் பகுதியில் இல்லாத சில செய்திகள் ஆங்கில மொழி பெயர்ப்பில் உள்ளன. 'அ' என்னும் எழுத்து 'கரம்' என்னும் சாரியை பெற்று 'அகரம்' என்று கூறப்படும் என்று மட்டும் இலத்தீன் பகுதி கூறுகிறது. ஆங்கில மொழி பெயர்ப்போ, இந்தச் செய்தியுடன், திருவள்ளுவர் அகர முதல வெழுத்தெல்லாம் என்று கூறியிருக்கிறார் என எடுத்துக் காட்டும் தந்துள்ளது. இந்த எடுத்துக்காட்டு இலத்தீன் பகுதியில் இல்லை. அடுத்து அதைத்தொடர்ந்து, இலத்தீன் பகுதியில், ஆய்த எழுத்துபற்றிக் கூறுமிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள 'இது, இஃது என்னும் சொற்கட்குப் பதிலாக, ஆங்கில மொழி பெயர்ப்பில் 'அது, அஃது' என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன; மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்பில், 'அஃது' என்னும் ஆட்சிக்கு எடுத்துக் காட்டாக,

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

என்னும் குறளும் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த எடுத்துக்காட்டு இலத்தீன் பகுதியில் இல்லை. இவ்வாறாக, இலத்தீன் பகுதிக்கும் ஆங்கில மொழிபெயர்ப்புக்குமிடையே சிறு சிறு வேறுபாடுகள் சில உள்ளன.

மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள வேறுபாடுகட்கும், மொழிபெயர்ப்பாளர் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு செய்திக்கும் தொடர்பு காணப்படுகிறது. அதாவது, 'பெஸ்கியின் இலத்தீன் கையெழுத்துப் படியைப் பார்த்துப் பலரும் பல படிகள் எழுதிப் படித்து வரலாயினர்' - என்று மொழிபெயர்ப்பாளர் முகவுரையில் கூறியுள்ள செய்தி ஈண்டு மீண்டும் நினைவுகூரத்தக்கது. மேலும், பலர் கைப்பட்டதால் தெளிவு குறைந்ததுடன் பிழைகள் மலிந்ததாகவும், பல்வேறு இலத்தீன் கையெழுத்துப் படிகளை ஒத்திட்டு நோக்கிய பின்னரே இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதாகவும் கூறியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்த முறையில்தான், 1843- ஆம் ஆண்டு புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்ற - இலத்தீன் மொழியிலுள்ள செந்தமிழ் இலக்கணச் சுருக்க நூலில் சில செய்திகள் விடுபட்டிருக்கவேண்டும். இதில் விடுபட்டுள்ள செய்திகள் வேறு கையெழுத்துப் படிகள் சிலவற்றில் இருந்திருக்க வேண்டும். அந்தப் படிகளைப் பார்த்தே

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கக் கூடும்.

அச்சிட்ட இடமும் காலமும்

யான் கண்ட இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் புதுச்சேரி பிரெஞ்சு கலைக்கழகத்தில் உள்ளது என்பதும், அதில் முகப்புப் பக்கம் இன்மையால் நூல் அச்சான இடமும் காலமும் தெரியவில்லை என் பதும் முன்னரே தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், இதே நூலின் வேறு படிகள் வேறு இடங்களில் இருக்கக்கூடும். அவற்றில், நூல் அச்சான இடமும் காலமும் பொறிக்கப்பட்டிருக்கலாம். அறிந்தவர்கள் தெரிவிப்பின், அடுத்த பதிப்பில் யான் சேர்த்துக் கொள்ளவியலும். இருப்பினும், இப்போதேகூட, நூல் அச்சான காலத்தை ஓரளவு உய்த்துணர்ந்து கூறலாம். 'பெஸ்கியவர்கள் இந்நூலை இலத்தீனில் எழுதி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் ஆன பின்னரும் அச்சிடப்படாமல் இருந்தது'—என்னும் செய்தி, மொழிபெயர்ப்பாளரால் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெஸ்கியவர்களோ, இந் நூலை இலத்தீன் மொழியில் 1730-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் எழுதி முடித்ததாகத் தம் முன்னுரையின் இறுதியில் தெரிவித்துள்ளார். அங்ஙனமெனில், பெஸ்கியின் இலத்தீன் கையெழுத் துப் படி ஏறக்குறைய (1730 + 100 = 1830) 1830-ஆம் ஆண்டு வரையிலும் அச்சிடப்படாமல் இருந்தது என்பது தெளிவு. பின்னர், இந்த இலத்தீன் படி, 1843-ஆம் ஆண்டு புதுச்சேரி

மாதாகோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது. என்னும் செய்தியை நாம் முன்னரே அறிந்து வைத்துள்ளோம். எனவே, ஆங்கில மொழிபெயர்ப்பு, இலத்தீன் படி புதுச்சேரியில் அச்சான 1843-ஆம் ஆண்டுக்கு முன்னரே அச்சிடப்பட்டுவிட்டது என்பது தெளிவு. அதாவது, 1830-ஆம் ஆண்டுக்கு மேல், 1843-ஆம் ஆண்டிற்குமுன் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் அச்சாகியது என உய்த்துணரலாம்.

வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் இலக்கணம் 1738-இல் தரங்கம்பாடியிலும், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் ஆகிய இரண்டும் 1843-இல் புதுச்சேரியிலும், Clavis என்னும் இலக்கணத் திறவுகோல் 1876-இல் தரங்கம்பாடியிலும் அச்சிடப்பட்டுள்ளன. எனவே, A Grammar of The High Tamil என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல், இந்த இரண்டு ஊர்களுள் ஏதாவது ஒன்றிலோ அல்லது சென்னையிலோ அச்சிடப்பட்டிருக்கலாம். முகப்புப் பக்கத்தோடு கூடிய வேறு படி (பிரதி) கிடைப்பின் உண்மை விளங்கிவிடும்.

வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதியுள்ள செந்தமிழ் இலக்கணத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பாகிய A Grammar of The High Tamil என்னும் இந்த நூல் போலவே, கொடுந்தமிழ் இலக்கணமும் 'A Grammar of The Low Tamil' என்னும் பெயரில் அயல்நாட்டினர் ஒருவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறிப் பயன்பட்டுவந்தது என்னும் செய்தி, A Grammar of The High Tamil

என்னும் நூலின் மொழிபெயர்ப்பாளர் முகவுரையில்* தெரிவிக்கப்பட்டுள்ளமை முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த A Grammar of The Low Tamil என்னும் நூல் எனக்குக் கிடைக்கவில்லை. இப்படியாக இன்னும் எந்தெந்த மொழிகளில் எத்தனை யெத்தனை நூற்கள் பெயர்க்கப்பட்டுத் தோன்றியுள்ளனவோ? அவை யாவும் கிடைப்பின் மிகவும் பயனளிக்கும். இந்த மொழிபெயர்ப்பு நூற்களை நோக்குங்கால், தமிழ்மொழி பரந்த அளவில் பல மொழியினராலும் படிக்கப்பட்ட பெருமைக்குரிய செய்தி புலனாகிறது.

* 'His Grammar of the low Tamil is already in general use....' '...The English version of Beschi's low Tamil grammar, which is the work of a foreigner..'

—A Grammar of The High Tamil, Translator's Preface, Paragraphs : 4, 8.

–Clavis (திறவு கோல்)–
செந்தமிழ் இலக்கணத் திறவுகோல்

Clavis Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis என்பது, நூலுக்கு ஆசிரியர் வீரமாமுனிவர் கொடுத்துள்ள முழு இலத்தீன் பெயராகும். Clavis என்ருல். திறவுகோல்; Humaniorum என்ருல், கல்வி - கலை; Litterarum என்ருல், இலக்கண நூல்; Sublimioris என்ருல், உயர்வு-சிறப்பு-மாட்சிமை; Tamulici என்ருல், தமிழ்; Idiomatis என்ருல், மொழி. எனவே, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையில், இந்த நூலினே, 'செந்தமிழ் இலக்கணத் திறவுகோல்' என அழகு தமிழில் அழைக்கலாம். வீரமாமுனிவரால் உயர் தமிழ் இலக்கணம் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ள இந்நூல், 1876-ஆம் ஆண்டு தரங்கம்பாடி மாதாகோயில் அச்சகத்தில் முதல் முறையாகப் பதிப்பிக்கப் பெற்றது. இதனே நூலின் முகப்புப் பக்கத்தால் (Title Page) அறியலாம். அது பின் வருமாறு:—

CLAVIS

Humaniorum Litterarum
Sublimioris Tamulici Idiomatis
Auctore
R. P. Constantio Josepho Beschio
Societatis Jesu,
In Madurensi Regno Missionario.
Tranquebar
Printed for A. Burnell
By The Evangelical Lutheran Mission Press.
1876.

இந்நூலைத் தரங்கம்பாடியில் பர்னல் (Burnell) என்பவர் பதிப்பித்திருக்கிறார். அமைப்பு, பிழை திருத்தம் முதலிய பதிப்பு தொடர்பான வேலைகளை 'இஃலெஃபெல்டு' (K. Ihlefeld) என்பார் அரிதின் முயன்று செய்திருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லீஸ் (F. W. Ellis) என்னும் அறிஞர், வீரமா முனிவரின் கையெழுத்துப்படிகளைத் துருவித் தேடித் திரட்டி வைத்திருந்தார். அவரிடமிருந்து டாக்டர் பாபிங்டன் (Dr. Babington) என்பார், Clavis என்னும் இந்த இலக்கண நூலின் கையெழுத்துப் படியைப் பெற்றுத் தம் நூலகத்தில் வைத்திருந்தார். அந்நூலகத்திலிருந்து பர்னல் இதனை விலைக்கு வாங்கி அச்சிற் பதிப்பித்தார். 1738-ஆம் ஆண்டு வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் இலக்கண நூலை முதல் பதிப்பாக அச்சிட்ட தரங்கம்பாடி மாதாகோயில் அச்சகம், இந்த நூலையும் முதல் பதிப்பாக அச்சிடும் பேற்றைப் பெற்றது. இந்தச் செய்திகளையெல்லாம், இந்நூலின் தொடக்கத்தில் பதிப்பாசிரியர் பர்னல் ஆங்கிலத்தில் எழுதியுள்ள பதிப்புரையினால் அறியலாம். அப் பதிப்புரை நூலிலுள்ளாங்கு வருமாறு:—

Preface.

Beschi's Treatise on the so-called High Tamil and on Tamil Poetry and Rhetoric is here printed for the first time from a Manuscript corrected

by the Author himself. The Rev. K. Ihlefeld has undertaken the very laborious task of editing it precisely as it stands in the Manuscript, for corrections could hardly be allowed in this case. The Tamil Quotations have been carefully revised according to the Text given in Beschi's தொன்னூல்.

This Manuscript was purchased on the sale of Dr. Babington's Library, and he got it from Mr. F. W. Ellis who had a search made, about the beginning of this Century, for Beschi's Manuscripts.

The Tranquebar Mission Press which printed the first Edition of Beschi's Kodun - Tamil Grammar in 1738, now also publishes the first Edition of his more important work.

Tanjore, 1876. A. B.

* * * *

அறிஞர்களின் ஆராய்ச்சிக்குப் பயன்படும் என்பதற்காக மேலுள்ள பதிப்புரை இவண் தரப் பட்டுள்ளது. வீரமாமுனிவரின் படைப்புக்கள் பொன்னேபோல் போற்றிக் காக்கப்பட்ட அருமை பெருமையை இந்தப் பதிப்புரையால் அறியலாம். மேலும், பர்னல் தம் பதிப்புரையின் இறுதியில் 'Tanjore, *1876*' எனக்குறிப்பிட்டிருப்பதை நோக் கின், அவர் தஞ்சாவூரில் இருந்துகொண்டு,

இஃலெஃபெல்டு (Ihlefeld) என்பவர் வாயிலாக இந்நூலைத் தரங்கம்பாடியில் பதிப்பித்துள்ளார் என்பதும் புலனாகிறது.

பிழைதிருத்தம் உட்பட 171 பக்கம் கொண்டுள்ளது இந்நூல். வீரமாமுனிவர் தமிழில் இயற்றியுள்ள தலைசிறந்த இலக்கண நூலான 'தொன்னூல் விளக்கம்' போலவே இந்நூலிலும், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பு, அணி என ஐந்து பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திலும் பல இயல்களும், ஒவ்வோர் இயலிலும் பல உட்பிரிவுகளும் உள்ளன. ஏறக்குறைய இந்நூல் தொன்னூல் விளக்கத்தைத் தழுவி இலத்தீனில் எழுதப்பட்டுள்ளது என்று கூறலாம். இனி, நூலிலுள்ள விவரங்களை அறிவிக்கும் பொருளடக்கம் (Index) நூலிலுள்ளாங்கு வருமாறு:—

INDEX

PARS I.

எழுத்ததிகாரம்.

Caput III.

De Mutatione Litterarum.

PARS II.

சொல்லதிகாரம்.

Caput I.

De Vocibus In Genere.

Caput II.

De Nomine.

1. De Casibus.
2. பகுபதம். Nomina Appellativa.
3. தொகை நிலை – தொடர் மொழி.
4. சுட்டும் வினவும். Pronomina.

Caput III.

De Verbo

1. முக்கால முற்றுவினை. De Praesenti, Praeterito et Futuro.
2. ஏவலும் வியங்கோளும்.
3. ஈரெச்சம். De Participio et Gerundio.
4. வினைக் குறிப்பு.

Caput IV.

இடைச் சொல்.

Caput V.

உரிச்சொல். Adverbia.

PARS III.

பொருளதிகாரம்.

Caput I.

உரிமை. Proprietates Locutionis.

1. கால வுரிமை. Proprietas Temporum.
2. இட வுரிமை. Locorum Proprietas.
3. பண் புரிமை. Conditionum Proprietas.
4. சொல்லுரிமை. De Proprietate Locutionis.

PARS IV.

யாப்பு. — Poeses:

Caput I.

De Pedibus Ac Allis Versui Necessariis.

1. அசை.
2. சீர். Pedes Versus.
3. தளை. Connexio Pedum.
4. அடி.
5. தொடை. Consonantia Versuum Unius Strophae inter se.
6. தொடை விகற்பம். Subdivisiones consonantiae Versuum.

Caput II.

செய்யுளியல். De Diversitate carminum.

Caput III.

பாவினம், De Subalternis Carminum Speciebus.

Caput IV.

PARS V.

அணி seu அலங்காரம் – De Tropis Ac Figuris Rhetoricae.

Caput I.

De Tropis seu சொல்லணி.

1. மறிநிலையணி.
2. சொல்மிக்கணி.
3. சொல்லெஞ்சணி.
4. சொல்லொப்பணி.

Caput II.

பொருளணி. De Figuris Sententiarum.

1. De Similitudine.
2. De Caeteris Sententiarum Figuris.

—— o ——

மேலுள்ள பொருளடக்க அட்டவணையைக் காணுங்கால், வீரமாமுனிவர் செய்துள்ள தமிழ் வளர்ச்சிப்பணி நன்கு புலப்படுகிறது. தமிழிலுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும், இலத்தீன் மொழியிலுள்ள இந்நூலின் வாயிலாக அனைத்துலகிற்கும் அறிமுகஞ் செய்துள்ள முனிவர்க்குத் தமிழினம் செய்யத்தக்க கைம்மாறு யாதோ ?

இனி, இந்நூலின் மாதிரிக்காக, ஐந்திலக்கணங்களிலுமிருந்து ஒவ்வொரு பகுதி காண்பாம். முதலில் எழுத்திலக்கணத்திலிருந்து 'குற்றிய லுகரம்' பற்றியுள்ள பகுதி வருமாறு:—

"குற்றிய லுகரம். Abbreviatio literae உ. Pro quo 1. உ tantum finale et unitum uni ex asperis, ut கு, சு, டு, து, பு, று, potest sic abbreviari: attamen si ante tale உ sit una simplex brevis, nulla interposita consonanti, non abbreviatur. Sic வெகு, பசு, நடு, மது, மறு etc. unde nec eliditur a sequenti vocali. Sic வெகு வரிது, பசு வகன்றது. நடு வறை, மது வுண்டான், மறு விலை etc. 2. Si autem pracedat vel longa vel brevis cum consonanti, seu ஆய்தம், vel plures syllabae, tunc உ abbreviatur et dicitur குற்றியலுகரம். Sic ஆறு, நாடு, வித்து, பஞ்சு, எஃகு, அஃது, உலகு, கபடு, etc. et tunc semper eliditur a sequenti vocali. ஆறில்லை, வித்தில்லை, எஃகுண்டு, கபடில்லை etc. 3. Si உ finale unitum sit literae alii ab asperis, ex. gr. வ, ut அறிவு, அவாவு, தீவு, தேய்வு etc. non est abbreviatum, sed integrum et dicitur முற்றுகரம். Semper tamen etiam hoc modo eliditur a sequenti vocali. Sic அறிவில்லை, தீவது, தேய்வுண்டு etc."

அடுத்து, சொல்லிலக்கணத்திலிருந்து, 'ஆகுபெயர்' பற்றியுள்ள பகுதி வருமாறு.—

"ஆகுபெயர் est vox figurate, quae ad synecdochen, metonymiam vel metaphoram reducitur,

et fusius dicemus, ubi de Tropis et Figuris P. V. Quinque autem numerant classes vocis ஆகுபெயர் dicae. 1. Quando venit pars pro toto. 2. Totum pro parte et est synecdoche. 3. Quando venit causa pro effectu. 4. Effectus pro causa et est metonymia. 5. Quando proprietas unius rei alteri applicatur et est metaphora, sic பூ நிழற் சோலை, ubi flos, i. e, pars venit pro toto i. e, arbore et dicitur சினையாகுபெயர். Sic புளியைத் தின்றான், ubi venit to tum pro parte i. e. arbor pro ejus fructu et est முதலாகுபெயர். Sic ஞாயிறு பட மலருந் தாமரை, ubi venit sol pro radio i. e. causa pro effectu — காரண வாகுபெயர். Sic ஒளி யெழுந்தது, lux pro sole, effectus pro causa காரிய வாகுபெயர். Sic tandem குவளை நோக்கின, முல்லை நகைத்தன, ubi aspicere et videre, quae sunt proprietates hominum, aptantur per metaphoram floribus, unde est பண்பாகுபெயர்".

மூன்றாவதாக, பொருளிலக்கணத்திலிருந்து, 'குறிஞ்சித்திணை' பற்றியுள்ள பகுதி வருமாறு:—

"குறிஞ்சி - Deus : குமரன்; rex : பொருப்பன், வெற்பன், சிலம்பன், et regina குறத்தி, கொடிச்சி. Incolae : குறவர், கானவர், குறத்தியர், Aves : psittacus, pavo Animalia : tigris, leo, ursus, elephas. Oppidum : சிறு குடி. Aqua : fluvius, fontes. Flores et arbores : வேங்கை, குறிஞ்சி, காந்தள், சந்தனம், தேக்கு, அகில், அசோகு,

புன்னை. Frumenta, quae comedunt : semina arundinis மூங்கில் dictae; Oryzac species, quae ஐவனம் et quae தோரை dicitur; insuper panicum. Tympanum : தொண்டகம். Cithara : குறிஞ்சி யாழ். Musica : குறிஞ்சி யிசைப்பாட்டு. Officia : serere agros, e panico aves arcere, mel extrahere, radices bulbosas ad cibum evellere, lavare se in fontibus etc."

அடுத்தாற்போல், யாப்பிலக்கணத்திலிருந்து 'மோனை' பற்றியுள்ள பகுதி வருமாறு:—

"மோனை. Dixi supra மோனை fieri, quando in eodem versu repititur prima illius syllaba : addo, quod, etiamsi non veniat illa eadem, satis est, si veniat aequivalens. Ad hoc autem aequivalere dicunt inter se அ, ஆ, ஐ, ஔ; item இ, ஈ, எ, ஏ; item உ, ஊ, ஒ, ஓ. Item ex consonantibus ச cum த; ஞ cum ந et ம cum வ. Quare si in principio versus veniat v. g. சிகரம், erit மோனை, si inde cursu veniat, சினம், சீயம், செரு, சேனை vel etiamsi venerit தினை, தீபம், தெரு, தேசு, et sic de caeteris."

இறுதியாக - ஐந்தாவதாக, அணியிலக்கணத்திலிருந்து 'உருவக அணி' பற்றியுள்ள பகுதி வருமாறு:—

"உருவகம். Haec figura quoque est similitudinis species; fit enim, quando it a similitudinem

afferimus, ut nec causam similitudinis, nec formam, explicemus, sed tantum cum similitudine objectum, quod illi comparamus, quod tanquam similitudini adjacens ante ponitur; si enimpostponeretur similitudini, esset உவமைத் தொகை, ut supra No. 22. Quare si dicam பவளம் போலுஞ் செவ்வாய், quia venit et causa et forma similitudinis est விரிவுவமை. Si omissa causa dicatur: பவளம் போலும் வாய், est தொகை யுவமை. Si ablatis et causa et forma, dicam : பவளவாய், est உவமைத் தொகை. Si dicam வாய் பவளம், est உருவகம். Sic சொன்மது, கை முகில். தேம்பாவணி விருத்தம் :

"உள்ளிய தவநவ் வேறி யூக்கநீண் மரத்தை நாட்டி
விள்ளிய வன்பு முட்கும் வியனிரு பாயும் பாய்த்தித்
தெள்ளிய வரக்கால் வீசத் தியானமீ காமனுக
வள்ளிய வினைநீ ரீர்த்தூர்ந் தரிதில்வீட் டுலகிற்
சேர்வார்".

மேலே காட்டப்பட்டுள்ள பகுதியில், வீரமாமுனிவர் தாம் இயற்றிய தேம்பாவணி என்னும் காவியத்திலிருந்து உருவக அணிக்கு எடுத்துக்காட்டு தந்திருப்பதைக் காணலாம். இதுபோலவே, தம் திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய நூற்களிலிருந்தும் எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளார். 'சோறு பொங்கித் தின்னு, சொந்தக் கவி பண்ணு' என்றபடி இது மிகவும் பாராட்டத்தக்கதே.

பரமார்த்த குருவின் கதை

இந்தக் கதை நூலை வீரமாமுனிவர் தமிழிலும் இலத்தீனிலும் எழுதியுள்ளார். இந்நூல் முதல் முதலாகப் புதுவை மாதாகோயில் அச்சகத்தில் 1845-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. அதே அச்சகத்தில் 1952-ஆம் ஆண்டிலும் இது பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நூலின் பெயர் முதலில் இலத்தீனிலும் பின்னர்த் தமிழிலும் கொடுக்கப் பட்டுள்ளது. அதேபோல் நூலின் உள்ளே கதைகளும் முதலில் இலத்தீனிலும் பின்னர்த் தமிழிலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அதிலும், நூலின் இடக்கைப் பக்கத்தில் இலத்தீன் பகுதியும் வலக்கைப் பக்கத்தில் தமிழ்ப் பகுதியுமாக மாறி மாறித் தரப் பட்டுள்ளன.

இனி, நூலின் பெயரைப் பற்றியும் பதிப்பைப் பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ள நூலின் முகப்புப் பக்கம் (Title Page) அதிலுள்ளாங்கு அப்படியே வருமாறு:—

FABULA

De Ethnicorum Magistro
Paramartaguru Dicto,
A. P. Josepho Constantio Beschi
Societatis Jesu
Tamulica Lingua Scripta
Et Ab Ipso Auctore In Latinam Versa

வீரமாமுனிவர்

தமிழிலும் இலத்தீனிலுந் தந்தபடி

ஆராய்ந்து சுத்தப் பிரதியாக்கப்பட்ட

பரமார்த்த குருவின் கதை

Pudicherii

E typographio Missionariorum Apostolicorum

Congregationis Missionum ad Exteros.

1845

Cum Superiorum permissu.

*　　*　　*　　*

இது, முதல் பதிப்பின் முகப்புப் பக்கமாகும். Fabula என்றால் கதை. இந்நூலின் இறுதியில், 'பரமார்த்த குருவின் கதை முற்றிற்று.' என்ற தொடர் உள்ளது. 1845-ஆம் ஆண்டில் அச்சான பதிப்பில் 41 பக்கங்கள் உள்ளன. இதே நூல், 1952–ஆம் ஆண்டுப் பதிப்பில் 67 பக்கங்களாக நிரவல் பெற்றுள்ளன.

நூலில் கதைகள் தொடங்கப்படுவதற்குமுன் ஆசிரியர் முன்னுரை இலத்தீன் மொழியில் எழுதப் பட்டுள்ளது. கதைகள் இலத்தீன், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இருந்தாலும், ஆசிரியர் இலத்தீன் மொழியில் மட்டும் முன்னுரை எழுதியுள்ளார். அவர் தமது முன்னுரையில் பின்வரும் கருத்துக் களைத் தெரிவித்துள்ளார்.

'தமிழகத்தில் அலுவல் பார்க்கும் வெள்ளையர்கள் தமிழ் கற்பதற்குத் துணைபுரியும் பணியின் ஒரு பகுதியாக இந்நூலைப் படைக்கிறேன். இங்கே சுற்று வட்டாரத்தில் வழங்கும் நகைச்சுவை ததும்பும் கதைகளைத் தமிழ்மொழி மரபு கெடாமல் இந்நூலில் எழுதியுள்ளேன். புதிதாகத் தமிழ் கற்கும் வெள்ளையர், வெற்றுக் கருத்துக்களைப் படிப்பதனினும், நகைச்சுவைக் கதைகளைப் படிப்பதில் ஆர்வமும் ஊக்கமும் மிகுதியாகக் கொள்வர். இதனால், கதைக்கும் கதையாகிறது; தமிழ்மொழி—இலக்கணம் கற்பதற்கும் வழியாகிறது; அதாவது, ஒரே நேரத்தில் சுவைக்கவும் கற்கவும் முடியும். மற்றும், தமிழ் கற்கும் வெள்ளையர்க்குத் துணையாயிருப்பதற்காகக் கதைகள் இலத்தீனிலும் தரப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் ஏற்படும் ஐயங்களை இலத்தீன் பகுதியைக் கொண்டு தெளிவுசெய்து கொள்ளலா மல்லவா? எனவேதான் இருமொழிகளிலும் எழுதி இந்நூலை அமைத்தேன்.'

மேலே தரப்பட்டுள்ள செய்தி, வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதியுள்ள முன்னுரையின் நேர்மொழிபெயர்ப்பன்று; அதைத் தழுவி ஓரளவு சுருங்கத் தரப்பட்டதேயாம். இனி அந்த இலத்தீன் முன்னுரை நூலிலுள்ளாங்கு வருமாறு:—

EXCERPTA

E PRAEFATIONE

REVERENDI PATRIS J. C. BESCHII

Cum amanuensium ignorantia partim, partim desidia, factum sit ut e pluribus vulgaris Tamulicæ linguæ libris, ne paginam quidem ad orthographiæ erroribus immunem reperire possimus, quod sane tyronibus negotium ac damnum parit, non abs re censui typis mandare familiaris Tamulici sermonis veluti exemplar, quo tyrones et dictionum usus et syntaxeos leges sub oculis habere, et manibus tractare possent, et in quo servarentur omnia quæ in vulgaris orthographiæ legibus vigent. Placuit ad hoc eligere fabulam satis facetam et in his regionibus celebrem, ut utile dulci commiscendo, fastidio satis ac tædio plenum hujus linguæ studium levare, ac hilari illitum fuco concinnare possem, quo animos alliceret simul et oblectaret. Ad faciliorem tyronum usum omnia latine reddidi; sed quantum licuit Tamulicis verbis consonantiam assequi conatus sum.

இந்நூலில் மொத்தம் எட்டுக் கதைகள் உள்ளன. அவை: (1) ஆற்றைக் கடந்த கதை, (2) குதிரை முட்டை வாங்கின கதை, (3) வாடகை மாடேறிப் பிரயாணம் போன கதை, (4) குதிரை பிடிக்கத் தூண்டில் விட்ட கதை, (5) குதிரை மேனின் றூருக்குப் போன கதை, (6) பிராமணன் சொன்ன புரோகிதக் கதை, (7) குதிரையிலிருந்து விழுந்த கதை, (8) குருவைச் சேமித்த கதை, என்பனவாகும். இவை முறையே இலத்தீன் மொழியில், (1) Transitus Fluvii, (2) Emptio Ovi Equini, (3) Actum Conducto Bove Iter, (4) Piscatura Equi, (5) Iter In Equo, (6) Prophetia Brachmanis, (7) Lapsus Magistri ex Equo, (8) Magistri Sepultura, எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூற் கதைகள் எட்டும், பரமார்த்த குரு என்னும் ஆசிரியர் — அறிவாற்றல் இல்லாத மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்னும் மூட மாணுக்கர் ஐவர்-ஆகியோரைப் பற்றியன வாகும். படிக்கப் படிக்கப் பெருநகைப்பு உண்டாக்கும் சுவை மிக்க இனிய கதைகள் இவை. மாதிரிக்காக, நாலாவதாகிய 'குதிரை பிடிக்கத் தூண்டில் விட்ட கதை' என்னும் கதையை இவண் காண்பாம். நூலிலுள்ளவாறே, இடக்கைப் பக்கம் இலத்தீன் பகுதியும், வலக்கைப் பக்கம் தமிழ்ப் பகுதியும் நேருக்கு நேர் வருமாறு:—

QUARTA FABULA
Piscatura Equi

Magister et discipuli postero die æstus timore, ad cantum galli, paratis omnibus, discessere. Sed quia lento gressu incedebant, nondum tres leucas perfecerant, et jam solem altius ascendisse videntes in refrigerante arboreto substiterunt. Dum ibi tantisper quiescerent, Mileixen dictus, ad secessum abiens, in proximum stagnum sibi pedes lavatum ivit.

Super ejus stagni ripam Ayenari fanum erat, ibique novissime equus grandis, opere fictili, ex voto delatus et positus fuerat. Cum autem stagnum aqua plenum esset, et aqua admodum clara, ibi in stagno reflexam fictilis equi figuram Mileixen videns, in aqua equum sistere admiratus est. Verum cum videret eum fictili equo colore, crassitudine, altitudine, ac figura omnino similem esse, occurrit illi dubium, num umbra ipsius foret. Sed licet occurrerit illi hoc dubium, cum ex motu aquæ a vento tunc flante agitatæ, et illa imago moveretur, equus autem super ripam immobilis persisteret, pro certò habuit equum in aqua diversum esse et vivum. Deinde quasi illum fugare vellet, clamando in eum lapides jecit.

நாலாவது

குதிரை பிடிக்கத் தூண்டில் விட்ட கதை

மறுநாள் குருவுஞ் சீஷரும் வெயிலுக்குப் பயந்து கோழி கூவினவுடனே ஆயத்தஞ் செய்து புறப்பட்டார்கள். தளர்ந்த நடையாய்ப் போகிறதனு லின்னங் காத வழி முடியாமுன்னே வெயிலேறி னதைக் கண்டு ஒரு குளுஞ் சோலையி லிறங்கினுர்கள். அங்கே இளைப்பாறிக் கொண்டிருக்கையில் மிலேச் சன் என்பவன் வெளிக்குப் போய்ச் சமீபமாய் இருந்த ஏரியிற் கால் கழுவப் போனுன்.

கரையின் மேலே ஐயனுர் கோயிலிருந்தது. அதிலே நவமாய் மண்ணுற் சுட்ட பெரியதொரு குதிரை நேர்த்திக் கடனுய்க் கொண்டுவந்து வைத் திருந்தது. ஏரி நிறைந்ததாகவுந் தண்ணீர் தெளிந்த தாகவு மிருந்ததால் அந்த மண் குதிரை நிழலை ஏரியில் மிலேச்சன் கண்டு தண்ணீருக்குள்ளே குதிரை நின்றதென் றதிசயப்பட்டுக் கரையில் நின்ற மண்குதிரைக் கொத்த நிறம் பருமமுயரஞ் சாய லிருக்கக் கண்டதினுல் அதன் நிழலாக்குந் தண்ணீரிலே தோன்றின தென்ற சுகை வந்தது. வந்தாலு மப்போதடித்த காற்றினுலே தண்ணீரலைந் தசைய அதிலே தோன்றின குதிரையுமசைந்திருக்க, கரைமேற் குதிரைக்கு ஆட்டஞ் சற்று மில்லாதிருக் கக் கண்டு, நீருட் குதிரை வேறென்றும் உயிருள்ள தென்றும் நிச்சயித்தான். பின்னையு மதை யோட்டி னுற்போலே கூப்பிட்டுக் கல்லா லெறிந்தான். அதினு

Quo aqua adhuc magis commota, equus quoque caput elevare, pedibus calcitrare, et toto corpore subsaltare illi visus est, unde timore, perculsus ad cæteros veniens omnia, quæ viderat, narravit.

Ad hoc omnes subito exsurgentes, illucque advolantes ac omnes circumspicientes, vera esse quæ Mileixen dixerat cognoverunt. Subinde inito consilio quo modo eum comprehendere possent, cum nullus in aquam descendere vellet, rejectis diversis plurium consiliis, in eo convenerunt, optimum esse eum piscis instar hamo piscari.

Quare pararunt omnia : pro hamo falcem, quam ex illis unus habebat, pro esca oryzam coctam quam linteo ligatam ad iter attulerant pro hami fune fasciam, quam magister capiti circumligabat, sumpsere. Hoc modo oryzam, in eaque falcem illa fascia ligatam, in aquam, ubi equi figura apparebat, projecerunt. Interim cum, ex gravi cadentis oryzæ impetu, undæ multum agitarentur, et ex hoc equus ibi apparens sinuose movere se, ac subsaltare visus esset, omnes timendo aufugere. Unus tantum, qui fasciam manu detinebat, ea non dimissa, procul substitit.

Postquam undæ aliquantulum quieverunt, ille lente accedens projectam oryzam succutiens, ut sensit indicium quod dabant pisces grandiores linteum mordentes, ac attrahentes, nutu cæteros

லதிகமாகத் தண்ணீரலேய, குதிரையுந் தலையெடுக் கவுங் காலுதைக்கவும் உடலெல்லாம் பதைத்துத் துள்ளவு மிவனுக்குத் தோன்றினதினு லஞ்சி மற்ற வர்களிடத்தி லோடிவந்து கண்டதெல்லாஞ் சொன்னன்.

இதுக்கெல்லாருந் திடீரென் றெழுந்தோடிச் சுற்றிப் பார்க்க, மிலேச்சன் சொன்னது மெய் யென்று கண்டுகொண்டார்கள். இனி அதனைப் பற்றும்படிக் காலோசனை செய்துகொண்டு தண் ணீரி லிறங்கிப் பிடிக்க ஒருவருஞ் சம்மதிக்க மாட் டாததினுல் அவனவ னினைத்த பலவகையு மறுத்து நீக்கி, தூண்டில் விட்டு மீனைப் பிடிக்கிறதுபோலே இதையும் பிடித்துக் கரைமேலே இழுக்கிறது நல்ல உபாய மென்றிதிலே நிலைகொண்டார்கள்.

தூண்டிலாக ஒருவன் வைத்திருந்த கருக்கரி வாளும், அதுக்கிரையாகத் தாங்கள் கொண்டுவந்த கட்டு சாதமும், தூண்டிற் கயிறுகக் குரு கட்டியிருந்த தலைப்பாகு மெடுத்துக்கொண்டு ஆயத்தம் பண்ணி னுர்கள். இத்தன்மையே சாதத்துக்குள்ளே கருக் கரிவாளை வைத்துத் தலைப்பாகோடே கட்டிக் குதிரை தோன்றுகின்ற இடத்தி லெறிந்தார்கள். அது தொப்பென்று விழுந்த விசையால் தண்ணீர் மிகவுந் தளம்ப அங்கே தோன்றின குதிரையுந் துள்ளி நெளிந்து குதிக்கிறதாகக் கண்டதுபோல் எல்லாரும் பயந்தோடினுர்கள். முன்றுனையைப் பிடித்திருந்த ஒருவ னதைக் கைவிடாமல் அடைசி நின்றுன்.

குளத்தலை அமர்ந்த பின்பு மெள்ளவணுகி விட்ட கட்டு சாதத்தை அசைக்க, குளத்துப் பெரிய மீன்கள் சிலையைக் கடித்திழுத்த சன்னையைக் கண்டு

advocans : Ecce, inquit, jam equus mordet escam. Post aliquod tempus, cum fasciam attraheret, jamque linteo disscisso, oryza diffluxisset, falx fascia ligata in fundo stagni reptili plantæ irretita adhæsit. Tunc illi : Quoniam jam, inquiunt, hamus ori equi adhæserit, equus noster est. Sic summa lætitia clamantes, simul omnes fasciam magna vi attrahebant, qua, utpote vetusta, facile in medio rupta, omnes retrorsum ceciderunt.

Ea occasione, qua sic ceciderant, advenienti cuidam viro recto, et quid hoc rei esset interroganti, omnia ordine narraverunt. Ad hæc ille : Possibilis estne, inquiens, adeo magna in orbe simplicitas? linteo cooperiens fictilem equum, qui super ripam erat, equum in aqua quoque disparuisse ostendens, errorem iis exemit.

Tunc illi, ostenso magistro, cum ob ejus ætatem nimis provectam, ei equo omnino opus esset, et deesset pecunia ad hoc necessaria, narraverunt illi quomodo equinum ovum emissent, quomodo ejus jacturam passi fuissent, ac tandem molestiam, qua in conductione bovis experti sunt. Ille videns eos omnes esse viros sine dolo simplices, commiseratione tactus : Mihi, inquit, claudus est; revera senio confectus, attamen vestris itineribus aptus ; ad hoc pecunia nulla necessaria est ; gratis dabo : venite ad oppidum meum. Hæc illuc condixit.

கைச்சைக்கினையால் மற்றவர்களை யழைத்துக் குதிரை யிதோ இரை கடிக்குதென்றான். சற்று நேரம் போனபிற்பாடு தலைப்பா கிழுக்கச் சீலையுஞ் சாதமும் போனதினாலே தலைப்பாகோடே கட்டின கருக்கரிவாள் கீழே படர்ந்திருந்த பெருங் கொடியிலே மாட்டிக் கொண்டது. குதிரை வாயிலே தூண்டில் மாட்டின போதே குதிரை நம்மதென்று சந்தோஷமாய்க் கூப்பிட எல்லோருங் கூடித் தலைப்பா கிழுக்க, அது பழைய தாகையி லற்றுப் போக, ஒருமிக்க எல்லோரும் மல்லாக்காய் விழுந்தார்கள்.

இப்படி அவர்கள் விழுந்த தறுவாயில் ஒரு கிரேஸ்தன் வந்து என்ன என்று கேட்க, எல்லாத்தையு மொழுங்குபடச் சொன்னார்கள். அதற்கவனிந்த மிலேச்சத்தன முண்டோ வென்று கரைமேலிருந்த மண் குதிரையைச் சீலையாலே மறைக்க, நீருட் குதிரையு மறைந்தது காட்டி அந்த மயக்கத்தை நீக்கினான்.

அப்போதவர்கள் குருவைக் காட்டி, தளர்ந்த வயதாகையில் அவசியமாய் வேண்டிய குதிரை கொள்ளப் பணமில்லாததினாலே அதின் முட்டை வாங்கினதும் அது சேதமாய்ப் போனதும், வாடகை மாட்டி னிமித்தமாகச் சஞ்சலம் வந்ததும், எல்லாம் விவரமாக அவனுக்குச் சொன்னார்கள். இவர்களைக் கபடறியாத நல்ல மனுஷரென்று மனதி லிரங்கி, எனக்கொரு நொண்டிக் குதிரை யுண்டு; கிழந்தான். ஆகிலு முங்கள்வகைப் பிரயாணத்துக் குதவும். அதற்குப் பணங்காசு தேவையில்லை. இலவசமாய்த் தருகிறேன். என் னூருக்கு வாருங்களென்று அழைத்துக்கொண்டு போனான்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கதையுரைநடைப் பகுதியில், ஆசிரியர் வீரமாமுனிவர், தமிழ்ப் புணர்ச்சியிலக்கண விதிகளையொட்டிச் சொற்களைப் புணர்த்தே எழுதியிருப்பதைக் காணலாம். மற்றும், நேர்த்திக் கடன், நிழலாக்கும், அடைசி நின்றான், சன்னை, சைக்கினை முதலிய தென் மாவட்ட வழக்குச் சொற்கள் முனிவரின் மொழி நடையில் காணப் படுவதும் குறிப்பிடத்தக்கது. 'நம்மது', 'கடிக்குது', எல்லாத்தையும்' என்பன போலக் கொச்சை யுருவங்கள் சிலவும் நூலில் ஆங்காங்கே தென்படு கின்றன.

வெள்ளையரிடையே தமிழ் பரப்புவதற்காக, ஆசிரியர் இலத்தீனிலும் தமிழிலுமாக இக்கதை நூலை எழுதியிருக்கும் அரும் பெரும் பணியை யார்தான் பாராட்டாமல் இருக்க முடியும்?

Dictionarium
TAMULICO - LATINUM

மேலே உள்ள இலத்தீன் தொடரை, 'திக்சியொா-னரியொம் தமுலிகோ - லத்திெனும்' என்று தமிழில் ஒலிக்கவேண்டும். 'தமிழ் - இலத்தீன் அகராதி' என்பது இதன் பொருள். இந்த இலத்தீன் பெயர்த் தலைப்புடன் தமிழ் - இலத்தீன் அகராதி யொன்று, புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு கலைக்கழகத்தில் (Institute Francais) உள்ளது. முதலில் தமிழ்ச் சொல்லும் அதனை யடுத்து அதற்கு நேரான இலத்தீன் சொல் விளக்கமும் தரப்பட்டுள்ள இவ்வகராதி, பெரிய அளவு கொண்ட 380 பக்கங்களை யுடைத் தாயிருக்கிறது. இந் நூல் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை; அச்செழுத்துபோல் அழகாக நிறுத்திக் கையினுல் எழுதிக் கட்டடம் செய்யப்பட்ட 'படி' (பிரதி) யாகவே தோன்றுகிறது. இத்துணை பெரிய முயற்சி மிகவும் பாராட்டப்படத்தக்கது.

இந்த அரும் பெரும் படைப்பின் ஆசிரியர் இன்னுர் எனத் தெரியவில்லை. எழுதப்பட்ட காலமும் இடமும் குறிப்பிடப்படவில்லை. இஃது அச்சிடப்படாத நூல் ஆதலின், நூலின் முகப்பில் ஆசிரியர் பெயர், அச்சான காலம் - இடம் முதலிய விவரங்கள் குறிக்கப்படவில்லை போலும். புதுவைப் பிரெஞ்சு கலைக் கழகத்தின் நூலக அட்டவணையில்,

இந்த நூற் பெயருக்கு நேரே, ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை என்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இருப்பினும், நாம் ஒரு சிறிது முயலு வோமாயின், இந்த அகராதியின் ஆசிரியர் பெயரைக் கண்டுபிடித்துவிடலாம். அதற்குத் துணைசெய்யக் கூடிய நிலையில், அகராதியின் தொடக்கத்தில் இலத்தீன் மொழியில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. அகராதிக்கு முன்னால் இந்தக்குறிப்பைத் தவிர, வேறு ஓர் எழுத்தும் எழுதப்பட்டிருக்கவில்லை. இனி அக்குறிப்பு வருமாறு:—

DICTIONARIUM

Tamulico — Latinum.

N. B. Adcertas, quæso, beuigue lector, ad duo subsequentia signa * et —>.

(*) Stella præfixa vocabulis Tamulice scriptis illa e Grandonica lingua faisse usurpa la denotal.

(—>) Sagitta præfixa vocabuli cujuslibet Significationibus indicat illas in sublimiori lingua generatim vel poesi potius quam in usu quotidiano adhiberi.——— Hinc : *1*· Omnes significationes quæ inveniuntur post prædictum signum (—>), elegantiores sunt et ordinarie mimine in usu a vulgo receptæ. 2· Significationes vero quæ vel ante sagittam, vel sol & sine sagitta ponuntur, communius ut intellectæ in lingua vulgari adhibentur, plerumque saltem per Madurensis

missionis ambitum. His ergo utere, si vis generaliter a populo intelligi, illas autem serva ad librorum vel academicorum intellectionem.

(Vid. præfation. Notam Editoris No. 3·)

மேலே தரப்பட்டுள்ள குறிப்பில், பிறமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் * உடுக்குறியாலும், அரிய தமிழ்ச் சொற்கள் (—>) அம்புக் குறியாலும் குறிப்பிடப்பட்டுள்ளமை முதலிய விவரங்கள் சில தரப்பட்டுள்ளன. அந்தக் குறிப்பின் பிற்பகுதியிலுள்ள 'plerumque saltem per Madurensis missionis ambitum' என்னும் தொடர் ஈண்டு மிகவும் இன்றியமையாததாகும். 'ஏறக் குறைய மதுரைத் திருப்பேரவையின் சுற்று வட்டாரத்துச் சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன' என்று அந்த இலத்தீன் தொடர் தெரிவிக்கிறது. இதிலிருந்து, மதுரைத் திருப்பேரவையைச் சார்ந்திருந்த ஒருவரே இந்தத் தமிழ்-இலத்தீன் அகராதியைத் தொகுத்திருக்க வேண்டும் என்பது தெளிவு. அவர் வீரமாமுனிவராகத்தான் இருக்கக்கூடும். அதற்குரிய சான்றுகளாவன:—

(1) வீரமாமுனிவர் தமிழ் - இலத்தீன் அகராதியொன்று தொகுத்திருப்பதாக அவர் வரலாறு கூறுகிறது.

(2) வீரமாமுனிவர் தொகுத்த தமிழ் - இலத்தீன் அகராதியில் 9000 தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்

சேரி பிரெஞ்சு கலைக் கழகத்திலுள்ள தமிழ் - இலத்தீன் அகராதியிலும் ஏறக்குறைய அவ்வளவு சொற்கள் உள்ளன.

(3) புதுச்சேரி அகராதியின் முற்குறிப்பில், மதுரைத் திருப்பேரவை வட்டாரத்துத் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. வீரமாமுனிவர் மதுரைத் திருப் பேரவையைச் சார்ந்திருந்தே கிறித்துவமும் தமிழும் பரப்பினர்; இதனை, அவர் இயற்றிய 'Grammatica Latino-Tamulica' என்னும் நூலின் முகப்புப் பக்கத்தில் அவரைப் பற்றியுள்ள

P. Constantio - Josepho Beschio,

Societatis Jesu, In Regione Madurensi,

Apud Indos Orientales, Missionario.

என்னும் விவரக்குறிப்பாலும், அதே நூலில் ஆசிரியர் வீரமாமுனிவர் தமது முகவுரையின் இறுதியில் தாம் அந்நூலை எழுதி முடித்த இடமும் காலமும் குறிப் பிட்டு எழுதியுள்ள

E Missiono Madurensi. 4.Kal. Jan. 1728.

என்னும் இறுதிப் பகுதியாலும், அவரால் இலத்தீனில் எழுதப்பட்டு 1876-ஆம் ஆண்டு தரங்கம் பாடியில் அச்சிடப்பட்டுள்ள 'Clavis Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis' (செந்தமிழ் இலக்கணத் திறவுகோல்) என்னும் நூலின் முகப்புப் பக்கத்தில் அவரைப் பற்றியுள்ள

R. P. Constantio Josepho Beschio
Societatis Jesu,

In Madurensi Regno Missionario.

என்னும் விவரக் குறிப்பாலும், மேலும் இன்ன பிற வரலாற்று அகச் சான்றுகளாலும் தெள்ளிதின் அறியலாம்.

மேற்கூறிய சான்றுகளால், 'மதுரை வட்டத்தில் வாழ்ந்த வீரமாமுனிவரே, மதுரை வட்டத்துச் சொற்களையும் சேர்த்துத் தமிழ்-இலத்தீன் அகராதி படைத்தார்; அந்த அகராதியே புதுச்சேரி பிரெஞ்சு கலைக்கழகத்தில் உள்ளது' என்பது தெளிவு. ஆனால், கையெழுத்துப் படியாக உள்ள இந்த அகராதியில் உள்ள கையெழுத்து வீரமாமுனிவருடையதன்று. முனிவர் தம் கையால் எழுதிய படியைப் பார்த்துப் பலர் பல படிகள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு படியைப் பார்த்து இன்னொரு படி; அதைப் பார்த்து மற்றொரு படி - என்று இப்படியாக, ஊர்தோறும் - கிறித்துவத் துறவியர் வாழ்ந்துவந்த வட்டாரந்தோறும் பல படிகள் உருவெடுத்தன. அவ்வாறே, புதுச்சேரி திருப்பேரவையைச் சார்ந்திருந்த துறவி யொருவரும் ஒரு படி எடுத்துள்ளார். அந்தப் படியே (பிரதியே) இப்போது பிரெஞ்சு கலைக்கழகத்தில் இருப்பதாகும். இதற்கும் சான்று இல்லாமல் போகவில்லை.

இந்தப் புதுச்சேரிப் படியில் புதுச்சேரி வட்டாரச் சொற்கள் சிலவும் காணப்படுவதால் —

அதிலும், 'புதுச்சேரி', 'புதுவை' என்ற சொற்களும் காணப்படுவதால், புதுச்சேரியில் வாழ்ந்த துறவியொருவர், வீரமாமுனிவரின் தமிழ்-இலத்தீன் அகராதிக்கு இடையிடையே புதுச்சேரி வட்டாரச் சொற்களையும் சேர்த்து இந்த அகராதிப் படியை எழுதி உருவாக்கியுள்ளார் என்பது உறுதியாகிறது. அவ்வாறு புதுச்சேரி வட்டாரச் சொற்களாக இவ்வகராதியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் சில, இலத்தீன் பொருளுடன், அகராதியில் உள்ளாங்கு அப்படியே வருமாறு:—

கருடன் - Falco Pondicherianus

புதுச்சேரி - Pondichery

புதுவை - Vid. புது(ச்)சேரி

வாங்கு - 1. q. pugio. 2. pro. விசிப் பலகை

வாசகப்பா - Vid. வாசாப்பு

வாசாப்பு - tragædia, comedia

கருடன் என்பதற்கு 'Falco 'Pondicherianus' என்று இலத்தீனில் பொருள் தரப்பட்டுள்ளது; அப்படியென்றால், 'பாண்டிச்சேரிப் பக்கம் உள்ள இராசாளி அல்லது வல்லூறு போன்றதொரு பறவை' என்று பொருளாம். இலத்தீனில் Falco என்றால், இராசாளி, வல்லூறு என்று பொருளாம். பாண்டிச்சேரி என்பது புதுச்சேரியின் மற்றொரு பெயராகும். தமிழக முழுதுமுள்ள கருடனைப் பாண்டிச்சேரிப் பக்கம் உள்ளதொரு பறவை வகையாக இந்த அகராதி கூறுவதால், இவ் வகராதியைத்

தொகுத்தவர், பாண்டிச்சேரியில் வாழ்ந்த வேற்று நாட்டார் ஒருவராகத்தானே இருக்கவேண்டும்?

அடுத்து, புதுச்சேரி, புதுவை என்னும் சொற்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். 'புதுவை' Vid. புது(ச்) சேரி' என்பதிலுள்ள 'Vid' என்பதற்கு 'அல்லது' என்பது பொருள்.

அடுத்தாற்போல் 'வாங்கு' என்னும் சொல்லைக் கவனிக்கவேண்டும். இச்சொல்லுக்கு அகராதியில் இருபொருள்கள் தரப்பட்டுள்ளன. ஒன்று, pugio அதாவது குற்றுவாள்; இரண்டு, விசிப்பலகை. இரண்டாவதாகிய 'விசிப்பலகை' என்னும் பொருளில் 'வாங்கு' என்னும் சொல் புதுச்சேரியில் வழங்கப்படுகிறது. எங்கள் வீட்டிலும் எங்கள் உறவினர் வீடுகளிலும் விசிப்பலகையை 'வாங்கு' என்று கூறுவது மிகவும் பயின்ற (சர்வ சாதாரணமான) வழக்காகும். விசிப்பலகைக்கு 'வாங்கு' என்னும் பெயர் புதுச்சேரியில்மட்டும் எப்படி ஏற்பட்டது? புதுச்சேரிக்கு மிக அண்மையிலுள்ள கடலூரில் இந்த வழக்கு இல்லவே யில்லையே!

விசிப்பலகை ஆங்கிலத்தில் 'Bench' (பெஞ்ச்) எனப்படுகிறது; பிரெஞ்சு மொழியிலோ 'Banc' (பாங்க்) எனப்படுகிறது. இந்த Banc (பாங்க்) என்பதுதான் 'வாங்கு' என மருவி வழங்கப்படுவதாகச் சிலரால் சொல்லப்படுகிறது. இந்த 'வாங்கு' என்னும் சொல் 'ஓர் இருக்கை' (ஆசனம்) என்னும் பொருளில் வேறு சில விடங்களில் வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. எது எப்படி யிருந்த

போதிலும், அண்மையிலுள்ள கடலூரில் இல்லாத இந்தச் சொல் புதுச்சேரியில் மட்டும் வழங்கப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. எனவே, இந்தச் சொல்லாட்சியைக் கொண்டும், இந்த அகராதி புதுச்சேரியில் வாழ்ந்த ஒருவரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்று துணியலாம்.

அடுத்து, அகராதியில் இடம் பெற்றுள்ள 'வாசகப்பா', 'வாசாப்பு' என்னும் சொற்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன. அகராதியில் 'வாசகப்பா - vid-வாசாப்பு' என, வாசகப்பா என்றாலும் வாசாப்பு என்றாலும் ஒன்று என்று அறிவிக்கப்பட்டுள்ளது; வாசாப்பு என்பதற்கு, 'வாசாப்பு - tragædia, comedia' எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. வாசகப்பா அல்லது வாசாப்பு என்பதற்கு 'நாடகம், என்பதாகப் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்த வாசகப்பா என்னும் சொல்லாட்சி புதுவைப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளது. புதுவை 'மகா வித்துவான்' பு. அ. பெரியசாமிப் பிள்ளையவர்கள் 'புரூரவச் சக்கரவர்த்தி வாசகப்பா', 'அப்பூதியடிகள் வாசகப்பா' முதலிய இசை நாடகங்கள் எழுதியுள்ளார். இவை புதுவையில் நடிக்கப்பட்டுள்ளன. வாசகம் போன்ற எளிய செய்யுள்நடையில் எழுதின இசை நாடகம் 'வாசகப்பா' என இங்கே அழைக்கப்பட்டது. புதுவையில் வாழ்ந்த 'வல்லே தே விரிவீல்' (Vallet de viriville) என்னும் பிரெஞ்சுக்காரர்கூட, 'எஸ்தாக்கியர் வாசகப்பா' (Saint Eustache) என்னும் வாசகப்பா நூல் ஒன்று 1837-ஆம் ஆண்டு இயற்றினர். அது 1845–ஆம் ஆண்டு புதுவையில்

நடிக்கப்பட்டு அரங்கேற்றம் பெற்றதாம். எனவே, இந்த 'வாசகப்பா' என்னும் சொல் அகராதியில் இடம் பெற்றிருப்பதைக் கொண்டும், இந்த அகராதி, புதுச்சேரியில் வாழ்ந்த ஒருவரின் கைவண்ணம் பெற்றுள்ளமை புலனாகும்.

இந்த அகராதியின் முற்குறிப்பில் கூறப்பட்டுள்ளபடி, 'அங்கணே' போன்ற மதுரை மாவட்டச் சொற்கள் இடம் பெற்றிருப்பதால் மதுரை வட்டத்தில் வாழ்ந்த வீரமாமுனிவர் இந்த அகராதியை முதலில் தொகுத்தார் என்பதும், புதுச்சேரி வட்டாரத்துச் சொற்களும் இடம் பெற்றிருப்பதால், புதுச்சேரித் துறவி யொருவர் மேலும் சில சொற்களைச் சேர்த்து இந்த அகராதிப் படியை எழுதினார் என்பதும், இதுகாறுங் கூறியவற்றால் பெற்ற முற்ற முடிந்த முடிபாகும்.

இந்த அகராதியில், வடமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன; அவை * உடுக்குறியிட்டுக் காட்டப் பட்டுள்ளன. 'ஈ' என்னும் உயிர் நெட்டெழுத்து இந்த வடிவில் எழுதப்படாமல் 'இ' என்னும் குறிலின் முடிவில் சுழி பெற்று 'இ°' என எழுதப் பட்டுள்ளது. 'ர' என்னும் எழுத்து '‾ர' என எழுதப் பட்டுள்ளது. இப்படிப் போன்ற சில எழுத்து வடிவங்களைக் கொண்டே இந்த நூல் ஒரு 'கையெழுத் துப் படி' என உணரமுடிகிறதே தவிர, மற்றபடி நூல் முழுதும் அச்செழுத்துப்போல் அழகாக எழுதப்பட்டுள்ளது. வீரமாமுனிவர் போன்றோரின் இத்தகைய கையெழுத்துப் படிகள் மிகவும் போற்றிக் காக்கப்படவேண்டியவையாகும். வீரமா முனிவர் 1744-ஆம் ஆண்டு எழுதிய 'Dictionnaire Tamoul et Francais' என்னும் தமிழ் - பிரெஞ்சு அகராதியின் பெரிய கையெழுத்துப் படி யொன்றும்

புதுச்சேரி பிரெஞ்சு கலைக்கழகத்தில் போற்றிக் காக்கப்பட்டு வருவது மிகவும் போற்றத்தக்கதாகும்.

இனி, தமிழ்-இலத்தீன் அகராதியின் மாதிரிக்காக, தொடக்கத்திலும் இறுதியிலும் உள்ள சில பகுதிகள் வருமாறு:—

(தொடக்கம்)

அ

அ. 1. littera a brev. 2. numerus 8. 3. pro அந்த. gr 50. 4. a priv. sic : அ. சுத்தம். im. munditia. nota : si vox cui proefigitur அ. incipiat per vocalem, interponitur ன் sic : அனுதி etc.

அக adj. ab அகம்.

—நிலா - மணி - வட்டம் —> pars interior domûs lunæ fulgori exposita.

—நிலை —> Deus

—மகிழ்ச்சி. gaudium internum

—மலர்ச்சி. lœtitia cordis

— விலை. prœtium annonæ in tali loco.

(முடிவு)

வௌ

வௌவால் vespertilio (chau ve souris)

வௌவிட —> q. cervus

வௌவுகிறது vid வவ்வுகிறது.

——— o ———

மேலுள்ளதை யடுத்து நூலின் முடிவில், 'ஸ்கந்தம்' என்னும் சொல் முதலாக 'ஸ்ரீ முக' என்னும் சொல் இறுதியாக 94 வடசொற்கள் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டு இலத்தீனில் பொருள் தரப்பட்டுள்ளன. பின்வரும் இறுதித் தொடரோடு அகராதி முடிவுபெற்றுள்ளது.

Finis laus Deo et B. M. V.

இலத்தீன் - பிராஞ்சு - தமிழ் அகராதி

இந்த அகராதியில் முதலில் இலத்தீன் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன; பின்னர் அவற்றிற்கு நேரான பொருளுடைய பிரெஞ்சுச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் முறையே இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியில் மூன்று மொழிகள் இடம் பெற்றிருப்பதால், மூன்று மொழிகளிலும் நூலுக்குப் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. இது, பெரிய அளவுள்ள 1430 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய அகராதியாகும். 1846-ஆம் ஆண்டு புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலைப் பற்றிய விவரம் அறிவிக்கும் 'நூல் முகப்புப் பக்கம்' (Title page) நாலிலுள்ளாங்கு இனி வருமாறு:—

DICTIONARIUM
LATINO - GALLICO - TAMULICUM.

— o —

DICTIONNAIRE
LATIN - FRANCAIS - TAMOUL.

— o —

இலத்தீன் - பிராஞ்சு - தமிழ்
அகராதி

Auctoribus Duobus Missionariis
Apostolicis
CONGREGATIONIS MISSIONUM
ADEXTEROS.

PUDICHERII,
E Typographio Missionariorum
Apostolicorum
DICTE CONGREGATIONIS.

1846

Facultate à S. Sede Apostolica
II. R R. Episcopo Drusiparensi V. A. concessá

மேலே காட்டப்பட்டுள்ள நூல் முகப்புப் பக்கத்தில், முதலில் இலத்தீன் மொழியிலும், இரண்டாவதாகப் பிரெஞ்சு மொழியிலும், மூன்றாவதாகத் தமிழ் மொழியிலும் நூலுக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அடுத்து, புதுச்சேரி கிறித்துவத் திருப்பேரவையைச் சேர்ந்த துறவியர் இருவர் இந்த அகராதியை ஆக்கிய விவரம் ('Auctoribus Duobus Missionariis Apostolicis') தரப்பட்டுள்ளது. 'துறவியர் இருவர்' எனப் பொதுப்படையாக உள்ளதே தவிர, அவர்களின் பெயர்கள் காணப்படவில்லை. அரிதின் முயன்று இவ்வளவு பெரிய அகராதியைப் படைத்த அந்தத் துறவியர் இருவரின் பெயர்களையும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கலாமே? அவ்வாறு தெரிவிக்காததற்குரிய பொருட்டு என்னவோ? சேசு திருப்பேரவையைச் சேர்ந்த துறவியர் இருவரும், 'இந்தப் பெருமை திருப்பேரவைக்கே உரித்தாகவேண்டும்; தமக்கு வேண்டியதில்லை' - என்ற தன்னடக்கத்தினால் நூலில் தம் பெயர்களைப் பொறிக்க மறுத்துவிட்டிருப்பார்களோ என்னவோ? எப்படியிருப்பினும் அவர்தம் பெயர்களை நாம் கண்டுபிடித்துக் கொணரவேண்டும்.

இந்த இலத்தீன்-பிராஞ்சு-தமிழ் அகராதியின் ஆசிரியர்களாகிய துறவியர் இருவர் எனப்படுபவர், 'மூசே' (L. Mousset), 'துய்புய்' (L. Dupuis) என்னும் அறிஞர் இருவராகத்தான் இருக்க வேண்டும். இதற்குரிய சான்றுகளாவன:—

1855-ஆம் ஆண்டு புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் அச்சிடப்பெற்ற தமிழ் - பிரெஞ்சு

அகராதியின் முதல் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் (Title page) பின்வரும் விவரம் உள்ளது:—

DICTIONNAIRE

TAMOUL - FRANCAIS

Par Deux Missionnaires Apostoliques

De La Congregation

Des Missions – Etrangeres.

அந்நிய தேசத்துப் போதகர் சபையிலுள்ள

அப்போஸ்தொலிக்குக் குருக்களி லிருவர்

செய்தருளிய

தமிழ் பிராஞ் சகராதி

Pondichery

1855

———

மேலுள்ள பகுதியில், குருமார்களில் இருவர் இயற்றியது என்னும் விவரம் பிரெஞ்சு மொழியிலும் தமிழ் மொழியிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்விருவரின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. பின்னர், அதே அச்சகத்தில் 1895-ஆம் ஆண்டு அச்சான அதே அகராதியின் இரண்டாம் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் பின்வருமாறு விவரம் உள்ளது:-

DICTIONNAIRE
Tamoul - Francais
Par
MM. L. Mousset Et L. Dupuy
De La Congregation
Des Missions - Etrangeres.

அந்நிய தேசத்துப் போதகர் சபையிலுள்ள அப்போஸ்தொலிக்குக் குருக்களி லிருவர் செய்தருளிய

தமிழ் பிராஞ் சகராதி

Pondichery
1895

★

மேலே தரப்பட்டுள்ள இரண்டாம் பதிப்பின் முகப்புப் பக்கத்தில், தமிழ் - பிரெஞ்சு அகராதியைப் படைத்த துறவியர் 'முசே' (L. Mousset), 'துய்புய்' (L. Dupuy) என்னும் இருவராவர் என்னும் செய்தி பிரெஞ்சு மொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதற்பதிப்பில் 'Deux Missionnaires Apostoliques' எனத் துறவியர் இருவர் என்பதாகப் பொதுப்படையாகக் கூறப்பட்டிருப்பினும், இந்த இரண்டாம் பதிப்பில் துறவியர் இருவரின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இரண்டாம் பதிப்பிலும், தமிழில் பெயர்கள் வெளிப்படுத்தப்படாமல், 'குருக்களில் இருவர்' என்ற பொது விவரமே காணப்படுகிறது. அடுத்து, அதே அச்சகத்தில் 1938-ஆம் ஆண்டு அச்சான அதே அகராதியின் மூன்றும் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் பின்வரும் விவரம் உள்ளது:—

DICTIONNAIRE
Tamoul - Francais
par
MM. Mousset Et Dupuis
de la société
Des Missione - Etrangéres De Paris
— o —
Troisieme Edition
தமிழ் பிராஞ்சு
அகராதி

மூன்றும் பதிப்பு

Pondichéry
Imprimerie De La Mission

1938

Superiorum permissu

★

மேலே தரப்பட்டுள்ள மூன்றும் பதிப்பின் முகப்புப் பக்கத்தில், தமிழ் - பிரெஞ்சு அகராதியின் ஆசிரியர்களைப் பற்றித் தமிழில் ஒரு குறிப்பும் தரப்படவில்லை; பிரெஞ்சு மொழியில் மட்டும், Mousset, Dupuis என ஆசிரியர் இருவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் தமிழ்-பிரெஞ்சு அகராதியே யன்றி, பிரெஞ்சு - தமிழ் அகராதியும் இயற்றியுள்ளனர். இவ்வகராதியிலும்

இதுவரையும் மூன்று பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. இந்த பிரெஞ்சு – தமிழ் அகராதியின் இரண்டாம் பதிப்பின் முகப்புப் பக்கத்தில் உள்ள விவரமும் பின்வருமாறு:—

DICTIONNAIRE
Francais - Tamoul
Par
MM. Mousset Et Dupuis
De La Société
Des Missions - Etrangéres De Paris
—— o ——
Seconde Edition
———
பிராஞ்சு தமிழ்
அகராதி
———
இரண்டாம் பதிப்பு
—— o ——
Pondichéry
Imprimerie De La Mission
———
1911
Superiorum permissu.

★

இந்த பிரெஞ்சு–தமிழ் அகராதியிலும் Mousset, Dupuis என ஆசிரியர் இருவரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்-பிரெஞ்சு அகராதி,

பிரெஞ்சு-தமிழ் அகராதி என்னும் இரு நூல்களின் ஆசிரியர்கள் முசே, துய்புய் என்னும் இருவராவர் என்பது உறுதி. ஆனால், தமிழ்-பிரெஞ்சு அகராதி யின் முதல் பதிப்பில் ஆசிரியர் பெயர்கள் வெளிப் படையாகக் குறிப்பிடப்படாமல், துறவியர் இருவர் எனப் பொதுப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ள மையும், இரண்டாம் பதிப்பிலேயே ஆசிரியர் பெயர்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டுள்ள மையும் ஈண்டு மீண்டும் மீண்டும் நினைவு கூரத் தக்கன.

தமிழ்-பிரெஞ்சு அகராதியின் முதல் பதிப்பில் 'துறவியர் இருவர்' என்பதாக ஆசிரியர்கள் பொதுப் படையாகச் சுட்டப்பட்டிருப்பது போலவே, இங்கே நாம் எடுத்துக்கொண்டுள்ள இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியிலும், 'துறவியர் இருவர்' என்பதாக ஆசிரியர்கள் பொதுப்படையாகவே சுட்டப்பட்டுள் ளனர். தமிழ் - பிரெஞ்சு அகராதியில் ஆசிரியர் களைப் பற்றியதான

Par Deux Missionnaires Apostoliques
De La Congregation
Des Missions - Etrangeres

என்னும் பிரெஞ்சுப் பகுதியும், இலத்தீன்-பிரெஞ்சு-தமிழ் அகராதியில் ஆசிரியர்களைப் பற்றியதான

Auctoribus Duobus Missionariis Apostolicis
Congregationis Missionum Ad Exteros

என்னும் இலத்தீன் பகுதியும் ஒரே பொருள் உடையன; அதாவது, 'திருப்பேரவையைச் சேர்ந்த குருக்கள் (துறவியர்) இருவர் ஆசிரியர்கள்' என்பது பொருள். எனவே, தமிழ்-பிரெஞ்சு அகராதியின் ஆசிரியர்களாகிய முசே, துய்புய் என்னும் இருவருமே, இலத்தீன்—பிரெஞ்சு - தமிழ் அகராதியின் ஆசிரியர்களுமாவர் என்பது புலனாகும்.

இன்னும் நேரான சான்று வேண்டுமெனின், - இவர்கள் இருவரும் தங்களுடைய தமிழ்-பிரெஞ்சு அகராதியின் முன்னுரையிலும், பிரெஞ்சு - தமிழ் அகராதியின் முன்னுரையிலும், தங்களுடைய இலத்தீன் - பிரெஞ்சு – தமிழ் அகராதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். முதலில், தமிழ் - பிரெஞ்சு அகராதியின் ஆசிரியர்முன்னுரையி லுள்ள ஒரு சிறு பகுதி வருமாறு:—

"............ entreprise sans doute au-dessus de nos forces, mais dont la nécessité est trop sentie, pour que nous n'essayions pas, dans les limites de notre capacité, de répondre á l'attente générale, et de remplir la lacune que laissent notre Dictionnaire Latin - Francais - Tamoul et notre Vocabulaire Francais."........"

அடுத்து, பிரெஞ்சு-தமிழ் அகராதியின் ஆசிரியர்–முன்னுரையிலுள்ள ஒரு சிறு பகுதி வருமாறு:—

"Pour faire attendre patiemment cet ouvrage, jusqu'á ce que nous eussions fait et imprimé

notre Dictionnaire tamoul - francais qui était aussi très nécessaire, nous avons imprimé notre vocabulaire francais - tamoul, qui, par les indications qu' il renferme, peut rendre utile pour l' étude du francais notre Dictionnaire latin - francais - tamoul.

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பகுதிகளிலுமுள்ள 'notre Dictionnaire Latin-Francais-Tamoul' என்னும் தொடர் கூர்ந்து நோக்கற்பாலது; 'எங்களுடைய இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி' என்பது இதன் பொருள். பிரெஞ்சு மொழியில் 'notre' என்ருல், 'எங்களுடைய' அல்லது 'நம்முடைய' என்று பொருளாம். தமிழ் - பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு - தமிழ் அகராதி ஆகியவற்றின் ஆசிரியர்களாகிய முசே, துய்புய் ஆகிய இருவரும் அவ்விரு நூற்களின் முன்னுரைகளில், 'எங்களுடைய இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி' என எடுத்தாண்டு கூறியிருப்பதிலிருந்து இலத்தீன்-பிரெஞ்சு-தமிழ் அகராதியின் ஆசிரியர்களும் இவர்களே என்பது வெள்ளிடைமலை.

மிகப் பெரிய உழைப்பின் வடிவமாகிய இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியின் ஆசிரியர்கள் இருவரும் தங்கள் பெயர்களை வெளிப்படுத்திக் கொள்ளாத பெருந்தகைமை மிகவும் வியந்து பாராட்டற்பாலது. இலத்தீன் அறிந்தவர்கள் தமிழ் அறியவும் தமிழ் அறிந்தவர்கள் இலத்தீனை அறியவும் பாலமாகப் பயன்படும் மிகப் பெரிய இந்த நூலை

எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந் நூலின் தொடக்கத்தில், நூலின் நோக்கத்தைத் தெளிவு படுத்தி இலத்தீனிலும் தமிழிலும் முகவுரைப் பாயிரங்கள் எழுதப்பட்டுள்ளன. இவண் தமிழி லுள்ள பாயிரப் பகுதியை மட்டும் கீழே காண்பாம்:

பாயிரம்

இவ்வுலகில் நிகரில்லா மேன்மை பொருந்திய தெய்வீக பணிவிடைக்கும் உந்நதமான குருப்பட் டத்துக்கு மேற்படுத்தப்படவு மஞ்ஞான விருளின்ன மொய்த்து மூடிய இவ்விராச்சியத்திற் குறையற்ற சாஸ்திரத்தாலு முத்தம சுகிர்தங்களாலு ஞானச் சுடராய் விளங்கித் திரளான சனங்களை நன் னெறியிற் சேர்ப்பித் தீடேற்றி மோக்ஷ விராச்சியத்தி லளவற்ற பேரின்ப மகிமையைப் பெறவும் விசேஷ தேவ கிருபையால் நியமித்தழைக்கப்பட்ட பிரிய முள்ளவர்களே! வேதத்தையு முலகத்தையுஞ் சேர்ந்த சகல கல்வி சாஸ்திரப் பொக்கிஷங்களை யுங்களுக்குத் திறக்கும் பொருட்டுப் பிரயாசமான வேலையுள்ள இவ்வகராதியை உண்டாக்கத் துணிந் தோம். இதைக்கொண்டு அநேகாநேகர் படிப்பிலே தேறி இத்தேசத்திற் சத்தியத்தைத் தெளிவிப்பதற் காகவுந் தேவ அநுக்கிரகத்தைக் கொண்டு எண்ணிறந்த ஆத்துமாக்களைப் பேரின்ப விராச்சி யத்திற் சேர்ப்பிப்பதற்காகவுந் தக்க ஞானத் திறமையை யடையவேண்டு மென்கிற வாசைப் பெருக்கம் நமக்கு மெத்தவுமுண்டு. மீளவும் இலத் தீன் படிப்பானது கல்விச் சாங்கோபாங்கத்துக்கு

வழியாகையாற் குருப்பட்டத்தைப் பெறவிருக்கிற வர்களையல்லாமல் மேலான சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்வதற் காசையுள்ள மற்றச் சகலர்க்கு முபயோகமாக விதை நியமித்திருக்கின்றோம். சம்பூரண மெய்ஞ்ஞானப் படிப்பினு லிவ்வுலகிலு மறு வுலகிலும் விளைகிற எண்ணிறந்த நன்மைகளை யடைவதற்காக இவ்வகராதி யித்தேசத்தாருக்கு மிகவும் பிரயோசனமாகு மென்று நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

இதுவரைக்கு மித்தேசத்திற் கையெழுத்தாய் வழங்கிய இலத்தீன் தமிழகராதிகளில் இலத்தீன் வார்த்தைக ளெல்லா மடங்காததினு மதுகளி னர்த்தங்க ளெல்லாந் தமிழிற் பெயர்க்கப்படாததி னுலும் இலத்தீன் பாஷைப் படிப்பு வருத்தமுங் கருதலுமா யிருந்த ததிசயமல்ல. அப்படிப்பட்ட வருத்தமுங் கருதலு நீங்கத்தக்கதாக இவ்வகராதி யப்படிக் குறைவுஞ் சங்க்ஷேபமுமாயிராமல் இயன்ற மட்டுஞ் சம்பூரணமுஞ் சாங்கோபாங்கமான படிப்புக்குரியதுமா யிருக்கவேண்டு மென்று தீர்மானித்தோம். ஆதலாற் பிரயாசத்துக்குஞ் செலவுக்கு மஞ்சாமல் தேவாநுக்கிரகத்தி னுதவியை நம்பிப் பிராஞ்சிராச்சியத்துக் கல்வி மடங்களிலுஞ் சாஸ்திரச் சாலைகளிலும் வழங்கு முக்கியமான அகராதிகளிலடங்கிய இலத்தீன் சொற்களையெல்லா மிதிலே சேர்த்து அதுகளி னர்த்தமெல்லாந் தமிழாகப் பெயர்த்து விளக்கினேம். ஆனபடியினாலே வழக்கமான சொற்களையும் இலக்கணத்தைச் சேர்ந்த

மொழிகளையு மல்லாமற் சிறுபான்மையாய்ச் சில நூற்களிலே மாத்திர மகப்படுகிற வார்த்தைகளையு முதலா யிதிலே கூட்டினோம். ஆனால் சொற்களின் தகுதி கற்போர்க்குத் தெளியும் பொருட்டு முக்கிய மான இலக்கிய நூற்களில் வழங்காத சொற்களை யொரு நட்சத்திர அடையாளத்தைக் கொண்டு குறித்தோம்.

இப்படி இவ்வகராதியில் ஏறக்குறைய இலத்தீன் மொழிகளெல்லாஞ் சேர்ந்திருக்கையி லதுகளுக்குள் அஞ்ஞானத்தைச் சேர்ந்த பற்பல மொழிகளுஞ் சில வசனங்களு மிருப்பதினை விடறுபடலாகாது. ஏனெனில் பூர்வீகத்திலே அஞ்ஞானத்தில் விளங்கிய சாஸ்திரிகள் இலத்தீன் பாஷையி லெழுதின இலக்கண இலக்கிய நூற்களையுஞ் சத்திய வேத சாஸ்திரிகளும் வேதபாரகரும் அஞ்ஞானத்தை மறுப்பதற் கெழுதிய வுத்தமமான நூற்களையுங் கற்போர் வாசித்துணரும் பொருட்டு அதுகளையு மிவ்வகராதியிற் கூட்ட அவசரமா யிருந்த தென்ப தற்குச் சந்தேகமில்லை. ஆதலாற் பொய்த்தேவர் களுடைய நாமங்களையும் அவர்களைக் குறித்துக் கொண்டாடப்பட்ட திருவிழாக்களின் பெயர்களையும் பூர்வீகத்திலே இலத்தீன் தேசங்களில் உலகத்தா ரநுசரித்த அஞ்ஞானச் சகுன சாஸ்திர முறைமை களுக் கடுத்த வாக்கியங்களையு நாமிதிலே சேர்த்துக் கொண்டிருந்தாலு மதெல்லா மங்கீகரித்தோ மென்று நினைக்கலாகாது. வழக்கமாய் அஞ்ஞான மென்கிற மொழி முதலிய குறிப்புச் சொற்களால்

அக்கியானத்தைச் சேர்ந்த காரியங்களைத் தெளிவித்து மறுத்தோம். ஆயினும் யாதோர் விசை அப்படிப்பட்ட குறிப்பில்லாவிட்டாலும் அக்கியானமானதெல்லா மபத்தமென்று நிச்சயிக்கிறோ மென்கிறதை யாவரு முறுதியா யறிந்துகொள்ளக்கடவார்கள். மீளவும் இதிலுள்ள அஞ்ஞானமான சொற்களும் பூர்வத்திலே இலத்தீன் பாஷையில் எழுதப்பட்ட அஞ்ஞான நூற்களுஞ் சத்திய வேதத்தி னுண்மைக்குப் பிரசித்தமான அத்தாட்சியாமே. அதெப்படி யெனி லந்த நூற்களில் அஞ்ஞானப் புலவருஞ் சாஸ்திரிகளுந் துதித்து வாழ்த்திப் பாராட்டின பொய்த் தேவர்களுக்கு இப்போதுலகத்திற் கோயில் பீடந் துதி நமஸ்கார மொன்றுமில்லை. அக்காலத்தில் இலத்தீன் கிறேக்கு தேச முதலிய இராச்சியங்களில் அந்தப் பொய்த் தேவர்களினாராதனை திருவிழாக்களும் அஞ்ஞானச் சகுன சாஸ்திர முறைமைகளு மிகவு முக்கியமாயிருந்ததாமே. ஆனாற் சூரியன் முகத்துக் காரிருள் தெளிந்து நீங்குவது போலச் சத்திய வேதத்தின் முகத்து அவ்விராச்சியங்களினின்று ஞான அந்தகாரமெல்லா மொழிந்து தீர்ந்ததினால் அந்தப் பொய்த் தேவர்களி னாமங்களும் அஞ்ஞானச் சகுன திருவிழா முதலியவற்றின் பேர்களும் புஸ்தகங்களிலகப்படுகிறதல்லாதே அதெல்லாம் உலக எவ்விடத்திலு நடவாது. இப்படிச் சகல பொய்த் தேவர்களி னாராதனையும் அஞ்ஞான வந்தகாரமெல்லாமு மற்றெத் தேசங்களிலுந் தெளிந்

தொழியவுஞ் சகல சனங்களு மெய்யான கடவுளை யறிந்து தொழுது ஆத்தும விரட்சணியத்தை யடையவுங்கடவது.

—— o ——

மேலுள்ள பாயிரத்தினுல், இந்த அகராதி இயற்றப்பட்டதின் நோக்கம் புலனுகும். கிறித்துவம் பரப்பவும் பல்வேறு கல்வி – கலைகளை அறிந்து கொள்ளவும் உதவும் வகையில், தமிழறிந்தவர்கள் இலத்தீன் கற்கவும் இலத்தீன் அறிந்தவர்கள் தமிழ் கற்கவும் இந்த அகராதி பயன்பட வேண்டும் என்பது இன்றியமையாக் குறிக்கோளாகும்.

இஃது ஒருபுற மிருக்க, இப்பாயிரத்தின் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் நினைவுகூரத்தக்கன. 'இதுவரைக்கு மித் தேசத்திற் கையெழுத்தாய் வழங்கிய இலத்தீன் தமிழகராதிகளில் இலத்தீன் வார்த்தைக ளெல்லா மடங்காததினுலு மதுகளி னர்த்தங்க ளெல்லாந் தமிழிற் பெயர்க்கப் படாததினுலும் இலத்தீன் பாஷைப் படிப்பு வருத்தமுங் கருதலுமா யிருந்த ததிசயமல்ல' - என்பது இரண்டாம் பத்தியின் முதல் தொடராகும். இதிலிருந்து, 'தமிழகத்தில் இலத்தீன் - தமிழ் அகராதிகள் பல இருந்தன; அவை யனைத்தும் இதுவரையும் கைமெழுத்துப் படிகளாகவே பயன்படுத்தப்பட்டு வந்தன; இந்த இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதிதான் முதல் முதலாக 1846 ஆம் ஆண்டு புதுச்சேரியில் அச்சிடப்பெற்றது' - என்னும் உண்மை நமக்குப்

புலனாகிறது. அங்ஙன மெனில், வீரமாமுனிவரின் இலத்தீன் - தமிழ் அகராதியும் அச்சிடப்படவில்லை எனத் தெரிகிறது. மற்றும், மிகப பரந்துபட்ட சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன என்பதும் புலப்படுகிறது. இப்பாயிரப் பகுதியில் அஞ்ஞானம் என்னும் பெயரால் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களை நாம் பொருட்படுத்தாது புறக்கணித்துவிடவேண்டும்.

இனி, இவ்வகராதியைப் பயன்படுத்துவதற்குத் துணைபுரியும் வகையில் நூலின் தொடக்கத்தில் தரப் பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களின் (Abbreviation) விளக்கம் வருமாறு;—

சுருக்கக் குறிப்புக்களின் பயன்.

abl. Ablativus என்னும் வேற்றுமை.
acc. Accusativus என்னும் வேற்றுமை.
act. Activé, செய்வினையாய்.
adj. Adjectivé, உரிச் சொல்லாய்.
adv. Adverbium, வினையுரி.
comp Comparativus, ஒப்பனையுரி.
con. Conjunctio, கூட்டிடைச் சொல்.
dat. Dativus என்னும் வேற்றுமை.
dim. diminutivum, குறைவுள்ள.
f. Femininum, பெண்பால்.
freq Frequentativum, அடிக்கடியாகிற.
fut. Futurum, எதிர்காலம்.
gen. Genitivus என்னும் வேற்றுமை.

hinc. Hinc, இதினின் றுண்டாகிற தாவது.
i. e. Id est, அல்லது.
ind. Indeclinabile, வேற்றுமை யில்லாத.
inf. Infinitivus, எச்ச விதம்.
int. Interjectio, உளத்திய லிடைச்சொல்.
inus. Inusitatum, வழக்க மற்றது.
ir. Irregulare, விபரீதமான.
loc. Locutio, வசன வகை.
m. Masculinum, ஆண்பால்.
n Neutrum, அஃறிணைப்பால்.
neg. Negatio, இல்லையெனல்.
nom. Nomen, பெயர்ச் சொல்.
o. g. Omnis generis, மூன்று பாலுக்கு மாம்.
P. Pro, பதிலாக.
part. Participium, பெயரெச்சம்.
pass. Passivé, செயப்பாட்டு வினையாய்.
pl. Pluralis, பன்மை.
præp. Præpositio, முன்னிடைச்சொல்.
præs Præsens, நிகழ்காலம்.
præt. Præteritum, இறந்த காலம்.
pro. Pronomen, பெயருக்குப் பிரதி சொல்.
s. Singularis, ஒருமை.
subj. Subjunctivus, வியங்கோள் விதம்.
subst. Substantivum, பெயர்ச் சொல்.
sup Superlativus, மேன்மையுரி.
v. Vide, காண்க.
v. a. Verbum Activum, செய்வினை.

v. def. Verbum defectivum, குறை வினை.
v. d. Verbum deponens, செய்படு வினை.
v. i. Verbum impersonale, ஓரிட வினை.
v. n. Verbum neutrum, தன் வினை.
v. p. Verbum passivum, செயப்பாட்டு வினை.
vel. Vel, அல்லது
voc. Vocativus, விளி வேற்றுமை.

மீளவும் பிராஞ்சுப் பாஷையில் Act. என்பது Action எனவும், Esp. என்பது Espéce எனவும், Fig . de rhét. என்பது Figure de rhétorique எனவும், Arch என்பது Architecture எனவுமாம்.

—— o ——

மேலுள்ள சுருக்கக் குறிப்புக்களைப் பயன் படுத்தி இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியைப் புரிந்துகொண்டு பயன்பெறலாம். இந்த அகராதியின் மாதிரிக்காக, முதலில், அகராதியின் தொடக்கத்திலுள்ள சில சொற்பொருள் விளக்கம் அதிலுள்ளாங்கு அப்படியே வருமாறு:—

இலத்தீன் - பிராஞ்சு - தமிழ் அகராதி

A

A, a, அ, முதலெழுத்து.

A, lettre numérale, 500, கணக்கட்சரம், ரூா; $\overline{A}$, 5,000, ரூத.

A, a privatif, இது சொற்சேர்க்கையி லின்மை யையும் பிரிவினையையுங் குறிக்கும். உம். Mens புத்தி, amens புத்தியில்லாதவன், moveo அசைக்கிறேன், amoveo நீக்குகிறேன்.

A, Ab, Abs, prœp. abl. (a என்பது மெய் யெழுத்துக்கு முன் வரும்; ab என்பது உயிரெழுத்துக்களுக்கு முன்னும், d, j, l, n, r, s என்னு மெய்களுக்கு முன்னும் வரலாகும்; abs என்பதோ வெனில் c, q, s, t என்பவை களுக்கு முன்னே வரும்.) Par, ஆல், இனுல்: ab illo அவனுலே. ||A, au, dans, க்கு, இல். இடத்தில்: doleo à capite என் தலையில் நோகுகின்றது, invictus à labore வேலையிற் களையாத. || A cause, நிமித்தம், முகாந்தரமாக, பற்றி: à spe quam habebat தான் கொண்டிருந்த நம்பிக்கையைப் பற்றி. || A l'égard, மட்டில்: à pecunià valet பண மட்டி லவனுக்குக் குறைவில்லை. || De, ஆய், ஏ: a se தானே, தாஞய், அல்லது தன் செலவாக. || Après, பின்பு, பிறகு, பிற்பாடு: a jentaculo பழையது சாப்பிட்ட பிறகு. || D' avec, de chez, நின்று, இடத்திலிருந்து: discedo ab illo அவனிடத்திலிருந்து வருகிறேன், a judice நியாயாதிபதி வீட்டிலிருந்து. ||Auprès, இடத்தில், கிட்ட: ab eo gratiam inibo அவனிடத்தே கிருபை பெறுவேன். || contre, விரோதமாய்: ab re நியாயத்துக்கு விரோத மாய். || De la part, பெயராலே: à me என்

பேரால் || Dès, depuis, துவக்கி, முதற் கொண்டு: à pueritiâ சிறுவந்துவக்கி. || Du côté, பக்கத்தில், பாரிசமாய், ஏ: ab Romanis உரோமையர் பாரிசமாக, ab occidente மேற்கே || En comparaison, விட, பார்க்கிலும்: ab illo friget அவனைவிடக் குளிர்ச்சியா யிருக் கிறுன். || En faveur, ஆக, பற்றி: dicere ab reo குற்றவாளிக்காகப் பேசுதல். || Hors de, அந்நியமாய்: non ab re est காரியத்துக் கந் நிய மல்ல. || Jusque, மட்டும்: à summo plenum vas மேல்மட்டு நிறைந்திருக்கிற பாத்திரம். || Devant, எதிரே: ab ostio jacens வாசற்படிக் கெதிரே கிடக்கிற. || Pendant, காலத்தில்: à liberis impuberibus தன் பிள்ளைகளின் சிறு பிராய காலத்தில். || Pour, ஆக, முகாந்தரமாக, பிரயோசனமாக, பற்றி: â re tuâ உன் பிரயோசனத்துக்காக. || Selon, படியே: ab arte சாஸ்திர விதியின் படியே. || Quant à, ஓ வெனில்: ab nobilitate அபிமானமோ வெனில். || Sous, கீழ்: à matre pulli தாயின் கீழ்நின் றெடுபட்ட குஞ்சுகள். அன்றியு மிந்த முன்னிடைச் சொற்கள் இராசாக்கள் முதலியவர்களிடத்திற் செய்யப் பட்ட பெரிய வுத்தியோகத் தொழில்களையுங் குறிக்கும். உம். Primus est regi a secretis இராசாவுக்கு முதலிராயசக்காரனு யிருக்கிறுன், esse regis filio à studiis இராசாவின் குமார னுக் குபாத்தியாரா யிருத்தல்.

Aaron, ind. m. Aaron என்பவர், மோயிசே ஸென்பவருடைய சகோதரனான பிரதான வாசாரிய ரவர்தான்.

Aaronitæ, arum, m, pl. Descendans d' Aaron, ஆரோ னென்பவருடைய சந்ததியார்.

Ab, V. A.

Aba, ind. m. Père, அப்பன், (தம்பிக ளிச்சொல்லை அண்ணன்மார்கள் மட்டிற் பிரயோகிப்பார்கள்)

———o———

இது நூலின் தொடக்கப் பகுதியாகும். A என்பது பெறும் பொருள்மதிப்பு மேலே விரிவாகக் காட்டப்பட்டுள்ளமை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். மற்றும், அப்பா என்னும் ஒலியுடைய Aba (Abba) என்னும் இலத்தீன் சொல், தமிழில் அப்பா என்னும் பொருள் உடைத்தாயிருப்பதும் குறிப்பிடத்தக்கதே.

இனி, இந்த அகராதியிலுள்ள இறுதிச் சொல் வருமாறு:-

Zythum, i, n. - th us, i, m. zythum, வாற் கோதும்பையைக் கொண்டு செய்யும் பானம்.

மேலுள்ள சொல்விளக்கத்தோடு இலத்தீன்-பிரெஞ்சு - தமிழ் அகராதி முடிவு பெறுகிறது.

Dictionnaire Latin - Francais - Tamoul
Avec Vocabulaire Francais

புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் 1863-ஆம் ஆண்டு அச்சான 'Grammaire Francaise-Tamoul' என்னும் நூலின் ஓரிடத்தில் கொடுக்கப் பட்டுள்ள புத்தக விளம்பர விலைப்பட்டியில்,

1. Grammatica Latino Tamulica (1843)
2. Dictionarium Latino-Gallico-Tamulicum
3. Dictionnaire Latin-Francais-Tamoul Avec Vocabulaire Francais

முதலிய நூற்பெயர்கள் காணப்படுகின்றன. மேலே சுட்டப்பட்டுள்ள மூன்று நூற்களுள், முதல் நூல் என்பது, வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் எழுதிய கொடுந் தமிழ் இலக்கணமாகும். இரண் டாவது நூல், முசே, துய்புய் என்னும் துறவியர் இருவரும் இணைந்து தொகுத்த இலத்தீன் பிரெஞ்சு-தமிழ் அகராதியாகும். மூன்றுவது நூலும், இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியைத்தான் குறிக்கிறது; ஆனுல் இதில் பிரெஞ்சு சொற்களஞ் சியமும் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை, Avec Vocabulaire Francais (with French Vocabulary) என்னும் தொடரால் அறிகிறேம். ஆகக் கூடியும், பிரெஞ்சு சொற்களஞ்சியம் (Vocabulaire Francais) இணைக்கப்படாதது இரண்டாவது நூல் எனவும், இணைக்கப்பட்டது மூன்ருவது நூல் எனவும் கொள்ளவேண்டும். இரண்டாவது நூல்

இலத்தீன் மொழியிலும், மூன்றாவது நூல் பிரெஞ்சு மொழியிலும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும், இவ்விரு நூற்களும் அமைப்பில் தனித்தனி நூலாகவே உள்ளன என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது. புதுவை மாதாகோயில் அச்சகத்தில் 1864-ஆம் ஆண்டு அச்சான 'பூமி சாஸ்திர நூலாதாரம்' என்னும் நூலின் முகப்பி லுள்ள விளம்பரப் பட்டியில்,

Dictionarium Latino - Gallico - Tamulicum: விலை ரூ. 4 என்றும்,

Dictionnaire Latin - Francais - Tamoul avec Vocabulaire : விலை ரூ. 5 என்றும்

குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே, இரண்டு நூற்களும் தனித்தனி விலையுடன் தனித் தனி வடிவத்தில் உருவாக்கப்பட்டிருந்தமை புலனாகும். அதே விளம்பரப் பட்டியில் இந்த இரு நூற்களையும் பற்றி,

இலத்தீன் பிராஞ்சு தமிழகராதி: விலை ரூ. 4

டிெ அகராதியைச் சேர்ந்த பிராஞ்சு தமிழகராதி:
விலை ரூ 5

என்று தமிழில் குறிப்பிடப்பட்டிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

இருவர்

தமிழ் – இலத்தீன் அகராதி

இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியை ஆக்கிய முசே, துய்புய் என்னும் துறவியர் இருவரும், தமிழ் - பிரெஞ்சு அகராதியும் பிரெஞ்சு - தமிழ் அகராதியுங்கூட ஆக்கியிருப்பதால், இவர்களே தமிழ் - இலத்தீன் அகராதி யொன்றும் ஆக்கியிருக்கக்கூடும். அது பதிப்பிக்கப்பெறவில்லை போலும். பிரெஞ்சு - தமிழ், தமிழ் - பிரெஞ்சு என மாற்றிப்போட்டு அகராதிகள் படைத்திருப்பது போலவே, இலத்தீன் - தமிழ், தமிழ் - இலத்தீன் என மாற்றிப்போட்டு இருவகை அகராதிகளும் படைப்பது எளிய செயலேயாகும். அதாவது, இலத்தீன்–தமிழ் அகராதி படைத்துவிட்ட பிறகு, அதையே மாற்றிப் போட்டுத் தமிழ் - இலத்தீன் அகராதி படைப்பதில் அருமைப்பாடு ஒன்றும் இருக்க முடியாது. எனவே, இவர்கள் இருவரும் தமிழ் - இலத்தீன் அகராதி தொகுத்துத்தான் இருப்பர். அது சரியான முறையில் உருவாகி அச்சேறாததால் நமக்குக் கிடைத்திலது போலும்!

இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்

இலத்தீன் இலக்கணம் பற்றிச் சுருக்கமாகத் தமிழில் எழுதப்பட்டுள்ள நூல் இது. தமிழ் அறிந்தவர்கள் இலத்தீன் இலக்கணம் கற்றுக்கொள்ள ஓரளவிற்கு இந்நூல் துணைபுரியும். புதுச்சேரி சேசு திருப்பேரவையைச் சார்ந்திருந்த தமிழ்த் துறவியர் இலத்தீன் மொழி கற்றுக்கொள்வதற்காக இந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. பொதுவாகத் திருப்பேரவையின் முயற்சியால் இந்நூல் எழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, 1845-ஆம் ஆண்டு, புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இது பற்றிய விவரம் கூறும் நூலின் முகப்புப் பக்கம் வருமாறு:-

அநாதி நம.

இலத்தீ னிலக்கண

நூற் சுருக்கம்.

— o —

இஃது

அந்நிய தேசத்துப் போதகர் சபையிலுள்ள

அப்போஸ்தொலிக்குக் குருக்களால்

நியமித்தேற்படுத்தி

அதி சிரேஷ்டர்களுடைய

உத்தாரத்தின்படியே

௲அ௱௪௰௫ ஸு

புதுவையிற் சன்மவிராக்கினி மாதா கோயிலைச்

சேர்ந்த அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

227 பக்கங்கள் கொண்ட இந்நூலில், எண்கள் எல்லாம் தமிழ் எண்களாகவே குறிக்கப்பட்டுள்ளன. நூல் அச்சான காலம் 'கூ அா சயிரு' எனத் தமிழ் எண்ணால் தெரிவிக்கப்பட்டிருப்பதை மேலே காண லாம். இது, இந்திய-அரபு எண்ணில் 1845 என்று பொருள்படும். 1845-ஆம் ஆண்டு அச்சான இந் நூலின் ஆசிரியர் பெயர் வெளிப்படையாக அறிவிக் கப்படாவிடினும், இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதியின் ஆசிரியர்களாகிய முசே (Mousset), துய்புய் (Dupuis) என்னும் துறவியர் இருவருமே இந்நூலின் ஆசிரியர்களுமாவர் என உய்த்துணர வேண்டியுள்ளது.

இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி 1846-ஆம் ஆண்டு புதுவை மாதாகோயில் அச்சு கத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அதற்கும் ஓராண்டுக்கு முன்பு 1845-இல் இந்த இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம் அதே அச்சகத்தில் பதிப் பிக்கப்பெற்றுள்ளது. இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி நூலிலும் ஆசிரியர் பெயர் அறிவிக்கப்பட வில்லை; துறவியர் இருவர் தொகுத்தது என்னும் பொதுக்குறிப்பே காணப்படுகிறது. இந்த இலத் தீன் இலக்கண நூற் சுருக்கத்திலும் ஆசிரியர் பெயர் அறிவிக்கப்படவில்லை. எனவே, மேற்கூறிய காரணங்களால், இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி தொகுத்த துறவியர் இருவருமே, இந்த இலத்தீன் இலக்கண நூற் சுருக்கமும் எழுதியிருக் கக்கூடும் - என்பது புலனாகும். முசே, துய்புய் என்னும் இருவருமே அவர்கள் என்னும் செய்தி

இலத்தீன் - பிரெஞ்சு - தமிழ் அகராதி என்னும் நூல் பற்றிய தனிப்பகுதியில் (வேறோரிடத்தில்) விரிவாக விளக்கப்பட்டுள்ளது (பக்கம்: 125 - 132). ஒருவேளை, இலத்தீன் இலக்கண நூற்சுருக்கம் பலருடைய கூட்டு முயற்சியாயிருந்திருப்பினும், முசே, துய்புய் என்னும் இருவருக்கும் அம்முயற்சியில் பெரும் பங்கு இருந்திருக்கும் என்பதாவது உறுதி. இவ்விருவருள்ளும் துய்புய் பங்கு மிகப் பெரியது.

இனி, இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கத்தை விளக்கும் பாயிரப் பகுதி நூலினுள்ளாங்கு வருமாறு:—

பாயிரம்

இலக்கண விலக்கியங்களையுமற்றச் சகல கல்வி சாஸ்திரங்களையும் விளக்குகிறவைகளும், எத்தேசங்களிலு மெக்காலங்களிலுங் கற்றோரெல்லார்க்கும் பிரயோசன மாதிரிகையானவைகளு மாகிய வெண்ணிக்கைக்கு ளடங்காத உத்தம நூற்களெழுதப்பட்ட பாஷையா யிருப்பதினாலும், வேத சாஸ்திரத்துக்குஞ் சாதாரண சத்திய வேத தேவாராதனைக்கு நியமிக்கப்பட்டமையினாலும், இலத்தீன் பாஷை பூலோக மெங்கும் நிகரில்லா முக்கியம் பெற்றது. மீளவுங் கடவுள் தாமே திருவுளம் பற்றின வேதத்திலும் வேத சாஸ்திரிகள் தேவ வாக்கியங்களை விளக்கின வியாக்கியானங்களிலும் வேதபாரகர் தந்தருளிய அமிர்தப் பிரசங்க நூற்களிலு மிவை முதலிய வுத்தம பிரபந்தங்களிலு

மடங்கிய பரம வுணர்ச்சிகள் ஊறுகிற சுத்த ஆறணியாயிருப்பது மன்றிச் சகலவித கல்வி சாஸ்திரங்களிலும் புலமை முதலிய வித்தியா தத்துவங்களிலும் மேலாய திறமையும் சத்திய நியாய முதலியவற்றை நிச்சயித்து இருதயத்தை விளக்குகிற வாய்ச்சாலகமு முண்டாவதற் கெத்தனமா யிருத்தலு மிலத்தீன் பாஷையின் மாட்சிமையாமே.

ஆதலால் பூர்வீகந் துவக்கி எத்தேசத்திலும் எச்சாஸ்திரத்திலும் ஞானிகள் கல்விமான்கள் பெரியோர்கள் முதலிய சகல கற்றோருக்கும் சாதாரண பாஷையானதிதுவே. ஆகையால் இத்தேசத்திலும் வேத சாஸ்திரத்தோடே மற்றச் சாஸ்திரங்களையும் விளங்கச் செய்வதற்குரிய புதுவைச் சாஸ்திர மடத்துக்கு இலத்தீன் பாஷையினிலக்கண நூல் அவசரமாகிய தென்றெண்ணித் தமிழிலே முன்னிருந்த இலத்தீ னிலக்கண நூற் போதாமையா யிருந்ததைப் பற்றியிதை யேற்படுத்தத் துணிந்தோம்.

இதற்காகப் பிராஞ்சிராச்சியத்தில் இலத்தீன் படிப்புக்குச் சாதாரணமா யேற்றுக்கொள்ளப்பட்ட நூலை யநுசரித்துக்கொண் டிருந்தாலு மிது அந்நூலின் வெறு மொழிபெயர்த்தலா யிராது. ஏனெனில் அது வெழுதப்பட்ட பிராஞ்சுப் பாஷைக்குந் தமிழ்ப் பாஷைக்கும் வெகு தூர வித்தியாசமிருக்கின்றமையால் அதை யுள்ளபடி மொழிபெயர்த்துத் தந்தாற் பற்பல விடங்களி லித்தேச பாஷைக்குச் சரிப்படா திருப்பதைப் பற்றி இலத்தீனிலக்கணத்தைச் சேர்ந்த பொருட்களை யெல்லா

மியன்றமட்டுந் தமிழ்ப் பாஷையி னடைக்கும் பொருத்தமாகத் திருப்பினது மல்லாமல் இலத்தீ னிலுந் தமிழிலு மொழிபெயர்க்கிறதற்கு வருத்த மாகிய அநேக சொற்களையும் வசனங்களையும் நவ மாய்ச் சேர்த்து அவைகளை மொழிபெயர்க்கும் வகையையுங் காட்டினோம். ஆதலா லிதின் துவக்கத் திலுள்ள இலத்தீன் பாஷையின் நெடுங்கணக்கு மதைச் சேர்ந்த விவரங்களுமன்றி யிதிலே மூன்று வகுப்புமுண்டு. முதல் வகுப்பி லந்தந்தச் சொல்லை வகையறுத்து விவரித்துத் தெளிவிக்கிறோம். இரண்டாம் வகுப்பி லந்தந்த வகைச் சொல் தொடரியலை விளக்குகின்றோம். மூன்றும் வகுப் பிலே இலத்தீன் பாஷைக்குந் தமிழ்ப் பாஷைக்கும் வித்தியாசமான வசனங்களை மொழிபெயர்க்கும் வகையைத் தெளிவிக்கிறோம்.

சாஸ்திரங்களை விரும்பிய சகலர்க்குந் தேவசித் தத்தாற் குருப்பட்டத்துக்கு நியமிக்கப்படுகிறவர்க ளுக்கும் விசேஷமா யிது பிரயோசனமாகு மென்கிற நம்பிக்கையா லிதை அச்சிற் பதிப்பித்தோம். ஆதலாற் பிரியமான மாணாக்கரே! இலத்தீன் படிப் பிலுள்ள மிகுதியான நன்மைகளை யறிந்து இதனைக் குறைபறப் படித்து உங்களினிமித்தம் பிரயாசப் பட்டவருக்காகப் பரமகர்த்தரை வேண்டிக்கொள் வீர்களாக.

———o———

மேலே தரப்பட்டுள்ள பாயிரப் பகுதியால் சில செய்திகள் தெரியவருகின்றன. இலத்தின் மொழி யின் இன்றியமையாமை மிகவும் அழுத்தம் திருத்த

மாய்க் கூறப்பட்டுள்ளது. பல்வேறு கலைகளைத் தெரிந்துகொள்ள விரும்பும் எவருக்குமே இலத்தீன் மொழியறிவு நலம் பயக்கும் எனவும், கிறித்துவம் பரப்பும் பணியில் ஈடுபடும் துறவியர்க்கும் அது மிகவும் இன்றியமையாதது எனவும் பாயிரம் கூறுகிறது. இந்நோக்கத்திற்காகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மற்றும், பாயிரத்தின் இரண்டாம் பத்தியின் இறுதியிலுள்ள

"...... தமிழிலே முன்னிருந்த இலத்தீ னிலக்கண நூற் போதாமையா யிருந்ததைப் பற்றி யிதை யேற் படுத்தத் துணிந்தோம்.'

என்னும் பகுதியால், இதற்கு முன்பே இலத்தீன் இலக்கணத்தைப் பற்றித் தமிழில் சில நூற்கள் எழுதப்பட்டிருந்தமையும், அவை போதுமான அளவின்றிச் சுருக்கமா யிருந்தமையும் புலப்படும். (இது குறித்து இத்தலைப்பின் இறுதியில் விவரம் தரப்பட்டுள்ளது.) எனவே, அவற்றினும் நோக்க இந்நூல் ஓரளவு விரிவானது என்பது வெளிப் படை. இவ்வாறு தமிழ்—இலத்தீன் பாலம் அமைக் கப் பாடுபட்ட பலரும் மிகவும் பாராட்டற் பாலராவர்.

இனி, இந்நாலில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பற்றிய விவரம் அறிந்து கொள்வதற்காக, நூலிலுள்ளாங்கு 'பொருளட்டவணை' வருமாறு:-

பொருளட்டவணை.

இரண்டாம் வகுப்பு - தொடர்மொழி யியல்

4. பெயருக்குப் பிரதி சொற்றொடரியல்
    1) இடச்சொல், சுட்டுச்சொல் ... தொடரியல்
    2) சம்பந்தச் சொற்றொடரியல்
    3) வினைச் சொற்றொடரியல்
5. பெயரெச்சத் தொடரியல்
6. வினையுரிச் சொற்றொடரியல்
7. முன்னிலைச் சொற்றொடரியல்
8. கூட்டிடைச் சொற்றொடரியல்

மூன்றும் வகுப்பு

இலத்தீன் பாஷைக்குந் தமிழ்ப் பாஷைக்கும் வித்தியாசமான வசனங்களை மொழிபெயர்க்கும் வகை.

1. வினைச்சொல்லைச் சேர்ந்த விஷயங்கள்
    1) என்று, ஆக, ஐ என்பதி னீக்கம்
    2) வேறொரு வினைக்குமுன் கூட்டிடையைக் கேட்கிற வினைகள்
    3) வியங்கோள் விதத்தைக் கேட்குஞ் சொற்கள்.
    4) வியங்கோள் விதத்தைக் கேட்கிற ut, ne, an, quin முதலிய கூட்டிடைக்குப் பின் வரவேண்டிய காலத்தின் விளக்கம்.
    5) செய்வினையைச் செயப்பாட்டு வினையாகத் திருப்பும் வகை
    6) எழுவாயில்லாத வசன முறை
    7) ஏவல் வினையையும் வியங்கோளையு மொழிபெயர்க்கும் வகை

8) எதிர்மறை முதலியவைகளின் விளக்கம்

2. பெயருக்குப் பிரதிச் சொல்லுக் கடுத்த விஷயங்கள்

3. பெயரெச்சங்களுக்கும் வினையெச்சங்களுக்கு மடுத்த விஷயங்கள்

4. வினையுரிச் சொல்லுக் கடுத்த விஷயங்கள்

1) அளவு முதலியவற்றைக் குறிக்கும் வினை யுரிச் சொற்களை மொழிபெயர்க்தும் வெவ் வேறு வகை

2) அளவு முதலியவற்றைக் குறிக்கும் வினை யுரிகள் தொடரும் வகை

3) மேன்மை வினையுரியைச் சேர்ந்த விஷ யங்கள்

4) காலத்தைக் குறிக்கும் வினையுரிகளைச் சேர்ந்த விஷயங்கள்

5) மற்ற வினையுரிகளைச் சேர்ந்த விஷயங்கள்

5 கூட்டிடைச் சொல்லுக் கடுத்த விஷயங்கள்

6. வினையுரி-முன்னிடை-அல்லது - கூட்டிடைச் சொல்லாகப் பெயர்க்கப்படுஞ் சொற்கள்

7. விசேஷ விவரங்கள்

1) பெயர்ச் சொற்களைச் சேர்ந்த விவரங்கள்

2) பெயருரிச் சொல்லைச் சேர்ந்த விவரங்கள்

3) வினைச் சொல்லைச் சேர்ந்த விவரங்கள்

—— o ——

மேலுள்ள அட்டவணையில், இலத்தீன் இலக் கண வழக்குப் பெயர்கள் தமிழ்ப்படுத்தித் தரப் பட்டுள்ளதைக் காணலாம். சொல்லியல், தொடர்

மொழியியல், மொழி பெயர்க்கும் வகை என நூலில் மூன்று வகுப்புக்கள் (பெரும் பிரிவுகள்) உள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் பல உட்பிரிவுகளும், சில உட்பிரிவுகளுக்குள் உட்பிரிவுகளும் இருப்பதை அட்டவணையால் அறியலாம். தமிழர்கள் இலத்தீன் கற்றுக்கொள்ளத் துணைபுரியும் இந்நூல் இப்போது கிடைப்பதரிது. இதனை மீண்டும் பதிப்பித்தல் பயனுள்ள செயலாகும்.

இலத்தீன் இலக்கணம்

முற்கூறிய 'இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்' என்னும் பெயருடைய நூலேயன்றி, 'இலத்தீன் இலக்கணம்' என்னும் பெயரிலும் ஒரு தனி நூல் அச்சிடப்பட்டிருந்தது. 'இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்' என்னும் நூலின் பாயிரத்தின் இடையே யுள்ள, "...தமிழிலே முன்னிருந்த இலத்தீனிலக்கண நூற் போதாமையா யிருந்ததைப்பற்றி யிதை யேற் படுத்தத் துணிந்தோம்." என்னும் பகுதி முன்னரே (பக்கம் - 152) எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனால் வேறு நூல் இருந்தமை தெளிவாகிறது. அந்த வேறு நூலாக 'இலத்தீன் இலக்கணம்' என்னும் பெயருடைய நூலைக் குறிப்பிடலாம்.

'இலத்தீன் இலக்கணம்' என்னும் நூலும் தமிழின் வாயிலாக இலத்தீன் கற்றுக்கொள்ள உதவும் துணை நூலே. புதுவை மாதாகோயில் அச்சகத்தில் வெளியான 'பூமி சாஸ்திர நூலாதாரம்'

என்னும் நூலின் முகப்பிலுள்ள விளம்பரப் பட்டியில்,

இலத்தீ னிலக்கணம்: விலை ரூ. 0—12—0

என, அதாவது பன்னிரண்டு அணு (முக்கால் ரூபாய்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்' என்னும் நூலின் விலையோ ரூ 1 (அதாவது ஒரு ரூபாய்) ஆகும். இதனை, 'இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்' என்னும் நூலின் பாயிரத்தின் அடியில் உள்ள குறிப்புரைப் பகுதியாலும் உணரலாம். அது வருமாறு:—

'இவ்விலக்கண நூற் பிரதிகள் கொஞ்சமாத்திரஞ் செலவாகு மென்பதினாலே இதின் விலை இரண்டு ரூபாயாக நியமித்தாலுஞ் செய்யப்பட்ட செலவு பரிகாரமாக மாட்டாதாயினும், பொது நன்மையாகத் தக்க விந்தப் படிப்புச் சகலர்க்கு மதிக வெளிதாகும் பொருட்டு ஒரு ரூபாய் மாத்திர முபகாரமாக விதிக்கப்பட்டது.'

எனவே, ஒரு ரூபாய் விலையுள்ள 'இலத்தீன் இலக்கண நூற் சுருக்கம்' என்னும் நூலும், முக்கால் ரூபாய் (பன்னிரண்டு அணு) விலையுள்ள 'இலத்தீன் இலக்கணம்' என்னும் நூலும் வெவ்வேறானவை என்பது புலப்படும். இவ்வாருக, தமிழ் அறிந்தவர்கள் இலத்தீன் கற்றுக்கொள்வதற்குத் தமிழில் இன்னும் சில துணை நூற்கள் (Guides) இருந்திருக்கலாம். அவை நமக்குக் கிடைக்கவில்லை.

பல்வேறு பாலங்கள்

இதுகாறும் தமிழ் - இலத்தீன் பாலமாக உள்ள நூற்கள் சிலவற்றைப் பற்றி ஓரளவு விரிவாகப் பார்த்தோம். இந்நூற்களை யான் பெற முடிந்ததால் இவை குறித்துப் போதிய செய்திகள் தரமுடிந்தது. இவையேயன்றி, தமிழ்-இலத்தீன் பாலமாக இன்னும் பல்வேறு நூற்கள் உள்ளன. அவற்றுள் சில அச்சாகவில்லை; அச்சானவையும் கிடைக்கவில்லை. எனவே, அவை குறித்து ஓரளவு குறிப்புச் சுருக்கமே எழுதமுடிகிறது. இனி அவை வருமாறு:-

இலத்தீன் பெரிபுளூஸ்

'பெரிபுளூஸ்' என்பது கிரேக்கச் சொல். கடலில் பயணம் போகவும் வரவும் துணை செய்யத்தக்க அடையாளங்களைக் குறிக்கும் கையேடு 'பெரிபுளூஸ்' எனக் கிரேக்க மொழியில் பெயர் சுட்டப் பட்டுள்ளது. ஊர் பேர் தெரிவித்துக்கொள்ளாத ஐரோப்பியர் ஒருவர் தென்னிந்தியாவிற்குப் பயணம் செய்து தாம் நேரில் கண்டவற்றை உரோம நாடு சென்று வெளியிட்டார். இவர் எழுதிய நூல், 'பெரிபுளூஸ் ஆஃப் தி எரித்திரியன் சீ' (Periplus of the Erythrean Sea) எனப் பெயர் வழங்கப்படுகிறது. எரித்திரியன் சீ (Erythrean Sea) என்பது செங்கடல். செங்கடல் வழியாகச் சென்று வந்த பயணக் குறிப்புக்களைப் பற்றிய நூலாதலின், இவ்வாறு பெயர் வழங்கப்பட்டது போலும்! இது, இப்பகுதி யைப் பற்றி நேரில் கண்டு எழுதிய முதல் நூல்

எனக் கருதப்படுகிறது. இந்நூல் முதலில் கிரேக்க மொழியிலும், அடுத்து இலத்தீன் மொழியிலும் எழுதப்பட்டது. பின்னர் இலத்தீனிலிருந்து இத்தாலி, செர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டது. எனவே, இலத்தீன் பெரிபுளூசும் தமிழகத்தை உலகினர் அறியச்செய்யும் ஒரு பாலமாக அமைந்திருந்தது எனலாம்.

பெரிபுளூஸ் எழுதிய ஆசிரியர், நூலில் தமது ஊரையோ பேரையோ யாண்டும் வெளியிட்டாரிலர். * இவரது காலம் கி. பி. 80-ஆக இருக்கலாம் என்பது 'ஷாப்' என்னும் அறிஞரின் கருத்து.

சீகன்பால்க்

தமிழ் – இலத்தீன் பணி

சீகன்பால்க் என்பார் ஒரு செர்மானியர். இவர், டென்மார்க் நாட்டு மன்னர் நாலாம் பிரடரிக் என்பவரால் கிறித்துவம் பரப்புவதற்காகத் தரங்கம்பாடிக்கு அனுப்பப்பட்டு 1706-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் வந்து இறங்கினார். அப்போது தரங்கம்பாடி டேனிஷ்காரரிடம் இருந்தது.

சமயத்தொண்டு புரியவந்த சீகன்பால்க், அத்தொண்டுடன், அரிதின் முயன்று தமிழ்மொழி கற்றுத் தமிழ் பரப்பும் பணியும் புரியலானார். தமிழ் எழுத்துக்களைத் தாளில் எழுதிச் செர்மனி

* V. Smith's Early History of India- P. 245, IV Edn.

நாட்டிற்கு அனுப்பி அச்செழுத்து செய்யவைத்தார்; அச்சுப் பொறியும் பெற்ருர். தரங்கம்பாடியில் தமிழ் நூற்களை இவர் அச்சிட்டார். அங்கே இவர் தாமே அச்செழுத்துக்களும் செய்தார்; காகிதத் தொழிற்சாலை அமைத்துக் காகிதங்களும் செய்தார். இவரது முயற்சியால் தமிழ் நூற்கள் மிகுதியாய் அச்சாகிப் பலரும் படிக்க வாய்ப்புண்டாயிற்று.

அகராதியும் இலக்கணமும்

சீகன்பால்க் 1715-16 ஆம் ஆண்டளவில் தமிழ்-இலத்தீன் அகராதி வெளியிட்டார். மற்றும் அந்நாளில் இவர் தமிழ்-இலத்தீன் இலக்கணம் வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனுல் தமிழ் வெளியில் பரவுவதற்குப் போதிய வாய்ப்பு ஏற்பட்டது. இவர், வீரமாமுனிவர் தமிழ் பரப்பிய அளவிற்குப் பணி புரியவில்லையாயினும், தம்மால் இயன்றஅளவு இலத்தீன் வாயிலாகத் தமிழ் வளர்க்கும் முயற்சி மேற்கொண்டமை மிகவும் போற்றத்தக்கது.

தமிழ்-இலத்தீன் தூதுவருள் ஒருவராய்த் திகழ்ந்த சீகன்பால்க் 1719-ஆம் ஆண்டு இயற்கை யெய்திஞர்.

தமிழ்-இலத்தீன் அகராதி

ஆசிரியர் வீரமாமுனிவர். தமிழ்ச்சொல்லுக்கு இலத்தீன் சொல்லால் பொருள்கூறும் இவ்வகராதியில் ஏறக்குறைய 9000 தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இஃது தொகுக்கப்பெற்ற காலம்

1742-ஆம் ஆண்டு ஆகும். இந்த அகராதியை அடிப்படையாகக்கொண்டு, மேலும் சிலர் தமிழ்-இலத்தீன் அகராதி தொகுத்துள்ளனர்.

இலத்தீன்–தமிழ் அகராதி

இலத்தீன் சொல்லுக்கு நேரே தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் இவ்வகராதியும் வீரமாமுனிவர் தொகுத்ததே. இது கிடைக்கவில்லை. தமிழ்-இலத்தீன் அகராதி தொகுக்கப் பெற்ற காலத்தையொட்டியே இந்த அகராதியும் தொகுக்கப்பட்டிருக்கவேண்டும்.

போர்த்துகீசியம் - இலத்தீன் - தமிழ் அகராதி

முதலில் போர்த்துகீசியச் சொல்லை நிறுத்தி, இலத்தீன் சொல்லாலும் அதனையடுத்துத் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறும் இவ்வகராதியின் ஆசிரியரும் வீரமாமுனிவரே. காலம் 1744–ஆம் ஆண்டெனக் கருதப்படுகிறது. இந்த அகராதியால், இலத்தீன் அறிந்தவர்களேயன்றிப் போர்த்துகீசியம் அறிந்தவர்களும் தமிழ் கற்பதற்கும், தமிழ் அறிந்தவர்கள் அவ்விரு மொழிகளையும் கற்பதற்கும் வாய்ப்பு உண்டு.

குரி

தமிழ் - இலத்தீன் அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு இலத்தீன் சொல்லால் பொருள் கூறும் இந்த அகராதியின் ஆசிரியர்

ஆர். பி. குரி பாதிரியார் (R. P. Gury) ஆவார். பெஸ்கி, மூசே, துய்புய் ஆகிய துறவியர்களைப் போலவே துறவி குரி அவர்களும் தமிழ்-இலத்தீன் அகராதியில் கருத்து செலுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கது. குரியவர்களின் தமிழ்-இலத்தீன் அகராதியைப் பற்றித் தமிழ்க் கலைக் களஞ்சியம் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளது:—

* "பெஸ்கி, ரொட்லர், வின்ஸ்லோ என்ற மூவர் இயற்றியவைகளைப் பயன்படுத்தி ஆர். பி. குரி என்ற பாதிரியார் ஒரு தமிழ் - இலத்தீன் அகராதி இயற்றி நாகப்பட்டணத்திலிருந்து 1867-இல் வெளியிட்டனர்."

இது குறித்துச் சிறிது ஆராய்வாம்: பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் 1742-ஆம் ஆண்டளவில் தமிழ் - இலத்தீன் அகராதியும், இலத்தீன் - தமிழ் அகராதியும், — 1744-ஆம் ஆண்டளவில் தமிழ் - பிரெஞ்சு அகராதியும், போர்த்துகீசியம்-இலத்தீன்-தமிழ் அகராதியும், அடுத்துத் தமிழ் - ஆங்கில அகராதி யொன்றும் தொகுத்தார். ரொட்லர் (Dr. J. P. Rottler) 1830-ஆம் ஆண்டளவில் தமிழ்–ஆங்கில அகராதி தொகுத்தார். இது நான்கு தொகுதிகளுடையது. நான்கு தொகுதிகளும் முறையே 1834, 1837, 1839, 1841-ஆம் ஆண்டுகளில் சென்னையில் பதிப்பிக்கப்பட்டன. அடுத்து வின்சுலோ (Rev. M. Winslow) என்பவரின் ஆங்கிலம்–தமிழ் அகராதி 1842-ஆம் ஆண்டிலும்,

* கலைக்களஞ்சியம் - முதல் தொகுதி - பக்கம் 17.

தமிழ்—ஆங்கில அகராதி 1862-ஆம் ஆண்டிலும் அச்சிடப்பட்டன. வின்சுலோவின் அகராதிகள் அச்சுக்கு வந்தது 1842, 1862-ஆம் ஆண்டுகளில் என்றாலும், அவை இன்னும் சில ஆண்டுகட்கு முன்பே வின்சுலோவால் தொகுக்கப்பட்டுவிட்டிருக்க வேண்டும். அவரது ஆங்கிலம் - தமிழ் அகராதி 1842-இல் அச்சிடப்பட்டிருந்தும், அதற்கும் இருபது ஆண்டுகள் கழித்தே 1862-இல் அவரது தமிழ்-ஆங்கில அகராதி அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு அகராதிகளும் ஏறக்குறைய அடுத்தடுத்தே தொகுக்கப்பட்டிக்க வேண்டும். எனவே, அவையிரண்டும் 1840-ஆம் ஆண்டுக்குள்ளேயாவது தொகுக்கப்பட்டிருக்கலாம்.

இந்த நிலையில், பெஸ்கி, ரொட்லர், வின்சுலோ ஆகிய மூவர் அகராதிகளை அடிப்படையாகக் கொண்டு குரி பாதிரியார் தமிழ்-இலத்தின் அகராதி இயற்றியதாகக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. அங்ஙனமெனில், குரியவர்கள் தமது அகராதியை 1840-ஆம் ஆண்டுக்குமேல் தொகுத்திருக்கலாம். இந்நூல் 1867-இல் நாகப்பட்டணத்தில் அச்சிடப் பட்டிருப்பினும், 1855-ஆம் ஆண்டுக்கு முன்பே தொகுக்கப்பட்டுவிட்டிருக்கவேண்டும். புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தில் 1855-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற தமிழ் - பிரெஞ்சு அகராதியின் முன்னுரையில், அதன் ஆசிரியர்களாகிய முசே, துய்புய் ஆகிய துறவியர் இருவரும், குரி பாதிரியார் அவர்களின் தமிழ் - இலத்தீன் அகராதியைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:—

* "………Néanmoins c'est avec plaisir que nous aimons à payer in tribut de reconnaissance aux sources principales, dans les quelles nous avons puisé, telles que le Dictionnaire de Rottler, celui de Jaffna, le Sadouragarâdi du P. Beschi, le Dictionnaire manuscrit du même Père, celui du P. de Bourges, et le Dictionnaire Tamoul - Latin lithographié du P. Gury." அதாவது:—

"எங்கள் அகராதிக்கு அடிப்படை யூற்றாக உள்ள ரொட்லர் அகராதி, யாழ்ப்பாண அகராதி, பெஸ்கியின் அகராதிகள், பூர்ஷ் அகராதி, குரியவர்களின் தமிழ் - இலத்தீன் கல்லச்சு அகராதி ஆகியவற்றிற்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்"- என்று முசே, துய்புய் இருவரும் கூறியுள்ளனர். 1855-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட இந்தத் துறவியர் இருவரின் தமிழ் - பிரெஞ்சு அகராதியின் முன்னுரையில், குரி பாதிரியாரின் கல்லச்சு செய்யப் பெற்ற தமிழ் - இலத்தீன் அகராதி சுட்டப்பட்டுள்ளதெனில், இந்தத் தமிழ் - இலத்தீன் அகராதி 1855-ஆம் ஆண்டுக்கு முன்பே குரியவர்களால் தொகுக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது வெளிப்படை. எனவே, இவ்வகராதி, 1840-ஆம் ஆண்டுக்கும் 1855-ஆம் ஆண்டுக்கும் இடையே குரி பாதிரியாரால் தொகுக்கப்பட்டது எனக் கொள்ள வேண்டும். தமிழ் - இலத்தீன் அகராதித் தொகுப்பில் வீரமாமுனிவருக்கு அடுத்த இரண்டாவது இடம் குரி பாதிரியாருக்கு உரியது என்பது இப்போது தெளிவாகிறது. குரியின் அகராதியும் பலராலும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

---

* Dictionnaire Tamoul - Francais, Preface, De la 1ére Edition - 1st page - 4th paragraph.

வீரமாமுனிவரின்

திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு

நூற்றுக்கு மேற்பட்ட உலகப் பெருமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ள உலகப் பெருநூலாகிய திருக்குறள், ஐரோப்பிய மொழிகளின் முதன்மை மொழியாகிய இலத்தீனில் வீரமாமுனிவரால் முதன்மையாகப் பெயர்க்கப்பெற்றது. இந்த இலத்தீன் மொழிபெயர்ப்பிலிருந்து, பின்னர் வேறு பல ஐரோப்பிய மொழிகளில் குறள் பெயர்க்கப் பெற்றது. திருக்குறளின் வாயிலாகத் தமிழின் பெருமையினையும் தமிழரின் மாண்பினையும் உலகம் அறிந்து போற்றுவதற்கு வீரமாமுனிவரின் இலத்தீன் மொழிபெயர்ப்பு ஒரு வாயிலாக இருந்தது.

இந்த மொழிபெயர்ப்பு நூலில் ஒரு குறை உண்டு. அதாவது, வீரமாமுனிவர் துறவியாயிருந்ததனால், திருக்குறள் காமத்துப்பாலை மொழிபெயர்க்காது விட்டுவிட்டார் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டினை மட்டுமே இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். காமத்துப் பாலையும் மொழிபெயர்த்து ஐரோப்பியர்க்கு அன்றே தந்திருந்தால், காதல் வாழ்க்கையின் உயர்ந்த கோட்பாட்டையும் திருக்குறளின் சிறந்த இலக்கியச் சுவை மதிப்பையும் அவர்கள் எப்போதே பெற்று மகிழ்ந்து பயனுற்றிருப்பர். காமத்துப்பாலை வீரமாமுனிவர் விட்டுவிட்டதால், அதனை ஐரோப்பியர்கள் அறிந்துகொள்ள மேலும் சில ஆண்டுகள் ஆயின – அவ்வளவுதான்!

எங்குத் தேடியும், வீரமாமுனிவரின் திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு எனக்குக் கிடைக்கவே யில்லை. பல்வேறு ஐரோப்பிய நாட்டினரும் நேரிடை யாகப் படித்தும், தங்கள் மொழிகளில் பெயர்த்தும் பயன்படுத்திக்கொண்ட இந்த இலத்தீன் மொழி பெயர்ப்பை அச்சிட்டு வெளியுலகில் பரப்பவேண் டியது இன்றியமையாத தாகும்.

கிரௌல்

திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு

டாக்டர். கிரௌல் (C. Graul. D. D.) என்னும் செர்மானியப் பெரியார்,

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து."

என்னும் திருக்குறளை ஒருநாள் தற்செயலாய்க் கண்டு அதன் பொருள் அறிந்ததும், அப்படியே மெய்ம் மறந்து விட்டாராம். 'ஆ! இப்படியும் ஒரு கருத் துள்ள பாடல் இருக்கிறதா! ஒருத்தியின் நோக்கி லேயே இருநோக்கு; அவற்றுள் ஒன்று நோய் தருகிறது; மற்றொன்று அதற்கு மருந்தாகிறது. என்ன அழகான கருத்து! எவ்வளவு அருமையான கற்பனை! இந்நூல் முழுதும் படிக்கவேண்டும்; மொழிபெயர்த்துக்கொள்ளவும் வேண்டும்" - என்று பலவாறு பாராட்டி, அவ்வாறே முழுதும் படித்துச் சுவைத்து, செர்மனியிலும் இலத்தீனிலும் மொழி பெயர்ப்பும் செய்தாராம். இவர் திருக்குறளுக்குத் தமிழிலும் உரை எழுதியுள்ளார்.

அறிஞர் கிரெளல் அவர்கள் திருக்குறளுக்கு எழுதிய தமிழ் உரையும் திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பும் ஒரு சேர - ஒரே நூலாக - இணைப்பாகத் தரங்கம்பாடி மாதாகோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது. நூலின் இறுதியில் விளக்கக் குறிப்புக்களும் அருஞ்சொல் விளக்க அகராதியும் (Notes and Glossary) இடம் பெற்றுள்ளன. இந்நூலின் விலை, 1876-ஆம் ஆண்டில் அச்சான 'Clavis' என்னும் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள புத்தக விளம்பர விலைப்பட்டியில் 10 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1876 ஆம் ஆண்டுக்கு முன்பே இந்நூல் அச்சேறிப் பயன்படுத்தப்பெற்று வந்துள்ளது.

Manual De Conversation
Latin - Francais - Tamoul

இந்நூல், ஒருவர்க் கொருவர் அன்றாட நடைமுறைப் பேச்சுக்களைப் பேசிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கு உதவும் வகையில், இலத்தீன், பிரெஞ்சு, தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் பல்வேறு சொற்களும் சொற்றொடர்களும் தரப்பட்டுள்ள ஒரு சிறு கைந்நூலாகும். இந்நூலின் துணைகொண்டு மூன்று மொழிகளிலும் ஓரளவு உரையாடிக் கொள்ளலாம். புதுச்சேரியில் அச்சான இந்நூலிலிருந்து, மக்கி மடிந்துபோன சில ஏடுகளே எனக்குக் கிடைத்ததால், இந்நூலின் ஆசிரியர் பெயரோ, நூல் அச்சான காலமோ எனக்குத் தெரியவில்லை

ஏடுகளின் பழமையை நோக்குங்கால், பத்தொன் பதாம் நூற்றூண்டின் நடுவில் அச்சிடப்பட்டிருக் கலாம் எனத் தோன்றுகிறது.

இந் நூலைப்போலவே, தமிழ் - இலத்தீன் பால மாக இன்னும் சில நூற்கள் எழுதப்பட்டிருந்தன வெனச் சொல்லப்படுகிறது. தமிழர்கள் இலத்தீன் அறிந்து கொள்ளவும், ஐரோப்பியர்கள் தமிழ் அறிந்துகொள்ளவும் செய்யப்பட்ட இம் முயற்சிகள் மிகவும் பாராட்டற்பாலன.

இலத்தீன் - தமிழ்
இயற்கை ஒற்றுமைகள்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகட்குள்ளே நெருங்கிய ஒற்றுமை இருப்பது இயல்பு. வெவ்வேறு குடும்ப மொழிகட்குள்ளே அத்தகைய ஒற்றுமையைக் காணுதல் அரிது. ஆனால், மொழிகள் என்ற முறையில், வெவ்வேறு குடும்ப மொழிகட்குள்ளும் தற்செயலாகச் சில ஒற்றுமைகள் அமைந்து கிடப்பதும் உண்டு.

இலத்தீன், தமிழ் ஆகிய மொழிகட்குள்ளே நெருங்கிய ஒற்றுமை யிருப்பதற்கு வழியில்லை. இலத்தீனோ, இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி; தமிழோ, திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி; எனவே, இவ்விரண்டிற்கும் இடையே எங்ஙனம் ஒற்றுமை யிருக்க முடியும்?

தமிழ் மொழியைத் தாய்மையாக—தலைமையாகக் கொண்டுள்ள தென்னிந்திய மொழிகளோடு இலத்தீனுக்குத் தொடர்பில்லை யெனினும், சம்சுகிருதத்தைத் தாய்மையாக — தலைமையாகக் கொண்டுள்ள வட இந்திய மொழிகளோடு இலத்தீனுக்குத் தொடர்பு கூறமுடியும். இலத்தீனும் சம்சுகிருதமும் இந்தோ - ஐரோப்பியக் குடும்பம் என்னும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் என்னும் செய்தியை 'இலத்தீன் மொழி' என்னும் தனித் தலைப்பின் இறுதியில் தரப்பட்டுள்ள மொழிமரபு

அட்டவணையில் (பக்கம் - 36, 37) அறியலாம். எனவே, இலத்தீனுக்கும் சம்சுகிருதத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பது இயற்கை. அவற்றுள் சிலவற்றை இவண் காண்பாம்:—

ஒரு குடும்ப மொழிகட்குள்ளே எண்ணுப்பெயர்களும் முறைப் பெயர்களும் ஒத்திருப்பது வழக்கம். இந்த ஒற்றுமையைத் திராவிட மொழிகட்குள் காணலாம். அதேபோல் இலத்தீனிலும் சம்சுகிருதத்திலும் ஒத்துள்ளன. முதலில் எண்ணுப் பெயர் ஒற்றுமையைக் காண்பாம்:

	இலத்தீன்	சம்சுகிருதம்
ஒன்று	— உனுஸ் (unus)	— ஏகம் (एकं)
இரண்டு	— துவோ (duo)	— துவே (द्वे)
மூன்று	— த்த்ரெஸ் (tres)	— த்ரீணி (त्रीणि)
நான்கு	— கத்துவோர் (quattuor)	- சத்வாரி (चत्वारि)
ஐந்து	— குயிங்க் (quinque)	— பஞ்ச (पञ्च)
ஆறு	— செக்ஸ் (sex)	— ஷட் (षट्)
ஏழு	— செப்த்தெம் (Septem)	— சப்த (सप्त)
எட்டு	— ஒக்த்தோ (octo)	— அஷ்ட (अष्ट)
ஒன்பது	— நொவெம் (Novem)	— நவ (नव)
பத்து	— தெசெம் (decem]	— தச (दश)
நூறு	— சென்த்தொம் (centum)	— சதம் (शतम्)

இனி, சில முறைப் பெயர்கள் வருமாறு:-

	இலத்தீன்	சம்சுகிருதம்
தாய்	— மாத்தெர் (Mater) —	மாத்ரு (मातृ)

தந்தை — பாத்தெர் (Pater) — பித்ரு

உடன் பிறந்தான் } ஃப்ராத்தெர் (Frater)- ப்ராத்ரு

மேலே காட்டியுள்ளவாறு எண்ணுப் பெயர்களும் முறைப் பெயர்களும் ஒத்திருப்பதன்றி, வேறு பல சொற்களும் ஒத்துள்ளன. அவற்றுள் சில வருமாறு;—

	இலத்தீன்	சம்சுகிருதம்
வீடு	... தொமுஸ் (domus)	... தம
நெருப்பு	... இக்னிஸ் (ignis)	... அக்னி
குதிரை	... இக்வஸ் (equus)	... அச்வ
நுகம்	... ழகொம் (jagum)	... யுகம்
உலோகம்	... ஏஎஸ் (Aes)	.... அயஸ்
பல்	.... தென்ஸ் (dens)	... தந்தா (தந்தம்)
பாம்பு	... செர்பன்ஸ் (serpans)	... சர்பகா (சர்ப்பம்)
கொடை	... தொனும் (donum)	... தானம்
பெயர்	... நொமென்ஸ் (nomens)	.... நாம
உயிர்	... அனிமா (anima)	... ஆத்மா (ஆன்மா)
கைம்பெண்	... விதுவா (vidua)	... விதவா
புதிது	.... நொவொம் (novum)	... நவ (நவம்)
மெல்லிய	.... தெனுயிஸ் (tenuis)	... தனு
சாதல்	... மொரி (mori)	... ம்ரு
இல்லை	... நொ[ன்] (non)	.... ந

மேலே கொடுக்கப்பட்டுள்ள சொல்லொற்றுமையைக் காணுங்கால், இலத்தினுக்கும் சம்சுகிருதத்

திற்கும் இடையேயுள்ள குடும்பத் தொடர்பு புலனாகும். இன்னும் இவ்விரு மொழிகட்கும் இடையே, ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்கும் ஆண் பால் - பெண்பால் சொல்வது போன்ற ஒற்றுமைகள் சிலவும் உள்ளன.

ஈண்டு மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் ஒற்றுமையைக் கூறாமல் விடமுடியவில்லை. வட மொழியில், நியாயம் இன்மையைக் குறிப்பதற்கு 'அநியாயம்' எனவும், சுத்தம் இன்மையைக் குறிப்பதற்கு 'அசுத்தம்' எனவும் 'அ' சேர்த்துச் சொல்லக் காண்கிறோம். இங்கே 'அ' என்பது இன்மை—இல்லாமை என்னும் பொருளைக் குறிக்கிறது. ஆனால் இங்கே இன்மையைக் குறிப்பது 'அ' அன்று, 'ந' என்பதே. 'ந' என்றால் வட மொழியில் 'இல்லை' என்று பொருளாம். வடமொழிப் புணர்ச்சிப்படி ந + நியாயம், ந + சுத்தம் எனப் புணர்ந்தகாலை, 'ந' என்பதிலுள்ள (ந் + அ = ந) 'ந்' கெட 'அ' மட்டும் நின்று அநியாயம், அசுத்தம் என்றாயின. 'ந' என்பதன் பக்கத்தில் உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள் வரின், 'ந' என்பதிலுள்ள ந் + அ என்னும் எழுத்துக்கள் முன் பின்னாக மாறி 'அந்' என்றாகும். எடுத்துக்காட்டாக, ந + ஆசாரம் = அந் + ஆசாரம் = அநாசாரம்; ந + ஏகம் = அந் + ஏகம் = அநேகம் என்பன காண்க. ஆசாரம் = ஒழுங்கு; அநாசாரம் = ஒழுங்கின்மை. ஏகம் = ஒன்று; அநேகம் = ஒன்றின்மை-பல. எனவே, 'ந' என்பதன் திரிபுச் சுருக்கமாகிய 'அ' என்பது வட மொழியில் இன்மைப் பொருளைத் தருவது காண்

கிறோம். இது போலவே இலத்தீனிலும் 'அ' (a) என்பது இன்மைப் பொருளைத் தருகிறது. இலத்தீனில் Mens என்றால் அறிவு; Amens என்றால் அறிவு இல்லாதவன். இங்கே A (அ) என்பது இன்மைப் பொருளைத் தருவதறிக. வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ந, நொ, நொ(ன்) என்பன முறையே இன்மைப் பொருளைத் தருகின்றன. அநாசாரம், அநேகம் என்னும் வடமொழி வழக்குப் போலவே, Uneducated, Unemployment என ஆங்கிலத்திலும் 'அங்' (un) என்பது இன்மைப் பொருள் தருவது காணலாம். இதிலிருந்து, சம்சுகிருதத்திற்கும் இலத்தீன் முதலிய ஐரோப்பிய மொழிகட்கும் இடையேயுள்ள ஒற்றுமை புலனாகும்.

இங்கே, இலத்தீனுக்கும் சம்சுகிருதத்திற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டியதின் நோக்கம், இந்திய மொழிகளுள் வட இந்திய மொழிகளின் தலைமை மொழியாகிய சம்சுகிருதத்தோடு இலத்தீனுக்குத் தொடர்பு கூற முடியுமே தவிர, வேறு குடும்பத்தைச் சேர்ந்ததும் தென்னிந்திய மொழிகளின் தலைமை மொழியுமாகிய தமிழோடு இலத்தீனுக்குத் தொடர்பு கூறமுடியாது என்பதை அறிவிப்பதற்கேயாம். இருப்பினும், மொழிகள் என்ற முறையில் இலத்தீனுக்கும் தமிழுக்கும் இடையேகூட, தற்செயலாக - இயற்கையாகச் சில ஒற்றுமைகள் உள்ளன என்னும் உண்மையையும் மறந்து விடுவதற்கில்லை. வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த இவ்விரு மொழி

கட்குள்ளும் இயற்கையாகவே சில ஒற்றுமைகள் அமைந்திருப்பது வியப்பாய்த்தான் இருக்கிறது. இரண்டும் மிகப் பழைய - உயர்தனிச் செம்மொழிக ளானதால், இயற்கையாகவே ஒருசில ஒற்றுமை களைப் பெற்றிருக்கின்றன போலும்! அண்ணன் - தம்பியரிடையே உள்ள உருவ ஒற்றுமையினும், வெவ்வேறு ஊரினர் இருவரிடையே இயற்கையாய் அமைந்துள்ள உருவ ஒற்றுமையைக் கண்டு வியப் பதிலேதான் சுவை மிகுதி. இங்கேயும் அதுபோலத் தான்! சுவைப்பதற்கு இன்பமான அந்த இயற்கை யொற்றுமைகள் சில இனி வருமாறு:—

சொற்றொடர் (வாக்கியம்) அமைப்பு

'முருகன் எனக்கு ஒரு சுவடி கொடுத்தான்' என்பது ஒரு சொற்றொடர் - அதாவது, வாக்கியம். இத்தொடரில், 'முருகன்' என்னும் எழுவாய் முதலாவதாகவும், 'எனக்கு' என்னும் நான்காம் வேற்றுமை விரி இரண்டாவதாகவும், 'ஒரு சுவடி' என்னும் இரண்டாம் வேற்றுமைச் செயப்படு பொருள் மூன்றாவதாகவும், 'கொடுத்தான்' என்னும் பயனிலை இறுதியாகவும் இருக்கக் காண்கிறோம். தமிழில் இந்த வரிசையில் சொற்களை அடுக்கிச் சொற்றொடர் அமைப்பதே மரபு.

யான் இளமையில் ஆங்கிலம் கற்கத் தொடங் கியபோது, இதே கருத்து, 'முருகன் கொடுத்தான் எனக்கு ஒரு சுவடி' - அதாவது - 'Murukan gave me a book' என்பதாக ஆங்கிலச் சொற்றொடரில் அமைக்கப்படும் சொல் வரிசை முறையறிந்து வியப்

புற்றேன். பிரெஞ்சு மொழியில் 'Mouroucane me donna un livre' (முருகன் எனக்குக் கொடுத்தான் ஒரு சுவடி) எனச் சொற்றொடர் அமைக்கப்படுவது ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. ஆங்கிலத்தில் தமிழ்ச் சொற்றொடர் அமைப்புக்கு மாருக, பயனிலையாகிய வினை எழுவாயை யடுத்து இரண்டாவதாகவும், நான்காம் வேற்றுமை (Indirect Object) மூன்ருவதாகவும், இரண்டாம் வேற்றுமைச் செயப்படுபொருள் (Direct object) நான்காவதாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம். ஆனல், தமிழின் வழிமொழிகளாகிய தென்னிந்திய மொழிகளிலேயன்றி, சம்சுகிருதம், அதன் வழிமொழிகளாகிய இந்தி முதலிய வட இந்திய மொழிகளிலும் தமிழ் போலவே சொற்றொடர் அமைப்புமுறையிருப்பது குறிப்பிடத்தக்கது. சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:-

மலையாளம்:—

'முருகன்	எனக்கு	ஒரு	புஸ்தகம்	தந்நு'
|	|	|	|	|
(முருகன்	எனக்கு	ஒரு	சுவடி	கொடுத்தான்)

கன்னடம்:—

'முருகா	நனகே	ஒந்து	புஸ்தக	கொட்டா.'
|	|	|	|	|
(முருகன்	எனக்கு	ஒரு	சுவடி	கொடுத்தான்)

தெலுங்கு:—

'முருகடு	நாகு	ஒக	புஸ்தகமு	இச்செனு.'
|	|	|	|	|
(முருகன்	எனக்கு	ஒரு	சுவடி	கொடுத்தான்)

சம்சுகிருதம்:-

'முருககா மஹ்யம் ஏகம் புஸ்தகம் அதகத்
| | | | |
(முருகன் எனக்கு ஒரு சுவடி கொடுத்தான்)

இந்தி:-

'முருகன்னே முஜே ஏக் கித்தாப் தீ'
| | | | |
(முருகன் எனக்கு ஒரு சுவடி கொடுத்தான்)

மேற் காட்டியுள்ளாங்கு, திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த தென்னிந்திய மொழிகளிலே யன்றி, இந்தோ-ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த வட இந்திய மொழிகளிலும் தமிழ் போலவே சொற்றொடர், அமைந்திருக்க, வட இந்திய மொழிகளைப் போலவே இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தவையான ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் சொற்றொடர் அமைப்பு வரிசை முறை மாறியிருப்பது வியப்பாயுள்ளது ஆனால், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளின், முதன்மை மொழியாகிய - தாய்மை மொழியாகிய - தலைமை மொழியாகிய இலத்தீன் மொழியில், தமிழ் போலவே சொற்றொடர் வரிசை முறையமைந்திருப்பது வியப்பினும் பெரு வியப்பளிக்கிறது. அதனைக் கீழேகண்டு சுவைத்து மகிழலாமே.

'Murucan mihi librum dedit,

என்பது இலத்தீன் சொற்றொடர், Murucan = முருகன், mihi = எனக்கு, librum = ஒரு சுவடி, dedit = கொடுத்தான் என்பது இதன் பொருள்.

அதாவது, 'முருகன் எனக்கு ஒரு சுவடி கொடுத்தான்' எனத் தமிழ் போலவே இலத்தீனிலும் சொல் வரிசை அமைந்திருப்பதைக் காணலாம். இலத்தீனிலே 'ஒரு' என்ற சொல் சேர்க்காமலேயே—வெற்றுபடியாக librum என்று சொன்னாலேயே—'ஒரு சுவடி' என்ற பொருளைத் தன்னில் தானே தரும்.

தமிழ் போலவே இலத்தீன் சொற்றொடரில் பயனிலை வினை இறுதியிலே அமைந்திருக்க, இலத்தீனின் வழிமொழிகளாகிய பிரெஞ்சு போன்ற மொழிகளில் பயனிலை வினை இறுதியிலே இல்லாமல் இடையிலே—இரண்டாவதாகவோ அல்லது மூன்றாவதாகவோ இருப்பதேன்? என்னைக் கேட்டால், வினை, இறுதியிலே இல்லாமல் இடையிலே இருப்பதனால் குறை யொன்றும் இல்லை; அஃதும் ஒரு வகை நிறைவே - என்று கூறுவேன். இன்னுங் கேட்டால், வினையை இறுதியிலே போடுவதனினும் இரண்டாவதாகப் போடுவதிலே மிக்க உயிர்ப்பு உள்ளது என்று கூறுவேன். அங்ஙனமெனில், வினையை இறுதியிலே போடுகின்ற இலத்தீனிலும் தமிழிலும் உயிர்ப்பு இல்லையா? - என்று கேட்கலாம். இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண்பாம்:

தமிழிலே வினையை இறுதியிலே போட்டு எழுதினும், ஆங்கிலம் போலத் தமிழிலும் வினையை இரண்டாவதாகப் போட்டுப் பேசுவதுண்டு:

'அப்பா கொடுத்தார் எனக்கு',
'நான் தருவேனு உனக்கு',
'முருகன் கொடுத்தான் இதெ (இதை)'.

முதலிய பேச்சுவழக்குத் தொடர்களில், வினையானது, எழுவாயை யடுத்து இரண்டாவதாக—நான்காம் வேற்றுமைக்கும் (Indirect Object), இரண்டாம் வேற்றுமைச் செயப்படு பொருளுக்கும் (Direct Object) முன்னதாக அமைந்திருக்கக் காணலாம். பேச்சு வழக்கிலே இவ்வாறு கூறுவதில் ஒருவகை உயிர்ப்பு உள்ளது. எழுத்து நடையினும் பேச்சு நடையே உயிர்ப்புடையதாகும். பேச்சு நடை என்பது உயிருள்ள ஒருவரைப் போன்றது; எழுத்து நடை என்பது அவருடைய படத்தைப் போன்றது. எனவே, பேச்சு வழக்கிலே, வினை, இறுதியிலே அமையாமல் இடையிலே அமைவது பொருள் புலப் பாட்டிற்கு ஒருவகை அழுத்தம் தருகிறது. இந்த முறை, ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் பேச்சு வழக்கிலும் உள்ளது — எழுத்து வழக்கிலும் உள்ளது; ஆனுல், இம்முறை தமிழில் பேச்சு வழக்கில் மட்டு முள்ளது - எழுத்து வழக்கில் இல்லை. இதிலிருந்து நாம் பின்வரும் செய்தியை உய்த்துணர லாம்:-

முற்காலத்தில் பேச்சு வழக்குச் சொற்றொடர் களில் எந்தச் சொல் எங்கே வேண்டுமானுலும் அமைந்திருந்தது. அவரவரும் தத்தம் உணர்ச்சிக் கேற்ப - விருப்பம்போல் - நேர்ந்தாற்போல் சொற் களை மாற்றிப் போட்டுப் பேசிவந்தனர். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட வரையறையின்றிச் சொற்

றொடர்கள் மாறுபட்டு அமைவதைக் கூர்ந்து கண்ட அறிஞர் சிலர், 'இவ்வாறு கண்டபடி சொற்றொடர் களை அமைக்கக்கூடாது; அப்படி யமைத்தால் அதற்கு ஓர் எல்லையே யில்லாமற் போய்விடும்; ஆதலின், முதலில் எழுவாயையும் இடையில் செயப்படு பொருளையும் இறுதியில் பயனிலையையும் அமைத்தே பேசவேண்டும்-எழுதவேண்டும்; அவ்வாறு செய்தால்தான் மொழியைக் கையாள்வதில் அனைவரிடையேயும் ஓர் ஒருமைப்பாடு இருக்க முடியும்' என்று இலக்கண வரையறைசெய்திருப்பர். அதனையே பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், பேச்சு வழக்கை முற்றிலும் கட்டுப்படுத்த முடியாதாதலின், பேச்சு வழக்கில் மட்டும் சொற்றொடரமைப்பு மாறுதலாயுள்ளது.

மேற்பெறப்பட்ட கருத்திலிருந்து, 'சொற்றொடர் களில் எழுவாயை முதலிலும் பயனிலையை இறுதி யிலும் பெற்றுள்ள மொழிகள் பண்பட்ட பழைய மொழிகள் - அல்லது அவற்றின் உடன் பிறப்பு மொழிகள் எனவும், இந்த வரன்முறை யில்லாத மொழிகள் ஓரளவு பிற்பட்ட மொழிகள் எனவும் ஒரு கருத்தும் உய்த்துணர்ந்து கொள்ளலாம். இதனால்தான், பழம்பெரு மொழிகளாகிய தமிழிலும் இலத்தீனிலும் இறுதியில் பயனிலை வினை அமைந் துள்ளது. இலத்தீனின் நேர் வழிமொழியாகிய பிரெஞ்சு மொழியிலும் பயனிலை இடையிலே யிருப்ப தன்றி ஒரோவழி இறுதியில் அமைவதும் உண்டு.

காட்டாக, முன்சொன்ன பிரெஞ்சுத் தொடரின் துணையை நாடுவோம்:

'Mouroucane me donna un livre'.

முருகன் எனக்குக் கொடுத்தான் ஒரு சுவடி.

மேலே, donna (கொடுத்தான்) என்னும் பயனிலை இடையிலே உள்ளது; un livre (ஒரு சுவடி) என்னும் செயப்படுபொருள் இறுதியிலே உள்ளது. இதையே,

'Mouroucane me le donna'.

முருகன் எனக்கு அதைக் கொடுத்தான்.

என்றும் சொல்லலாம். அதாவது, சுவடி என்பது முன்பே ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், இங்கே மீண்டும் 'சுவடி' கொடுத்தான் என்று சொல்லாமல், 'அதைக்' கொடுத்தான் என 'அது' என்னும் சுட்டுச் சொல்லால் குறித்துவிடலாம். இங்கே 'le' என்பது 'அது' என்னும் சுட்டுப் பொருளில்தான் உள்ளது. இவ்வாறு, இரண்டாம் வேற்றுமைச் செயப்படுபொருள் 'le' என்னும் சுட்டுப் பெயரால் குறிப்பிடப்படும் சொற்றொடர் களில் பயனிலையை இறுதியிலே நிறுத்துவது பிரெஞ்சு மொழி மரபாகும். இவ்வாறு ஒரோவழி பிரெஞ்சுமொழியிலும் பயனிலையானது, இறுதியில்- அதாவது, நான்காம் வேற்றுமைக்கும் (Indirect object) செயப்படுபொருளுக்கும் (Direct object) பின்னால் அமைவது நிகழ்கிறது. இப்படியாக, சொற்றொடரமைப்பில் தமிழோடு உள்ள ஒற்றுமையைக் காண்கிறோம்.

தமிழ் – இலத்தீன் சொற்றொடர் அமைப்பு ஒற்றுமைக்கு இன்னொரு வகையான எடுத்துக் காட்டும் காண்பாம்:

'Animi dotes corporis dotibus longé præstent'. என்பது இலத்தீன் சொற்றொடர். இதன் பொருள், 'உயிர்ப் பண்புகள் உடற் பண்புகளினும் மிகவும் இன்றியமையாதன' – என்பதாம். இலத்தீன் தொடரும் தமிழ்த் தொடரும் ஒரே மாதிரியாய் அமைந்திருப்பதை அறிந்து மகிழ, சொற்களின் நேர்ப் பொருள் கீழே தரப்படும்:

Animi	=	உயிரின்
dotes	=	பண்புகள்
coporis	=	உடலின்
dotibus	=	பண்புகளினும்
longé	=	மிகவும்
præstent	=	இன்றியமையாதன.

இந்த அமைப்பினை ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் காணமுடியாது. இதற்கு மாறாக அவ்விரு மொழிகளிலும், 'உயிரின் பண்புகள்' என்னும் பகுதி முதலிலும், 'மிகவும் இன்றியமையாதன' என்னும் பகுதி இடையிலும், 'உடலின் பண்புகளினும்' என்னும் பகுதி இறுதியிலும் அமையும் என்பதை அம்மொழிகளைக் கற்றவர் அறிவர். அதாவது அம்மொழிகளில், 'உயிர்ப் பண்புகள் மிகவும் இன்றியமையாதன உடற் பண்புகளினும்'–என்றே சொற்றொடர் அமைப்பு இருக்கும். அவை வருமாறு:-

ஆங்கிலம்:-'The characters of the soul are very important than that of the body'.

பிரெஞ்சு:-'Les caractéres de l'âme sont plus importants que ceux du corps'.

ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளோடு தொடர்புடைய இலத்தீனில், அவ்விரு மொழிகளில் உள்ளாங்கு சொற்றொடர் அமைப்பு இல்லாமல், தமிழில் உள்ளாங்கு இருப்பது வியப்பும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

மற்றும், ஒரு சொற்றொடரில் உள்ள சொற்களைப் பொருள் மாறாமல் பலவிதமாக மாற்றிப் போட்டு எழுதவும் இலத்தீனில் இடம் உண்டு. எடுத்துக்காட்டாக:-

'Dei sapientia mundum creavit'.

என்பது இலத்தீன் தொடர். 'கடவுளின் பேரறிவு உலகைப் படைத்திருக்கிறது' — என்பது இதன் பொருள்.

Dei = கடவுளின்
sapientia = பேரறிவு
mundum = உலகை
creavit = படைத்திருக்கிறது

மேலே, தமிழ் போலவே இலத்தீன் தொடர் இருப்பதைக் காணலாம். ஆனால், இஃது ஆங்கிலத்தில்

"The wisdom of God has created the world'.
எனவும், பிரெஞ்சு மொழியில்

'La sagesse de Dieu a crée le monde'.

எனவும் சொல் மாறி அமைக்கப்பெறும். தமிழ் போலவே அமைந்துள்ள

'Dei sapientia mundum creavit'.

என்னும் இந்த இலத்தீன் தொடரை, இப்படி எழுதுவதற்குப் பதிலாக, சொற்களை மாற்றிப் போட்டு

'Sapientia Dei creavit mundum'.

என்றும் இலத்தீனில் ஒரேவழி எழுதலாம். அதாவது, 'பேரறிவு கடவுளின் படைத்திருக்கிறது உலகை' என்று தமிழில் எழுதினல் எப்படியோ— அப்படிப்போன்றது இந்த மாற்றுத்தொடர். நாம் தமிழிலும் சில வேளைகளில் சொற்களை மாற்றிப் போடுவதுண்டு:

'அழகன் எனக்கு இந்தப்பொருளைக் கொடுத்தான்'—என்பதற்குப் பதிலாக,

'எனக்கு இந்தப் பொருளை அழகன் கொடுத்தான்'.

'இந்தப் பொருளை எனக்கு அழகன் கொடுத்தான்'.

'இந்தப் பொருளை அழகன் கொடுத்தான் எனக்கு'.

'எனக்கு அழகன் கொடுத்தான் இதை'.

என்றெல்லாம் தமிழிலும் பொருள் வேறுபடாமல் சொற்களைக் கண்டபடி மாற்றிப்போட்டுப் பேசுகிறோம். ஆனால் எழுதுவதில்லை. தமிழில் பேச்சுவழக்கில் தொடரமைப்பு எப்படியிருப்பினும், எழுத்து வழக்கில் முதலில் எழுவாயும் இடையில் செயப்படுபொருளும் இறுதியில் பயனிலையும் அமையவேண்டியதே இலக்கண நெறி. அது போலவே இலத்தீனிலும் ஒரோவழி தொடரமைப்பு மாறுபடினும், முதலில் எழுவாயும் (Subject), இரண்டாவதாக – நான்காம் வேற்றுமையும் (Indirect object), மூன்றாவதாக - இரண்டாம் வேற்றுமைச் செயப்படுபொருளும் (Direct object), இறுதியாக – பயனிலை வினையும் (Verb) அமைய வேண்டியதே இயல்பான முறை (Normal order) ஆகும்.

இவ்வாறாகச் சொற்றொடரமைப்பில் தமிழிலும் இலத்தீனிலும் உள்ள பல்வகை ஒற்றுமைகளைக் கண்டு சுவைத்து மகிழலாம்.

எண்ணுப் பெயர் ஒற்றுமை

இப்போது உலக மக்கள் பெரும்பாலாரால் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 என்னும் எண் வடிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை 'அரபு எண்கள்', 'இந்திய எண்கள்', 'இந்திய—அரபு எண்கள்' என்றெல்லாம் பிறப்பிடப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. தமிழ் எண்கள் இவற்றினும் வேறு. அவை வருமாறு:-

௧ (ஒன்று)	௭ (ஏழு)	வ (கால் $=\frac{1}{4}$)
௨ (இரண்டு)	௮ (எட்டு)	? (அரை $=\frac{1}{2}$)
௩ (மூன்று)	௯ (ஒன்பது)	தெ (முக்கால் $=\frac{3}{4}$)
௪ (நான்கு)	௰ (பத்து)	வத (முந்திரி $=\frac{1}{320}$)
௫ (ஐந்து)	௱ (நூறு)	ப (ஒருமா $=\frac{1}{20}$)
௬ (ஆறு)	௲ (ஆயிரம்)	

மேலே தரப்பட்டுள்ள தமிழ் எண்களை நோக்கின், அவை தமிழ் எழுத்துக்களாகவே இருப்பது புலனாகும். அதாவது, 'க' என்னும் எழுத்து ஒன்றையும், 'உ' என்பது இரண்டையும், 'ரு' ஐந்தையும், 'எ' ஏழையும், 'அ' எட்டையும் குறிக்கின்றன. 'ங' என்பதில் இறுதிக்கோடு குறைந்தால் (௩) மூன்றைக் குறிக்கும், 'ச' என்பதின் இறுதியில் மேலே ஒரு கோடு ஏற்றிவிட்டால் (௪) நான்கைக் குறிக்கும். 'ச' என்பதின் இறுதியில் வேறொரு வகை மாறுதல் செய்தால் (௬) ஆறைக் குறிக்கும். 'க' என்பதின் இறுதியில் ஒரு வளைவு இணைத்தால் (௯)

ஒன்பதைக் குறிக்கும். 'ய' என்பதின் மேலே ஒரு கோடு வளைத்தால் (ഥ) பத்தைக் குறிக்கும். இன்னும் இவ்வாறே தமிழில் பெரிய எண்களும் பின்ன எண்களும் தமிழ் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் போலவே இலத்தீனிலும் எண்கள் எழுத்துக்களாலேயே குறிக்கப்படுவது வியப்பாயிருக்கிறது. இலத்தீன் எண்கள் 'ரோமன் எண்கள்' (Roman Numbers) என்று சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:-

I	(1)	VIII	(8)
II	(2)	IX	(9)
III	(3)	X	(10)
IV	(4)	L	(50)
V	(5)	C	(100)
VI	(6)	D	(500)
VII	(7)	M	(1000)

மேலே, இருபத்தாறு இலத்தீன் எழுத்துக்களுள் I, V, X, L, C, D, M ஆகிய எழுத்துக்கள் எண்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வெழுத்துக்களை இணைத்து மற்ற மற்ற பெரிய எண்களும் குறிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக:-

ccIↄↄ = 10,000 (பதினாயிரம்)
cccIↄↄↄ = 100,000 (நூறாயிரம்-இலட்சம்)
ccccIↄↄↄↄ = 1,000,000 (பத்து நூறாயிரம்-
பத்து இலட்சம்)

மேலே, 'C' என்னும் எழுத்தைக் கொண்டும், அதையே பக்க வாட்டத்தில் திருப்பிப்போட்டும் பெரிய எண்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண லாம்.

எழுத்துக்களால் எண்கள் குறிக்கப்படுவதில் தமிழிலும் இலத்தீனிலும் ஒற்றுமை இருப்பது போலவே, மற்ருெரு வகை ஒற்றுமையும் இந்த எண் அமைப்பிலேயே உய்த்துணரக் கிடக்கிறது. அது வருமாறு:-

ஒரு பெரிய எண்ணுக்குப் பின்னுல் ஒரு சிறிய எண் போட்டால் கூட்டிக்கொள்ள வேண்டும் என்பது, எந்த மொழியிலுமே ஒரு பொதுநெறி. எடுத்துக்காட்டு:-

தமிழ்: இருபது + ஐந்து = இருபத்தைந்து = 20 + 5 = 25.

இலத்தீன்: Viginti + quinque = Viginti quinque = 20 + 5 = 25.

ஆங்கிலம்: Twenty + five = Twenty five = 20 + 5 = 25.

பிரெஞ்சு: Vingt + cinq = Vingt-cinq = 20 + 5 = 25.

இவ்வாருக, பெரிய எண்ணுக்குப் பின்னுல் சிறிய எண் போட்டால் கூட்டிக்கொள்ள வேண்டும் என்னும் பொதுநெறியிருக்க, — இலத்தீனில் சில பெரிய எண்களுக்கு முன்னுல் சிறிய எண் போட்டால் கழித்துக்கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துக் காட்டு:—

இலத்தீனில் 'V' என்பது ஐந்தையும், 'I' என்பது ஒன்றையும் குறிக்கும்; 'V' என்பதற்கு முன்னால் 'I' என்பதைப்போட்டு 'IV' என எழுதினால், ஐந்தில் ஒன்று கழிய, 'நான்கு' (IV=4) எனப் பொருள்படும். இதுபோலவே, பத்தைக் குறிக்கும் 'X' என்பதற்கு முன்னால் 'I' இதைப்போட்டு 'IX' என எழுதினால், பத்தில் ஒன்று கழிய, 'ஒன்பது' (IX=9) எனப் பொருள்படும். மற்றும், 'C' என்பது நூறையும் 'X' என்பது பத்தையும் குறிக்கும்; 'C' என்பதற்கு முன்னால் 'X' என்பதைப்போட்டு 'XC' என எழுதின், நூறில் பத்து கழிய, 'தொண்ணூறு' (XC=90) எனப் பொருள்படும்.

இவ்வாறாக, எழுதும் வரி வடிவத்தில் பெரிய எண்ணுக்கு முன் சிறிய எண்ணைப்போட்டு எழுதிக் கழித்துக் குறைப்பது ஒருபுற மிருக்க, பேசும் பேச்சொலி வடிவத்திலும் பெரிய எண்ணுக்குமுன் சிறிய எண்ணைக் கூறிக் கழித்துக் குறைக்கும் முறை இலத்தீனில் உள்ளது. 18,19-28,29-38,39 என்பன போல 8, 9 என்னும் எண்களில் முடியும் கூட்டெண்களைக் குறிக்கும் பெயர்களில் இம்முறையைக் காணலாம். எடுத்துக்காட்டு:-

'Viginti' என்றால் 'இருபது' என்றும், 'un' என்றால் 'ஒன்று' என்றும், 'de' என்றால் 'அதிலிருந்து நீங்குவது' (from) என்றும் பொருளாம். எனவே, un + de + viginti = undeviginti என்றால், இருபதிலிருந்து ஒன்று நீங்கியது — அதாவது, பத்தொன்பது (20—1=19) என்று பொருளாம்.

இதுபோலவே, duo + de+viginti = duodeviginti என்றால், இருபதிலிருந்து இரண்டு நீங்கியது— அதாவது, பதினெட்டு (20—2=18) என்று பொருளாம். duo என்றால் இரண்டு. பதினெட்டு என்பதை 'XVIII' எனவும், பத்தொன்பது என்பதை 'XIX' எனவும் இலத்தீனில் எழுதினாலும், இவ்விரண்டு எண்களும் முறையே, இரண்டு குறைந்த இருபது (duodeviginti), ஒன்று குறைந்த இருபது (undeviginti) என்றே வாயால் சொல்லப்படுகின்றன. இருபத்தெட்டு, இருபத்தொன்பது— முப்பத்தெட்டு, முப்பத்தொன்பது முதலியனவும் இவ்வாறே பெயர் சொல்லப்படுகின்றன.

இலத்தீனில் உள்ள இந்த எண் அமைப்பை நோக்குங்கால், தமிழிலும் இப்படியோர் அமைப்பு இருப்பதாக நினைவில் அரும்புகிறது. தமிழிலுள்ள 'ஒன்பது', 'தொண்ணூறு', 'தொள்ளாயிரம்' என்னும் எண்ணுப் பெயர்களை இவண் ஆராய வேண்டும்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு என— அதாவது, 'ஒன்பது' என்னும் சொல்லும் 'பத்து' என்னும் சொல்லும் சேர்ந்து 'தொண்ணூறு' என்னும் சொல்லாக ஆனதாகவும், அடுத்து, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என-அதாவது 'ஒன்பது' என்னும் சொல்லும் 'நூறு' என்னும் சொல்லும் சேர்ந்து 'தொள்ளாயிரம்' என்னும் சொல்லாக ஆனதாகவும், தலைசிறந்த தமிழிலக்கண நூற்களாகிய தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன. இந்தக் கருத்து பொருத்தமுடைய

தாகத் தோன்றவில்லை. 'ஒன்பது + பத்து' என்னும் சொற்புணர்ச்சியில், 'ஒன்பது' என்பது 'தொண்' என்றும் 'பத்து' என்பது 'நூறு' என்றும் மாறித் 'தொண்ணூறு' என்னும் சொல் உருவானதாகவும், 'ஒன்பது + நூறு' என்னும் சொற் புணர்ச்சியில், 'ஒன்பது' என்பது 'தொள்' என்றும் 'நூறு' என்பது 'ஆயிரம்' என்றும் மாறித் 'தொள்ளாயிரம்' என்னும் சொல் உருவானதாகவும் கூறுவதை எவ்வாறு ஒத்துக்கொள்ள முடியும்? இந்தப் பொருந்தாக் கூற்றை,

[1] "ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்".

[2] "ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்".

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களாலும்,

---

1 தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – குற்றியலுகரப் புணரியல் – 40
2 ,, ... ,, ... ,, ... 58.

[1] "ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே".

என்னும் நன்னூல் நூற்பாவாலும் அறியலாம். தலைமைத் தமிழிலக்கணப் பேராசிரியர்கள் இருவரும் எழுதியிருக்கிறார்கள் என்பதற்காக, இவர்தம் கருத்தை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள வியலுமா? இந்தக் கருத்தைத் தேவநேயப் பாவாணரும் 'ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு எழுதியுள்ள குறிப்புரையில் பின்வருமாறு மறுத்துள்ளார்:-

[2] "இந்நூற்பா ஒன்பது+பஃது=தொண்ணூறு என முடிக்கிறது. இம்முடிபு எவ்வகையிலும் பொருந்தாத தொன்றும். ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம் பெயர் தொண்டு என்பது, 'தொண்டு தலையிட்ட' (தொல். 1358) என்று ஆசிரியரும், 'தொண்டுபடு திவவு' (மலைபடு. 21) என்று பெருங் குன்றூர்ப் பெருங்கௌசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப்போய்விட்டது. அவர் காலத்திற்குமுன் தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும்

1 நன்னூல் – எழுத்ததிகாரம் – உயிரீற்றுப் புணரியல் – 44.

2 தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் - கழகப்பதிப்பு - பாவாணரின் அடிக்குறிப்பு - குற்றியலுகரப் புணரியல் - 40.

பெயர்களாயிருந்தன. 'தொண்டு' என்னும் ஒன்றும் இடப்பெயர் வழக்கறவே, தொண்பது என்னும் பத்தாமிடப்பெயர் ஒன்றுமிடத்திற்கும், தொண்ணூறு என்னும் நூறுமிடப்பெயர் பத்தாமிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரத்தாமிடப் பெயர் நூறுமிடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொண்பது என்னும் பெயர் முறையே தொன்பது ஒன்பது என மருவிற்று. ஆயிரத்தாமிடப் பெயர் நூறுமிடத்திற்கு வழங்கவே 9000 என்னும் எண்ணைக் குறிக்க ஒன்பது என்னும் பெயருடன் ஆயிரம் என்னும் பெயரைச் சேர்க்கவேண்டியதாயிற்று. முதல் பத்து எண்ணுப்பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர, மற்றவையெல்லாம் ஒரு சொல்லாயிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும், தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும் நோக்குக. தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறைபற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்கவேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரை யென மறுக்க. ஆகவே தொண்டு + பத்து = தொண்பது, தொண்டு + நூறு = தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தாழ்ந்து வந்து வழங்கின என்றும் அறிந்துகொள்க''.

ஒன்பது + பத்து என்னும் சொற்கள் புணர்ந்து தொண்ணூறு எனவும், ஒன்பது + நூறு என்னும் சொற்கள் புணர்ந்து தொள்ளாயிரம் எனவும் ஆயின எனத் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியிருப்பதைத் தேவநேயப் பாவாணர் மறுத்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதே. ஆயினும், 'தொண்டு' என்னும் சொல் 9-ஐயும், 'தொண்பது' என்பது 90-ஐயும், 'தொண்ணூறு' என்பது 900-ஐயும், தொள்ளாயிரம் என்பது 9000-ஐயும் முன்பு குறித்தன; இவற்றுள் 'தொண்டு' என்னும் சொல் வழக்கற்றுப் போய் விட்டதால், மற்றவை ஒவ்வொரு படி கீழிறங்கி விட்டன; அதாவது, 9000-ஐக் குறித்த தொள்ளாயிரம் என்னும் சொல் 900-ஐயும், 900-ஐக் குறித்த தொண்ணூறு என்னும் சொல் 90-ஐயும், 90-ஐக் குறித்த தொண்பது என்னும் சொல் தொன்பது - ஒன்பது எனத்திரிந்து 9-ஐயும் குறிக்கலாயின - என்று பாவாணர் கூறும் கருத்தை ஏற்றுக்கொள்வதற் கில்லை. தொண்டு என்னும் சொல் வழக்கற்றுப் போனால், தொண்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் அப்படியே இல்லாமல் ஒவ்வொரு படி ஏன் குறைந்துவர வேண்டும்? இஃது இயற்கைக்குப் பொருத்தமாகத் தெரியவில்லையே! மேலும், தொண்பது என்னும் சொல் ஒன்பது என மருவியதாகக் கூறுவதும் பொருந்துவதா யில்லை. அங்ஙனமெனில், ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் பற்றிய உண்மையான தீர்வுதான் யாது? அதனை இங்கே நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

'தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறைபற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு: தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்க வேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலி யுரையென மறுக்க' - என்று பாவாணர் கூறியிருப்பது பொருந்தாது. 'ஒன்பது' என்னும் சொல்லுக்கு 'ஒன்று குறைந்த பத்து' என்று பொருள் கூறுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

இலத்தீனில் V-க்கு (ஐந்திற்கு) முன்னால் I (ஒன்று) போட்டால் IV (4) என, அதாவது நான்கு என்றும், X-க்கு (பத்துக்கு) முன்னால் I (ஒன்று) போட்டால் IX (9) என, அதாவது ஒன்பது என்றும் பொருள் படுவதையும், பத்தொன்பது என்பது ஒன்று குறைந்த இருபது (undeviginti) எனவும் பதினெட்டு என்பது இரண்டு குறைந்த இருபது (duodeviginti) எனவும் சொல்லப்படுவதையும் ஈண்டு ஒப்பிட்டு நோக்கவேண்டும். இலத்தீனில் அப்படியிருப்பதனால் தமிழிலும் ஒன்பது என்பது ஒன்று குறைந்த பத்து என்றே பொருள்படும் என்று கூறவேண்டிய கட்டாயம் இல்லை யெனினும், 'ஒன்று குறைந்த எண்' எனக் கூறும் மரபு, உலக மக்களிடையே உண்டு என்பதைச் சுட்டி நினைவுறுத்தவே இங்கே இலத்தீன் எண்ணுப்பெயர்கள் எடுத்துக்காட்டப்பட்டன. இந்தப் பாதையைப் பின்பற்றினால், ஒன்பது என்னும் சொல்லுக்குப் போலவே தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும்

சொற்கட்கும் தீர்வு காண முடியும். முதலில் ஒன்பது என்பதை எடுத்துக்கொள்வாம்:

பொதுவாகக் கணக்கியலை எடுத்துக் கொள்ளின், ஒன்று முதல் பத்து வரையுமே அடிப்படை எண்கள்—அவற்றாலாய பெருக்கமே மற்றைய எண்கள்—என்பதை அனைவரும் அறிவர். தமிழில் ஒன்று முதல் பத்து வரையுமுள்ள எண்ணுப் பெயர்களுள் 'ஒன்பது' என்னும் எண்ணுப் பெயர் தவிர மற்றைய யாவும் ஒரே சொல்லாயுள்ளன. ஒன்பது என்னும் பெயர் ஒன்(று) + ப(த்)து = ஒன்பது என இரு சொற்கள் புணர்ந்து உண்டானதற்குரிய அறிகுறி தென்படுகிறது. ஒன்று + பத்து என்பன சேர்ந்து ஒன்பது என்னும் பெயர் உண்டாயிற்றென்றால், இரண்டு+பத்து=இருபது ($10\times2=20$), மூன்று+பத்து=முப்பது ($10\times3=30$), எட்டு+பத்து=எண்பது ($10\times8=80$) என்பனபோல, ஒன்று+பத்து என்னும் சொற்கள் புணர்ந்து ($10\times1=10$) ஒரு பத்தைத்தானே அதாவது பத்து என்னும் எண்ணைத்தானே குறிக்க வேண்டும்?-மாறாக ஒன்பது (9) என்னும் எண்ணை எவ்வாறு குறிக்க முடியும்? என்ற வினா எழும். இரண்டு பத்துக்களைக் குறிக்க 'இருபது' என்னும் பெயரும் ஆறு பத்துக்களைக் குறிக்க 'அறுபது' என்னும் பெயரும் இருப்பதுபோல ஒரு பத்தைக் குறிக்க 'ஒருபது' என்னும் பெயர் வழக்காறு தனியே இருப்பதால், ஒன்பது என்னும் பெயர் ஒரு பத்தைக் (10) குறிக்காமல் 9 என்னும் எண்ணையே குறிக்கும் அங்ஙனமெனில், 'ஒன்று + பத்து = ஒன்பது'

என்னும் புணர்ச்சியைப் பெருக்கல் கணக்காக எடுத்துக் கொள்ளாமல், கழித்தல் கணக்காக எடுத்துக் கொள்ள வேண்டும்; அதாவது, $10 \times 1 = 10$ எனக் கொள்ளாமல், $10 - 1 = 9$ எனக் கொள்ளவேண்டும்.

எனினும், இரண்டு+பத்து=இருபது (20), மூன்று+பத்து=முப்பது (30) எனப் பெருக்கலாகப் புணர்வதுபோல், ஒன்று+பத்து என்பதும் ஒருபது (10) எனப் பெருக்கலாகப் புணர்வதே இயற்கை; ஒன்பது (9) எனக் கழித்தலாகப் புணர்வது இயற்கைக்கு முரண் என ஒரேயடியாக அடித்துப் பேசிவிடலாம். மற்றும், ஒன்பது என்பதை இரண்டு சொற்களின் புணர்ச்சியாகக் கொள்ளாமல், ஒன்று, இரண்டு முதலியன போல ஒரே சொல்லாகவே கொள்ளலாம் என்றும் சிலர் கூறிவிடலாம். அங்ஙன மெனில், இதற்குரிய தீர்வு யாது?

இருபது, முப்பது முதலிய பெயர்களின் இறுதி யில் உள்ள 'பது' என்பதைப் 'பத்து' என்னும் சொல்லின் திரிபாகக் கொள்வதுபோலவே, ஒன்பது என்னும் பெயரின் இறுதியில் உள்ள 'பது' என் பதையும் 'பத்து' என்னும் சொல்லின் திரிபாகக் கொள்வதே பொருத்த முடைத்து. எனவே, ஒன்பது என்பதின் இறுதியிலுள்ள 'பது' என்பது 'பத்து' என்பதின் திரிபு எனக் கொள்ளும்போது, அதற்கு முன்னுலுள்ள 'ஒன்' என்பது 'ஒன்று' என்னும் சொல்லின் திரிபு எனக் கொள்ளுதலும் பொருத்த

முடையதுதானே? ஆகவே, ஒன்பது என்னும் பெயர் ஒரே சொல் அன்று; ஒன்று+பத்து என்னும் இரண்டு சொற்களின் புணர்ச்சியே யாகும் என்பது போதரும். இனி, ஒன்று+பத்து என்பது பெருக்கலாகக் கொள்ளப்படாமல் ஒன்பது (10−1=9) எனக் கழித்தலாகக் கொள்ளப்பட்ட வரலாற்றை ஆய்வாம்.

தொன்று தொட்டே ஒன்பது என்னும் எண்ணைக் குறிக்கத் 'தொண்டு' என்னும் சொல் வழக்காற்றில் இருந்து வந்தது. இதனை,

[1] 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்று'.

[2] 'தொடித் திரிவன்ன தொண்டு படு திவவின்'.

[3] 'தொண்டு படு திவவின் முண்டக நல்யாழ்'.

முதலிய ஆன்றோர் ஆட்சிகளால் அறியலாம். எனவே, பண்டை நாளில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, தொண்டு, பத்து என ஒன்று முதல் பத்து வரையுமான எல்லா எண்ணுப் பெயர்களுமே ஒரே சொல்லா யிருந்தமை புலனாகும். இவற்றுள் 'தொண்டு' என்னும் பெயரை மக்கள் நாளடைவில் மறந்து அதன் இடத்தில் ஒன்பது என்னும் பெயரை உறுதிப்படுத்தி விட்டனர். இதற்குப் பொருத்தமான பொருட்டு (காரணம்) உண்டு:

---

1 தொல்காப்பியம் – பொருளதிகாரம் – செய்யுளியல் பேராசிரியம் – 101.
2 மலைபடுகடாம் – வரி 21.
3 ஆசிரிய மாலை.

ஒன்று முதல் பத்து வரையுமான எண்ணுப் பெயர்களுள் ஒன்று, ஆறு, எட்டு, தொண்டு என்னும் நான்கு மட்டும் பல பொருள் தருபவை. அதாவது, ஒன்று என்னும் சொல் 1 என்னும் எண்ணுப்பொருளைத் தருவதல்லாமல், ஒன்றுதல்—பொருந்துதல் என்னும் பொருளையும் தருகிறது, ஆறு என்னும் சொல் 6 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, ஓடும் ஆறு (நதி), வழி, ஆறுதல் முதலிய பொருள்களையும் தருகிறது. எட்டு என்னும் சொல் 8 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, எட்டுதல் என்னும் பொருளையும் தருகிறது. தொண்டு என்னும் சொல் 9 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, பணி, பணி விடை, அடிமைத்தன்மை, அடிமையாள், கடவுள் வழிபாடு, மாட்டுத் தொழுவம், தேங்காய்—பலா முதலியவற்றின் மேல் பகுதி, ஒருவகைப் பூண்டு. பழமை, முதுமை, ஒடுக்கவழி, மாட்டின் கழுத்துக் கட்டை, ஒழுக்கம் கெட்டவன் - அல்லது - கெட்டவள் முதலிய பல்வேறு பொருள்களையும் தருகிறது. இவ்வாறாகத் தொண்டு என்னும் சொல் பல பொருள்கட்கு இடந்தந்து குழப்பம் விளைவிப்ப தாலும், 'ஒழுக்கம் கெட்டவர்' என்ற இழிந்த பொருளும் உடைத்தாயிருப்பதாலும் பையப் பைய மக்கள் ஆட்சியிலிருந்து நழுவிவிட, அதனிடத்தை ஒன்பது என்னும் சொல் உறுதியாகப் பற்றிக் கொண்டது. ஒன்று, ஆறு, எட்டு என்னும் சொற் களும் வேறு பொருள்கள் உடையன எனினும், அவை தொண்டு என்னும் சொல் அளவிற்குக் குழப்பமும் இழிபொருளும் கொண்டிருக்கவில்லை

யாதலின் ஆட்சியில் அப்படியே உள்ளன. மற்றும், தொண்டு என்பதற்குப் பதில் வேறு சொல் உருவாவதற்கு ஏற்ற வாய்ப்பும் இருந்தது. அதாவது:-

ஒன்று முதல் பத்து வரையுமே அடிப்படை எண்கள் - அவற்றைக் கொண்டே ஏனைய எண்ணுப் பெயர்கள் உருவாக்கப்பட்டன - என்னும் உண்மையை ஈண்டு மீண்டும் நினைவு கூரவேண்டும். பத்து என்பதன் பின்னால் ஒன்று போட்டுக் கூட்டிப் (பத்து+ஒன்று=) பதினொன்று என்று சொல்லத் தெரிந்த மக்கள், பத்து என்பதன் முன்னால் ஒன்று போட்டுக் கழித்து (ஒன்[று] ப[த்]து) ஒன்பது எனக் கூறவும் அறிந்திருந்ததில் வியப்பேது மில்லை; இஃது இயற்கையு மாகும்.

அடிப்படை எண்களுள் பத்தே பெரிய எண் - தலைமை எண் - முழுமை எண் ஆகும். ஒன்பது ரூபாய் கொடுத்தால் 'முழுசா கொடுத்து விடுங்களேன்' — 'சரியாய்க் கொடுத்து விடுங்களேன்' — அதாவது, பத்து ரூபாயாகக் கொடுத்து விடுங்களேன் — என்று கூறும் வழக்கம் உலகியலில் உண்டு. மூன்று பொருள்கள் - ஐந்து பொருள்கள் - ஏழு பொருள்கள் என்றெல்லாம் பேசும் மக்கள், ஒன்பது பொருள்களைக் குறிப்பிட வேண்டுமானால், ஒன்பது பொருள்கள் எனக் கூறுவதல்லாமல், 'முழுசுக்கு ஒன்று குறைவு' அல்லது 'பத்துக்கு ஒன்று குறைவு' என்று சொல்லும் சுவையான வழக்காறும் உலகியலில் உண்டு. 'பத்துக்கு ஒன்று குறைவு' என்னும் வழக்காறே 'ஒன்று குறைந்த பத்து' என மாற்றியும்

சொல்லப்பட்டு மேலும் சுவையளிக்கிறது. இவ்வா றெல்லாம் சொற்களை—சொற்றொடர்களைச் சுவை பெறச் சொல்லியாள்வது ஒருவகை மக்கள் மரபு. ஒரு பெரிய எண்ணிலிருந்து ஒன்று குறைந்தால் 'ஒன்று குறைந்த இத்தனை' என்று கூறும் மரபு புலவர்களிடையேயும் உண்டு. நன்னூலாசிரியர் பவணந்தியார் சார்பெழுத்தின் விரியைச் சொல்ல வந்தவிடத்தில், மொத்தம் 'முந்நூற் றறுபத் தொன்பது' (369) என்று கூற வேண்டியவர் அங்ஙனம் கூருமல், 'ஒன்று குறைந்த முந்நூற் றெழுபது' (370−1=369) என்று கூறியுள்ளார். இதனை நன்னூலி லுள்ள

*"உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறு றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப"

என்னும் நூற்பாவின் இறுதி யடியா லறியலாம். 'ஒன்று ஒழி முந்நூற்று எழுபான்' என்றால், 'ஒன்று குறைந்த முந்நூற்று எழுபது' அதாவது 'முந் நூற்று அறுபத்தொன்பது' என்பது பொருள். இது போலவே, ஒன்பது என்னும் எண்ணை, ஒன்று குறைந்த பத்து என்னும் பொருளில், 'ஒன்று ஊன மான பத்து'—'ஒன்று ஊனப் பத்து' என்றெல்லாம்

* நன்னூல் – எழுத்ததிகாரம் - எழுத்தியல் – 6.

அந்தக் காலத்தில் மக்கள் குறிப்பிட்டு வந்துள்ளனர். ஊனம் என்றால் குறைவு; ஒன்று ஊனப் பத்து அல்லது ஊனமான பத்து என்றால், ஒன்று குறைந்த பத்து அதாவது ஒன்பது (9) என்று பொருளாம். இந்த வழக்காறு அன்று இருந்தது என்னும் உண்மையை, '* ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்' என்னும் நன்னூல் நூற்பாவிற்கு உரையாசிரியர் மயிலைநாதர் எழுதியுள்ள உரைப் பகுதியால் அறியலாம். அவ்வுரை, உ. வே சாமிநாதையர் பதிப்பிலுள்ளாங்கு அப்படியே வருமாறு:

'ஒன்பானொடு பத்து..................திரிப்பது நெறியே'.

எ—ன், தொண்ணூறும் தொள்ளாயிரமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) ஒன்பதென்னும் [1] எண் முன்னர்ப் பத்தும் நூறுமான எண்கள் வரின், நிலைமொழி யான [2] ஒன்றானப் பத்தானே வருமொழிக ளிரண்டையு மாறி அதன் பின் அதன் ஒகாரத் துடனே ஒரு தகர வொற்றைச் சேர்த்துப் பஃதென் பதனை யொழித்து முறையே [3] ணகரமும் ளகரமு மாக னகர வொற்றைத் திரிப்பது முறைமை எ-று.

ஒன்றானமான பத்து—ஒன்பது; அஃது அக் காலச் சொல்.

வ—று. தொண்ணூறு, தொள்ளாயிரம் என வரும்.

---

* நன்னூல் – எழுத்ததிகாரம் – உயிரீற்றுப் புணரியல் – 44, உ.வே சாமிநாதையர் பதிப்பு.

எட்டாற் பெருக்கின பத்து எண்பதானாற் போலவே ஒன்றானப் பத்தாற் பெருக்கின பத்தும் நூறும் தொண்ணூறும் தொள்ளாயிரமுமா மென்க. 'நெறி' என்றதனான் ஒற்று [4] இரட்டாது தொளாயிர மென்பதும் கொள்க.

(பி—ம்.) [1] எண்ணின் [2] ஒன்றானமான பத்தானே பத்தும் நூறுமான மொழிகள் [3] ணகார ளகாரமாக [4] இரட்டியாது.

—O—

மேலே, நன்னூல் நூற்பாவுக்கு ஏற்ப மயிலைநாதர் உரை யெழுதியுள்ளார். ஆனால் நன்னூலில் கூறப்பட்டுள்ள புணர்ச்சி முறை பொருந்தாது என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம். எனவே, நூற்பாவைப் பற்றியும் அதன் உரையைப் பற்றியும் இப்போது இங்கே கவலையில்லை. மயிலைநாதர் உரையின் இடையிடையே காணப்படும் 'ஒன்றானப் பத்து', 'ஒன்றானமான பத்து' என்னும் தொடர்களே இங்கே நாம் எடுத்துக்கொண்டு ஆராய வேண்டியவை. இங்கே,

"ஒன்றானமான பத்து—ஒன்பது; அஃது அக் காலச் சொல்".

என்று மயிலைநாதர் கூறியுள்ள விளக்கம் மிகவும் ஊன்றி நோக்கற்பாலது. ஒன்பது என்னும் எண் ஒன்றானமான பத்து என அழைக்கப்பட்டதாகவும் அஃது அக்காலச்சொல் என்பதாகவும் மயிலைநாதர் கூறியிருப்பதை மறப்பதற்கில்லை. ஒன்றானமான பத்து என்பது ஒன்றானப் பத்து என இன்னும் சுருங்க வழங்கப்பட்டதாகவும் அவரது உரையால்

தெரிகிறது. அதாவது, ஒன்ருழி பத்து—ஒன்று குறை பத்து—என்பது அதன் பொருள். ஒன்று குறை பத்தின் சுருக்கமே 'ஒன்பது' என்பதாகும்.

இலத்தீனில் பத்தொன்பது (19) என்பது 'ஒன்று குறைந்த இருபது' — undeviginti — என அழைக்கப்படுதல் போல, தமிழில் ஒன்பது (9) என்பது 'ஒன்று குறைந்த பத்து' என்னும் பொருளில் அழைக்கப்படுதல் ஈண்டு ஒப்புநோக்கி மகிழற்பாலது. இதே பாதையில் சென்ருல் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் எண்ணுப் பெயர்கட்கும் தீர்வு காணலாம்.

ஒன்பது + பத்து என்னும் இரு சொற்களும் இணைந்து 'தொண்ணூறு' என்று ஆகியிருப்பதாகவும் ஒன்பது + நூறு என்னும் இரு சொற்களும் இணைந்து 'தொள்ளாயிரம்' என்ருகியிருப்பதாகவும் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியிருப்பதை நாம் முன்னரே மறுத்துள்ளோம். அது போலவே, முதலில் 9000 என்னும் எண்ணைக் குறித்து வந்த 'தொள்ளாயிரம்' என்னும் பெயர் பின்னர் 900 என்னும் எண்ணையும், 900 என்னும் எண்ணைக் குறித்து வந்த 'தொண்ணூறு' என்னும் பெயர் பின்னர் 90 என்னும் எண்ணையும் ஒவ்வொரு படியிறங்கிக் குறிக்கத் தொடங்கிவிட்டன என்று தேவநேயப் பாவாணர் கூறியிருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, தொண்ணூறு', தொள்ளாயிரம் என்பவற்றிற்கு உரிய புணர்ச்சி விதியை இங்கே நாம் கண்டாக வேண்டும். இது மிக மிக எளிய புணர்ச்சி விதி; அதோடு இயற்கை

யான புணர்ச்சி விதியுமாகும். இது தெரியாமல் இலக்கண ஆசிரியர்கள் எவ்வளவோ இடர்ப்பாடுற்று எதையாவது சொல்லி வைக்கவேண்டுமே யென்று என்னென்னவோ கூறிச் சென்றுள்ளனர். இனி, எளிய — இயற்கையான — உண்மையான — தெளிவான அந்தப் புணர்ச்சி விதி வருமாறு:-

தொள் + நூறு = தொண்ணூறு.
தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம்.

இதனினும் இயற்கையான - உண்மையான புணர்ச்சி விதி எதுவும் இருக்க முடியாது. மொழி நூல் அறிவு மிக்க எவரும் இந்தப் புணர்ச்சி விதி பொருந்தாதென்று புறக்கணிக்கவே முடியாது. புணர்ச்சி விதி சரிதான் - ஆனால் பொருள் என்ன? தொள் நூறு என்றால் 'குறைவு பெற்ற நூறு'; தொள் ஆயிரம் என்றால் 'குறைவு பெற்ற ஆயிரம்'. தொள் என்றால், தொளைத்து எடுக்கப்பட்டது - குறைக்கப்பட்டது என்று பொருளாம். 10 என்பது, பத்து ஒன்று கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் ஒன்பது (10 − 1 = 9) ஆகும். நூறு (100) என்பது, பத்துப் பத்து கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் (தொள் + நூறு) தொண்ணூறு (100 − 10 = 90) ஆகும். ஆயிரம் (1000) என்பது, பத்து நூறு கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் (தொள் + ஆயிரம்) தொள்ளாயிரம் (1000 − 100 = 900) ஆகும். ஒரு பெரிய முழு எண்ணிற்குச் சிறிது குறைவதைத் தனிப்பெயராகச் சொல்லாமல் அந்த முழு எண்ணின் பெயரைக் கொண்டே குறிப்பிடுவது

மக்கள் இயல்பு என்பதை ஈண்டு மீண்டும் நினைவு கூரவேண்டும். IX $(10-1)=9$, XC $(100-10)=90$ என இலத்தீனில் இம்முறை உள்ளதாக முன்பு கூறியிருப்பவற்றையெல்லாம் இங்கே மறுபடியும் நினைவுசெய்து பார்க்கவேண்டும்.

இரண்டு பத்துக்களை இருபது என்றும் ஏழு பத்துக்களை எழுபது என்றும் கூறும் மக்கள், ஒன்பது பத்து என்பது நூறை நெருங்கிவிட்டதால், குறைந்த நூறு என்னும் பொருளில் அதனைத் தொண்ணூறு (தொள்+நூறு) எனக் கூறுவது ஒருவகைச் சுவையான வழக்காறாகும். இது போலவே, மூன்று நூறுகளை முந்நூறு எனவும் எட்டு நூறுகளை எண்ணூறு எனவும் கூறும் மக்கள், ஒன்பது நூறு என்பது ஆயிரத்தை நெருங்கி விட்டதால், குறைந்த ஆயிரம் என்னும் பொருளில் அதனைத் தொள்ளாயிரம் (தொள்+ஆயிரம்) எனக் கூறுவதும் சுவையான வழக்காறேயாகும். ஈண்டு, ஒன்பது என்பது, ஒன்று குறைந்த பத்து என்னும் பொருளில் 'ஒன்றான மான பத்து', 'ஒன்றானப் பத்து' என்றெல்லாம் வழங்கப்பட்டதாக மயிலைநாதர் தெரிவித்திருப்பதை மீண்டும் நினைவு கூரவேண்டும்.

அடுத்து, 'தொள்' என்பதற்கு, தொளைக்கப் பட்டது — துளைக்கப்பட்டது — குறைக்கப் பட்டது — குறைவுபட்டது — என்ற பொருளுண்மைக்குப் பல சான்றுகள் தரமுடியும். தொள்ளுதல் என்றால் தோண்டுதல் - துளைத்தல்; தொள்ளல் - தொளை - தொள்ளை என்றால் துளை;

தொள்ளை என்றால் துளைக்கப்பட்டது - குறைக்கப் பட்டது - எடுத்துக்காட்டு: தொள்ளைக்காது. [1] 'தொள்ளைப் புலால் பை' என அருணகிரிநாதரும் கூறியுள்ளார். தொள்ளை என்பதற்குக் 'குறை' என்னும் பொருளும் உள்ளதை, [2] 'தொள்ளை யுணர்வின் னவர்கள் சொல்லின் மடிகிற்பின்' என்னும் சீவக சிந்தாமணிப் பாடற் பகுதியால் அறியலாம். கம்பர் தமது இராமாயணத்தில்

[3] 'தொளை கொடாழ் தடக்கை'
[4] 'மணித் தோளையுந் தொளைத்தான்'

என்று 'தொளை', 'தொளைத்தான்' என்னும் சொற் களையும் ஆண்டிருப்பது காணலாம்.

'தொள்' என்பதும் அதன் பொருளும் நினைவிற்கு வராமையாலும், குறைந்த பத்து—குறைந்த நூறு — குறைந்த ஆயிரம் எனக் குறிப் பிடுவதில் மக்கள் ஒருவகைச் சுவை காண்கின்றனர் என்னும் உண்மை புலப்படாமையாலும், பழைய இலக்கண ஆசிரியர்கள் தொண்ணூறு, தொள்ளா யிரம் என்பவற்றிற்கு என்னென்னவோ புணர்ச்சி விதிகள் கூறி இடர்ப்பட்டனர். அவற்றின் உண்மை யான — பொருத்தமான புணர்ச்சி விதி இப்போது புலனாகும். இங்கே, இலத்தீன் எண் - எண்ணுப் பெயர் அமைப்பு முறையும் நமக்குத் துணைபுரிகிறது.

---

1. திருப்புகழ் – 289.
2. சீவகசிந்தாமணி – காந்தருவதத்தையார் இலம்பகம் – 4.
3. கம்பராமாயணம் – அயோத்தியா காண்டம் – சித்திரகூடப்படலம் – 23.
4. கம்பராமாயணம் – யுத்த காண்டம் – நிகும்பலையாகப் படலம் – 123.

உண்மை யிங்ஙன மிருக்க, இப்போது புதிய ஆராய்ச்சியாளர் சிலர் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்கு வேறுவகைப் பெயர்க்காரணம் கூறுகின்றனர். பெருவியப்பிற்குரிய - அதே நேரத்தில் பொருந்தாத அந்தப் பொய்க் காரணம் வருமாறு:-

"பண்டைநாளில் அடிப்படை எண்கள் பத்து இருக்கவில்லை; இப்போதுள்ள ஒன்பது நீங்கலாக மொத்தம் ஒன்பது (9) எண்களே அப்போது இருந்தன. அதாவது,

1—ஒன்று	6—ஆறு
2—இரண்டு	7—ஏழு
3—மூன்று	8—எட்டு
4—நான்கு	10—பத்து
5—ஐந்து	

இவையே முன்பு நடைமுறையில் இருந்த எண்களாகும். இப்போதுள்ள ஒன்பது (9) என்னும் எண்ணின் இடத்தில் அப்போது பத்து இருந்தது. இப்போது அடிப்படை எண்கள் பத்து இருப்பதால் பத்தைப் பத்தால் பெருக்கிப் 'பத்துப்பத்து நூறு' (10×10=100) என்கிறோம். அப்போது அடிப்படை எண்கள் ஒன்பதே இருந்ததால், ஒன்பதை ஒன்பதால் பெருக்கினால் வரும் எண்பத்தொன்றைத்தான் (9×9=81) அப்போது 'நூறு' என்றார்கள். அப்போது ஒன்பதின் இடத்தில் பத்து இருந்ததால், அப்போதும் 'பத்துப் பத்து நூறு' (10×10=100) என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால் அப்போது நூறு (100) பழங்கள் என்று சொல்லப்பட்டவற்றை

எண்ணிப் பார்த்தால் (9×9=81) எண்பத்தொரு பழங்களே இருக்கும். இதேபோல அப்போது ஆயிரம் பழங்கள் என்று சொல்லப்பட்டவற்றை எண்ணிப் பார்த்தால் (81×9=729) எழுநூற்று இருபத்தொன்பது பழங்களே இருக்கும். ஆயினும் அப்போதும் 'பத்து நூறு ஆயிரம்'(100×10=1000) என்றே சொல்லப்பட்டது; அந்த 1000 என்பது இப்போதுள்ள 729 தான்.

இந்த நிலையில் புதிதாக ஒன்பது (9) என்னும் எண் முளைத்தது. அதையும் சேர்த்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 — எனப் பத்து எண்கள் கணக்கிடப் பட்டன. புதிய பத்தைப் பத்தால் பெருக்க இப்போதுள்ள நூறு கிடைத்தது; புதிய நூறைப் பத்தால் பெருக்க இப்போதுள்ள ஆயிரம் கிடைத்தது. இவ்வாறாக, அடிப்படை எண்ணில் புதிதாக ஒன்று கூடியதால், பழைய பத்தின் இடத்தையும் பழைய நூறின் இடத்தையும் பழைய ஆயிரத்தின் இடத்தையும் வேறு எண்கள் பிடித்துக்கொள்ள, புதிய பத்தும் புதிய நூறும் புதிய ஆயிரமும் தோன்றின. இந்நிலையில் புதிதாய் வந்தவற்றிற்குப் பெயர் கொடுக்க வேண்டுமே!

முன்னர் எட்டை யடுத்துப் பத்து இருந்தது; பின்னர் மேலும் ஓர் எண் முளைத்துவிட்டதால், எட்டை யடுத்திருந்த பத்து பின்னர் பழைய பத்து அதாவது 'தொல் பத்து' என அழைக்கப்பட்டது. அதேபோல அடுத்த கட்டத்தில் அதாவது பத்துக் கொண்ட அடுக்கு வரிசையில், முன்னர் எண்பதை

யடுத்திருந்த நூறு பின்னர்ப் பழைய நூறு அதாவது 'தொல் நூறு' என அழைக்கப்பட்டது. அதே போல அடுத்த கட்டத்திலும் அதாவது நூறு கொண்ட அடுக்கு வரிசையிலும், முன்னர் எண்ணூறை அடுத்திருந்த ஆயிரம் பின்னர்ப் பழைய ஆயிரம் அதாவது 'தொல் ஆயிரம்' என அழைக்கப்பட்டது. இவற்றுள் தொல் பத்து என்பது தொன்பது - ஒன்பது எனவும், தொல் நூறு என்பது தொன்னூறு - தொண்ணூறு எனவும், தொல் ஆயிரம் என்பது தொல்லாயிரம் - தொள்ளாயிரம் - தொளாயிரம் எனவும் நாளடைவில் மாறின. ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் பெயர்க்காரணம் இதுதான்!"

இவ்வாறு புதிய ஆராய்ச்சியாளர் சிலர் புகலுகின்றனர். இவர்தம் கூற்று பொருந்தாது என எளிதில் மறுத்துவிடலாம். அதற்கு இரண்டு சான்றுகள் உள்ளன; வருமாறு:-

(1) தொல் பத்து என்பது தொன்பது என்று வேண்டுமானால் மாறமுடியுமே தவிர, ஒன்பது என்று மாறமுடியாது. தொல் (தொன்மை) நூறு தொன்னூறு எனவும், தொல் (தொன்மை) ஆயிரம் தொல்லாயிரம் எனவும் மாற முடியுமே தவிர, தொண்ணூறு என்றும் தொள்ளாயிரம் என்றும் மாற முடியாது.

(2) அவ்வாறே 'பழைய' என்னும் பொருளில் 'தொல்' என்பது சேர்ந்துதான் இப்பெயர்கள்

திரிந்து உருவாயின என்று சிலர் வல்லடி வழக்குப் பேசினும், இதனை வேறொரு சான்று காட்டி மறுத்துவிடலாம். பண்டைக் காலத்தில் அடிப்படை எண்கள் பத்து இருக்கவில்லை - ஒன்பது தான் இருந்தன - அதாவது, இப்போது உள்ள ஒன்பது அப்போதிருக்கவில்லை - எட்டை அடுத்துப் பத்து தான் இருந்தது - என்று கூறுவதற்கு என்ன சான்று காட்ட முடியும்? இந்தக் கருத்து ஏற்புடையதாகாது; இயற்கைக்கு முரணானது. இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதானல், அந்தக் காலத்து மக்களுக்கு இரு கைகளிலும் சேர்த்துப் பத்து விரல்கள் இருக்க வில்லை - ஒன்பது விரல்களே இருந்தன - என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை யார் ஏற்றுக்கொள்ள முடியும்? பண்டை நாளில் எண்ணிகைக்குக் கை விரல்களே பயன்படுத்தப்பட்டன - இந்த நாளிலும் பயன்படுத்தப்படுகின்றனவே! கை விரல்கள் பத்தாக இருந்ததனல்தான் - அவற்றின் துணை கொண்டு எண்ணப்பட்டதனல்தான் - அடிப்படை எண்கள் பத்தாக அமைந்தன. இந்தப் பேருண்மையை மறுக்கவோ — மறக்கவோ முடியாது. இந்நிலையில், அடிப்படை எண்கள் ஒன்பதுதான் என்று கூறும் ஆராய்ச்சி எங்ஙனம் பொருந்தும்? இதற்கு உருப்படியான சான்று என்ன கூற முடியும்? எனவே, பழைய பத்து - பழைய நூறு - பழைய ஆயிரம் என்னும் பொருளில் தொன்பது (ஒன்பது) - தொண்ணூறு - தொள்ளாயிரம் என்னும் பெயர்கள் உருவாயின என்று கூறுவது சிறிதும் பொருந்தாதென மறுக்க.

எனவே, குறிப்பிட்ட ஒரு பகுதி - அதாவது, பத்தில் ஒரு பகுதி குறைந்த பத்து - குறைந்த நூறு குறைந்த ஆயிரம் என்னும் பொருளிலேயே ஒன்பது - தொண்ணூறு - தொள்ளாயிரம் என்னும் பெயர்கள் உருவாகியுள்ளன என்னும் உண்மை நமது ஆராய்ச்சியால் போதரும். இந்த ஆராய்ச்சிக்கு இலத்தீன் எண் அமைப்பு முறைகள் சில ஒத்திருப்பதும் நமக்குத் துணைபுரிகிறது. இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் இன்னும் நன்கு எண்ணிப் பார்ப்பார்களாக!

பெயர் வேற்றுமையுருபு ஏற்கும் முறை

தமிழிலக்கணத்தில் ஐ, ஒடு, ஆல், கு, இன், அது, கண் என்னும் உருபுகள், முறையே இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை ஆகிய வேற்றுமை கட்குரிய உருபுகளாகக் கூறப்பட்டுள்ளன. தமிழில் வேற்றுமை யுருபுகள் பெயர்ச் சொற்கட்குப் பின்னே சொல்லோடு சொல்லாக இணைந்து நிற்கும். எடுத்துக்காட்டாக:-

		வேற்றுமை
அவன் வேலனைக் கண்டான்	....	இரண்டு
அவன் வேலனொடு சென்றான் வேலனால் வேலை முடிந்தது	...	மூன்று
அவன் வேலற்குப் பணம் தந்தான்	...	நான்கு
அவன் வேலனின் பிரிந்தான்	...	ஐந்து
அது வேலனது வீடு	...	ஆறு
அது வேலன்கண் உள்ளது	....	ஏழு

மேலே, வேலன்+ஐ=வேலனை; வேலன்+ஒடு=வேலனொடு; வேலன்+ஆல்=வேலனால்; வேலன்+கு=வேலற்கு; வேலன்+இன்=வேலனின்; வேலன்+அது=வேலனது; வேலன்+கண்=வேலன்கண்–என வேற்றுமை யுருபுகள் பெயர்கட்குப் பின்னால் அமைந்திருப்பதையும், அதிலும் சொல்லோடு சொல்லாக இணைந்திருப்பதையும் காணலாம். மேலே காட்டிய உருபுகளே யன்றி, இன்னும் ஒடு,

உடைய, இல், இடம் முதலிய உருபுகளும் தமிழில் உண்டு. அவை நிற்க.

தமிழில் ஐ, ஒடு, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை யுருபுகள் இருப்பது போல, ஆங்கிலத்தில் with, by, to, from, of, at, in, on முதலியனவும், பிரெஞ்சு மொழியில் avec, de, à, pour, dans முதலியனவும் உள்ளன. இவற்றை ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் 'Preposition' என்று சொல்வர். இவை, தமிழ் வேற்றுமையுருபுகளைப் போலப் பெயருக்குப் பின்னே-சொல்லோடு சொல்லாய் இணைந்து வரமாட்டா; மாறாக, பெயருக்கு முன்னே தனிச் சொற்களாகவே வரும். எடுத்துக் காட்டுக்கள் சில வருமாறு:-

ஆங்கிலம்	with the hand	கையொடு, கையால்
பிரெஞ்சு	avec la main	
ஆங்கிலம்	to the hand	கைக்கு
பிரெஞ்சு	à la main Pour la main	
ஆங்கிலம்	from the hand	கையிலிருந்து
பிரெஞ்சு	de la main	
ஆங்கிலம்	of the hand	கையினது
பிரெஞ்சு	de la main	
ஆங்கிலம்	in the hand	கையில்
பிரெஞ்சு	dans la main	

மேலே, ஆங்கிலத்தில் hand என்னும் பெயருக்கு முன்னால் with, to, from, of, in ஆகிய (Prepositions) உருபுகளும், பிரெஞ்சு மொழியில் main என்னும் பெயருக்கு முன்னால் avec, á, pour, de, dans ஆகிய

(Prepositions) உருபுகளும் தனிச் சொற்களாக இருப்பதைக் காணலாம். ஆனால், இந்த ஐரோப்பிய மொழிகளின் முதன்மை மொழியாகிய இலத்தீனில் வேற்றுமை யுருபுகள் தமிழில் இருப்பது போலவே பெயருக்குப் பின்னால் சொல்லோடு சொல்லாய் இணைந்திருப்பது வியப்பளிக்கிறது. அது பற்றிய விவரம் வருமாறு:-

இலத்தீன் இலக்கணத்தில் Nominativus, Genitivus, Dativus, Accusativus, Vocativus, Ablativus என ஆறு வேற்றுமைகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள், Nominative என்பது தமிழிலுள்ள எழுவாய் (முதல்) வேற்றுமையைப் போன்றது; Genitive என்பது ஆறும் வேற்றுமை போன்றது; Dative என்பது நான்காம் வேற்றுமை போன்றது; Accusative என்பது இரண்டாம் வேற்றுமை போன்றது; Vocative என்பது எட்டாம் வேற்றுமை போன்றது; Ablative என்பது மூன்றும் வேற்றுமை-ஐந்தாம் வேற்றுமை-ஏழாம் வேற்றுமை ஆகியவை போன்றது. எடுத்துக்காட்டாக, Mens (மேசை), Domin (அரசன்), Soror (உடன் பிறந்தவள்), Man (கை), Di (நாள்) என்னும் ஐந்து இலத்தீன் பெயர்கட்குப் பின்னால் நிகழும் சில எழுத்து மாற்றங்களால் (Declinationes) வேற்றுமைப் பொருள்கள் பெறப்படுவதைக் கீழே காணலாம்:

1. Mens = மேசை

ஒருமை		பன்மை	
No-Mensa	மேசை	Mensæ	மேசைகள்
Ge-Mensæ	மேசையினது	Mensarum	மேசைகளினுடைய
Da-Mensæ	மேசைக்கு	Mensis	மேசைகளுக்கு
Ac-Mensam	மேசையை	Mensas	மேசைகளை
Vo-ô Mensa	மேசையே	ô Mensæ	மேசைகளே
Ab- Mensâ	மேசையில், மேசையினின்று, மேசையால், மேசையோடு	Mensis	மேசைகளில், மேசைகளினின்று, மேசைகளால், மேசைகளோடு

2. DOMIN = அரசன்

ஒருமை		பன்மை	
No-Dominus	அரசன்	Domini	அரசர்கள்
Ge-Domini	அரசனுடைய	Dominorum	அரசர்களுடைய
Da-Domino	அரசனுக்கு	Dominis	அரசர்களுக்கு

Ac-Dominum
அரசனை

Dominos
அரசர்களை

Vo-ó Domine
அரசனே

ó Domini
அரசர்களே

Ab-Domino
அரசனிடம்,
அரசனினின்று,
அரசனால்,
அரசனோடு

Dominis
அரசர்களிடம்,
அரசர்களினின்று,
அரசர்களால்,
அரசர்களோடு

3 SOROR=உடன்பிறந்தவள் (சகோதரி)

ஒருமை	பன்மை
No-Soror உடன்பிறந்தவள்	Sorores உடன்பிறந்தவள்கள்
Ge-Sororis உடன்பிறந்தவளுடைய	Sororum உடன்பிறந்தவள்களுடைய
Da-Sorori உடன்பிறந்தவளுக்கு	Sororibus உடன்பிறந்தவள்கட்கு
Ac-Sororem உடன்பிறந்தவளை	Sorores உடன்பிறந்தவள்களை
Vo-ó Soror உடன்பிறந்தவளே	ó Sorores உடன்பிறந்தவள்களே
Ab-Sorore உடன்பிறந்தவளிடம், உடன்பிறந்தவளினின்று, உடன்பிறந்தவளால், உடன்பிறந்தவளோடு	Sororibus உடன்பிறந்தவள்களிடம், உடன்பிறந்தவள்களினின்று, உடன்பிறந்தவள்களால், உடன்பிறந்தவள்களோடு

4. MAN=கை

ஒருமை	பன்மை
No-Manus கை	Manus கைகள்
Ge-Manûs கையினுடைய	Manuum கைகளினுடைய
Da-Manui கைக்கு	Manibus கைகளுக்கு
Ac-Manum கையை	Manus கைகளை
Vo-ó Manus கையே	ó Manus கைகளே
Ab-Manu கையில், கையினின்று, கையால், கையோடு	Manibus கைகளில், கைகளினின்று, கைகளால், கைகளோடு

5. DI=நாள்

ஒருமை	பன்மை
No-Dies நாள்	Dies நாட்கள்
Ge-Diei நாளினுடைய	Dierum நாட்களினுடைய
Da-Diei நாளுக்கு	Diebus நாட்களுக்கு
Ac-Diem நாளினை	Dies நாட்களை

Vo-ô Dies	**ô Dies**
நாளே	*நாட்களே*
Ab-Die	**Diebus**
நாளில்,	*நாட்களில்,*
நாளினின்று,	*நாட்களினின்று,*
நாளால்,	*நாட்களால்,*
நாளோடு	*நாட்களோடு*

மேலே, ஐந்து வகையான இலத்தீன் பெயர்கள் வேற்றுமை யுருபு ஏற்றிருப்பதைக் காணலாம். இந்த Mens, Domin, Soror, Man, Di என்னும் ஐந்து பெயர்களுக்கும் பின்னால் காணப்படும் தடித்த எழுத்துக்களை இலத்தீனில் வேற்றுமை யுருபுகள் போலக் கொள்ளல் வேண்டும். அதாவது, a, æ, am, â, arum, is. as, us, i, o, um, e, orum, os, em, es, ibus, ûs, ui, u, uum, ei, erum, ebus– ஆகியவற்றை இலத்தீனில் வேற்றுமையுருபுகள் போலக் கொள்ளல்வேண்டும். இன்னும், ium, ua போன்றன சிலவும் ஒரு சில பெயர்கட்குப் பின்னே வரும்.

தமிழில் எழுவாய் வேற்றுமைக்கு உருபு ஒன்றும் இல்லை; ஆனால் இலத்தீனில் எழுவாய் வேற்றுமைக்கும் (Nominativus) உருபுகள் இருப்பதை மேலுள்ள எடுத்துக்காட்டுக்களில் காணலாம். ஆனால், Soror (உடன் பிறந்தவள்) என்னும் ஒருமைப் பெயரின் எழுவாய் வேற்றுமைக்குமட்டும் உருபு இல்லாதது எண்ணத் தக்கது. தமிழில் எட்டாம் வேற்றுமை யெனப்

படும் விளி வேற்றுமையில், 'முருகன் இங்கே வா' என அண்மை விளியில் மட்டும் -- அதாவது -- அண்மையில் உள்ளாரை அழைக்கும் போது மட்டும், பெயர் இயல்பாய் இருக்கும்; சேய்மை விளியில் - அதாவது - தொலைவில் உள்ளாரை விளிக்கும் போது முருகா, முருகனே என்றெல்லாம் பெயரிறுதியில் சிலவகை மாறுதல்கள் ஏற்படும். இலத்தீன் மொழியிலோ, விளிவேற்றுமையில் (Vocativus) பெயரிறுதியில் உருபு அமைவதன்றிப் பெயருக்கு முன்னும் 'ó' என்னும் விளிப்பொலி எழுத்து நிற்பதைக் காணலாம். தமிழிலும் பேச்சு வழக்கில் 'ஓ முருகா' எனப் பெயருக்குமுன் 'ஓ' என்னும் விளிப்பொலி இடம்பெறுவதும், ஒரோவழி எழுத்து வழக்கிலும் இவ் விளிப்பொலி எழுத்து இடம் பெறுவதும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

மேற்காட்டியுள்ள எடுத்துக்காட்டுகளைக் கொண்டு, பெயர்கள் வேற்றுமை யுருபு ஏற்கும்முறை இலத்தீனிலும் தமிழிலும் ஒத்திருப்பதைக் கண்டு வியந்து மகிழலாம்.

ஈண்டு மேலும் சில செய்திகள் நினைவுகூரத் தக்கன. Mens (மேசை), Domin (அரசன்), Man (கை), Di (நாள்) என்னும் பெயர்கள் தமக்கு இறுதியில் முறையே a, us, us, es என்னும் உருவங்களைப் (உருபுகளைப்) பெற்று முறையே Mensa, Dominus, Manus, Dies என்றாகி எழுவாய் வேற்றுமைப் பொருளில் (Nominativus) நிற்பதை முன்னர்க்கண்டோம். ஆனால் இலத்தின் அகராதியில்

Mens, Domin, Man, Di என்னும் சொல்லுருவங்களைக் காணமுடியாது; எழுவாய் வேற்றுமை உருபுடன் கூடிய Mensa, Dominus, Manus, Dies என்னும் சொற்களே இலத்தீன் அகராதியில் காணப்படும். இந்த அடிப்படையில் வைத்து நோக்குங்கால், தமிழில் எழுவாய் வேற்றுமையில் தனி உருபு இல்லாதது போலவே, இலத்தீன் எழுவாய் வேற்றுமையிலும் தனி உருபு இல்லாதது போன்ற குறிப்பு உய்த்துணரக்கிடக்கிறது.

அடுத்து, தமிழில் வேற்றுமை யுருபுகள் பெயருக்குப் பின்னால் சொல்லோடு சொல்லாய் இணைந்து வேற்றுமைப் பொருள் தருவதுபோன்ற அமைப்பு இலத்தீனிலும் இருந்தாலும், ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் Prepositions எனப்படும் வேற்றுமை யுருபு போன்ற சொல்லுருவங்கள் பெயருக்கு முன்னால் தனித்து நின்று வேற்றுமைப் பொருள் தருவது போன்ற அமைப்பும் இலத்தீனில் உள்ளது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

இலத்தீன்:-	ad	urbem	நகருக்கு, நகரை நோக்கி
ஆங்கிலம்:-	to	the town	
இலத்தீன்:-	ab	urbe	நகரிலிருந்து
ஆங்கிலம்:-	from	the town	
இலத்தீன்:-	cum	patre	தந்தையொடு
ஆங்கிலம்:-	with	his father	

இவ்வாறு Prepositions எனப்படும் ad, ab, cum முதலிய சொல்லுருவங்கள் ஆங்கிலமும் பிரெஞ்சும் போலப் பெயருக்கு முன்னுல் தனித்து நின்று வேற்றுமைப் பொருள் தரினும், தமிழ் போலப் பெயருக்குப் பின்னுல் சொல்லோடு சொல்லாய் இணைந்து நின்று வேற்றுமைப்பொருள் தரும் அமைப்பு (Declinationes) இலத்தீனில் மிகுதியாய் இருப்பதை மறந்துவிட முடியாது.

எல்லா எழுத்துக்களுக்கும் ஒலி

தமிழுக்கும் இலத்தீனுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளுள், எல்லா எழுத்துக்களும் ஒலி பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழில் ஒரு சொல்லை எடுத்துக்கொண்டால் அதிலுள்ள எல்லா எழுத்துக்களையும் ஒலிக்க வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் சில சொற்களில் சில எழுத்துக்கள் ஒலி பெறுவதில்லை. ஒலி பெறாமைக்கு 'Silent' - சைலன்ட் - என்று பெயர் சொல்லப் படுகிறது. எடுத்துக்காட்டு:

ஆங்கிலம்

சொல்		ஒலிப்பு		ஒலிபெறாஎழுத்துக்கள்	
Knowledge	....	நாலட்ஜ்	—	K	(முதலில்)
Wrong	...	ராங்க்	—	W	,,
Psychology	...	சைகாலஜி	—	P	,,
Often	...	ஆஃபென்	—	t	(இடையில்)
Night	...	நைட்	—	gh	,,
Island	...	ஐலாண்ட்	—	s	,,
Though	...	தோ	—	ugh	(இறுதியில்)
Draw	...	ட்ரா	—	w	,,
Come	...	கம்	—	e	,,
Know	...	நோ	—	K-w	(முதல்-கடை

பிரெஞ்சு

Huit	...	வுய்த்	—	H	(முதலில்)
Surveillance	...	சுய்ர்வெயான்ஸ்	—	ll	(இடையில்)
Sept	....	செத்	—	p	,,
Vingt	...	வா (ன்)	—	gt	(இறுதியில்)
Paris	...	பரி	—	s	,,
Horloge	...	ஒர்லோழ்	—	H-e	(முதல்-கடை)

இவ்வாருகச் சில எழுத்துக்கள் ஒலிபெறுவதில்லை. ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியில்தான் ஊமை (Silent) எழுத்துக்கள் மிகுதி. பிரெஞ்சு நாட்டின் தலைநகராகிய 'பாரிஸ் - Paris' என்னும் பெயரின் இறுதியிலுள்ள 'S' என்னும் எழுத்தை ஒலிக்காமல் 'பரி' என்றே பிரெஞ்சு மக்கள் ஒலிப்பது வியப்பாயிருக்கிறது. இன்னும் கேட்டால், பிரெஞ்சு மொழியில் S, X, Z, என்னும் எழுத்துக்கள் சொற்களின் இறுதியில் வரும்போது பெரும்பாலும் ஒலி பெறுவதில்லை. எ. கா:-

Pas = பா; Deux = தே; Nez = நே. மற்றும், chat = ஷா, mot = மோ, part = பார், sport = ஸ்போர் - எனப் பல சொற்களின் இறுதியிலே 'T' ஒலி பெறுவதில்லை. இன்னும், trente = த்ரான்த், histoire = இஸ்துவார் எனச் சொல் இறுதியில் 'e' என்பதும் ஒலிபெறுவதில்லை.

இதில் ஒரு வியப்பு என்னவென்ருல், எழுதும் போது, ஒலிபெரு ஊமை (Silent) எழுத்துக்களையும் விட்டுவிடாமல் எழுதித் தொலைப்பதுதான். 'கூழுக்கும் ஆசை - மீசைக்கும் ஆசை' என்பது போல, ஒலிக்கவும் முடியவில்லை-எழுதாமல் விடவும் முடியவில்லை. முன்னுளில் எல்லா எழுத்துக்களுமே ஒலி பெற்றுத்தான் இருக்கும். நாளடைவில் சோம்பலால் ஒலிப்பு சுருங்கிவிட்டிருக்கிறது

மேலுள்ளவாறு, ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் சில சொற்களில் சில எழுத்துக்கள் ஒலி பெறவில்லை

யாயினும், அவற்றின் முதல் மொழியான இலத்தீனில் தமிழ் போலவே எல்லா எழுத்துக்களை யும் ஒலிக்க வேண்டும். ஆனால் 'h' என்னும் எழுத்து மட்டும் habet — அபெத், hora — ஒரு என ஒலி பெறவில்லை. எதிலும் இப்படியொரு விதிவிலக்கு இருப்பது வியப்பில்லை.

தமிழிலும் இலத்தீனிலும் எல்லா எழுத்துக் களும் ஒலிபெற்றுச் சொற்கள் பழைய முழு உருவத் தில் ஒலிக்கப்படுவதிலிருந்து ஓர் உண்மை புலனா கிறது. தமிழும் இலத்தீனும் தொன்மையான மொழிகள் - அழியாத சிதையாத மொழிகள் - பல மொழிகட்கு முதன்மையான தாய்மையான மொழிகள் — என்னும் உண்மைதான் அது. இலத்தீனிலிருந்து சிதைந்து பிறந்த பிரெஞ்சு மொழியைக் 'கொச்சை இலத்தீன்' – 'பேச்சு இலத்தீன்' (Spoken Latin) என்று சொல்லலாம். அதனால்தான் பிரெஞ்சுமொழியில் சில எழுத்துக்கள் ஒலிக்கப்படுவதில்லை; பேசும்போது மக்கள் சில எழுத்துக்களை விழுங்கிவிடுவது இயற்கைதானே! இது போலவே, தமிழ் சிதைந்து பிறந்த மலையாள மொழியினைக் 'கொச்சைத் தமிழ்' – 'பேச்சுத் தமிழ்' என்று கூறலாம். எடுத்துக் காட்டாகச் சில சொற்கள் வருமாறு:—

நல்ல தமிழ்		கொச்சைத் தமிழ்		மலையாளம்
கொன்று	....	கொன்னு	...	கொன்னு
தின்றது	....	தின்னுச்சி	....	தின்னு
கண்	....	கண்ணு	...	கண்ணு
வாய்	...	வாயி	....	வாயி

காளை	....	காள	...	காள
மழை	...	மழ	...	மழ

மலையாளத்தில் உள்ளது போலவே தெலுங்கிலும் கன்னடத்திலுங்கூட கொச்சைத் தமிழ்ச் சொற்கள் சில உள்ளன:

நல்ல தமிழ்	கொச்சைத் தமிழ்	தெலுங்கு	கன்னடம்
அக்காள்	... அக்கா	— அக்க	— அக்க
மழை / வானம்	மழ / மளெ / வான (ம்)	— வானெ	— மளெ
இரவு	... ராத்திரி	— ராத்திரி	— ராத்திரி
பகல்	.... பகலு	— பகலு	— அகலு
ஊர்	... ஊரு	— ஊரு	— ஊரு
கண்	... கண்ணு	— கன்னு	— கண்ணு
வாய்	... வாயி - நோரு	— நோரு	— பாயி
தலை	.... தல – தலெ	— தல	— தலெ

மேலுள்ளாங்கு கொச்சைத் (பேச்சுத்) தமிழ் பல மொழிகளாக உருவெடுத்தாற்போல, கொச்சை (பேச்சு) இலத்தீனும் பல மொழிகளாக உருவெடுத்தது. எனவேதான், நல்ல தமிழ் போலவே நல்ல இலத்தீனும் எல்லா எழுத்துக்களும் ஒலிக்கப் பெற்றுத் தன் பழைய வடிவம் சிதையாது முழுமை பெற்று நிற்கிறது. ஆனால் இப்போது பேச்சு வழக்கில் இன்றி எழுத்து வழக்கில் மட்டுமே உள்ள இலத்தீன் சிதையாமல் இருப்பது வியப்பில்லை. பேச்சு வழக்கிலும் உள்ள தமிழ் சிதையாமல் கட்டிக் காக்கப்படுவது வியப்பிற்கும் பெருமைக்கும் உரியது.

சார்படைச்சொல் (Article) இன்மை

'The school you want is near my house'.
'Give me a book'.
'I saw an animal',

என ஆங்கிலத்தில் school, book, animal என்னும் பெயர்கட்கு முன்னே முறையே the, a, an என்னும் 'சார்படைச் சொற்கள்' இருக்கக் காண் கிறோம். சார்படைச் சொல் ஆங்கிலத்தில் 'Article' என்று சொல்லப்படுகிறது. a book = ஒரு சுவடி; an animal = ஒரு விலங்கு - என a, an என்னும் சொற்கள் 'ஒரு' என்னும் பொருளைத் தருகின்றன; ஆனால் குறிப்பிட்ட ஒரு சுவடியையோ — ஒரு விலங்கையோ குறிக்காமல் ஏதோ ஒரு சுவடியையும் (any book), ஏதோ ஒரு விலங்கையும் (any animal) குறிக்கின்றன; அதனால் இவற்றை 'Indefinite Article' (தெளிவற்ற சார்படைச்சொல்) என்பர். இவற்றைப் போல் இல்லாமல், the school = அந்தப் பள்ளிக்கூடம் என the என்பது, முன்னமேயே குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிக்கூடத்தைத் தெளிவாய்க் குறிக்கிறது; அதனால் இதனை 'Definite Article' (தெளிவான சார்படைச் சொல்) என்பர். ஆங்கிலத்தில் 'the' என்னும் சார்படைச்சொல் சில விடங்களில் - சில பெயர்கட்கு முன் வராவிடினும், பல விடங்களில் – பல பெயர்கட்கு முன் வந்தே தீர வேண்டும்.

பிரெஞ்சு மொழியில் un, une என்பன தெளி வற்ற சார்படைகள் (Indefinite Article) ஆகும். un, une என்றால் 'ஒரு' என்று பொருளாம்.

ஆண்பாற் சொல்லுக்கு முன்னால் 'un' என்பதும், பெண்பாற் சொல்லுக்கு முன்னால் 'une' என்பதும் வரும். எடுத்துக்காட்டு:

un livre = ஒரு சுவடி (ஆண் பால்)
une maison = ஒரு வீடு (பெண் பால்)

பிரெஞ்சு, இலத்தீன், இந்தி, சும்சுகிருதம் முதலிய இந்தோ - ஐரோப்பியக் குடும்ப மொழிகளில், சொற்களிலும் ஆண் பால் - பெண்பால் பாகுபாடு இருப்பது நினைவுகூரத்தக்கது.

அடுத்து, பிரெஞ்சு மொழியில் le, la, les என்பன தெளிவான சார்படைகள் (Definite Article) ஆகும்; இவை மூன்றும் ஆங்கிலத்திலுள்ள 'the' என்பது போன்றவையாம். இவற்றுள் 'le' என்பது ஆண்பாற் சொல்லுக்கு முன்னும், 'la' என்பது பெண்பாற் சொல்லுக்கு முன்னும், 'les' என்பது ஆண்பாற் பன்மைச் சொல்லுக்கும் பெண்பாற் பன்மைச் சொல்லுக்கும் முன்னேயும் வரும். எ - கா:-

le livre = சுவடி; le canif = பேனாக்கத்தி (ஆண் பால்)
la maison = வீடு; la table = மேசை (பெண் பால்)
les livres = சுவடிகள்; les canifs = பேனாக் கத்திகள் (ஆண்பால் பன்மை)
les maisons = வீடுகள்; les tables = மேசைகள் (பெண்பால் பன்மை)

பிரெஞ்சு மொழியில் பெரும்பாலான இடங்களில் - பெரும்பாலான பெயர்ச் சொற்கள் தமக்கு முன்னால் le, la, les என்பவற்றுள் ஏதேனும் ஏற்ற

ஒரு சார்படைச் சொல்லைப் பெற்றே வரும். பெரும்பாலான பெயர்ச்சொற்கள் ஒரு சொற்றொடரில் இன்றித் தனிச் சொல்லாகக் குறிக்கப்படினும் முன்னால் சார்படைச் சொல் (Definite Article) பெற்றே நிற்கும்.

இங்கே ஆங்கிலச் சார்படை பற்றியும் பிரெஞ்சுச் சார்படை பற்றியும் இவ்வளவு கூறியது, இவ்விரு மொழிகளின் இனத்தைச் சேர்ந்ததும் இவற்றிற்கு முதன்மையானது மாகிய இலத்தீன் மொழியில் சார்படைச் சொல்லே (Article) இல்லை என்பதை அறிவிப்பதற்கேயாம். பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் 'le-la-les', 'the' என்னும் சார்படைச் சொற்கள் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் வந்து மொழிக்கு வேண்டாத ஒரு சுமையாக இருக்கின்ற நிலையில், தமிழ்போலவே இலத்தீனில் சார்படைச் சொற்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக் காட்டு:-

'Rose' (ரோசா) என்பது ஆங்கிலச்சொல். இதன் முன் சார்படைச் சொற்கள் சேர்ந்தால் a rose, the rose எனவரும். 'Rosa' என்பது அதே பொருளுடைய இலத்தீன் சொல்லாகும். இது, எந்த சார்படையும் தேவையின்றி வெற்றுபடியாயிருந்தே a rose, the rose என்னும் பொருளைத் தரும்.

Rosa = rose, a rose, the rose.

தமிழில் ஒரு, ஓர் என்பன இருப்பினும், 'தெளிவான சார்படைச்சொல்' எனப்படும் 'Definite Article' தமிழிலும் இலத்தீனிலும் இல்லாத ஒற்றுமையை நினைவுகூரத்தக்கது.

எண்ணும்மை ஆட்சி

'தந்தையும் மைந்தனும் வந்தனர்' என்று தமிழில் ஒரு தொடர் கூறுகிறோம். இதில், தந்தை, மைந்தன் என்னும் பெயர்கட்குப் பின் 'இன்ளுரும்-இன்ளுரும்' என எண்ணுப் பொருளில் 'உம்' என்னும் இடைச்சொல் வந்துள்ளது. இந்த உம்மை 'எண்ணும்மை' எனத் தமிழிலக்கணத்தில் கூறுவர். இந்த 'உம்' என்பதன் பொருளில் ஆங்கிலத்தில் 'and' என்னும் சொல்லும், பிரெஞ்சில் 'et' என்னும் சொல்லும், இலத்தீனில் 'et', 'que' என்னும் சொற்களும் உள்ளன. தமிழில் எண்ணும்மை 'தந்தையும் மைந்தனும்' என ஒவ்வொரு பெயருக்கும் பின்னே வரும். ஆனல் அந்த மூன்று மொழிகளிலும் இறுதிப் பெயருக்கு முன்னே - அதாவது ஓரிடத்தில் மட்டும் வரும்.

எடுத்துக் காட்டு:-

ஆங்கிலம் :– The father and the son came.
பிரெஞ்சு :- Le père et le fils sont arrivés.
இலத்தீன்:- Pater et filius venerunt

ஆங்கிலமும் பிரெஞ்சும்போல இலத்தீனிலும் எண்ணும்மை இறுதிப் பெயருக்கு முன்ஞல் —ஒரே இடத்தில் மட்டும் வரும் மரபு இருப்பினும், இலத்தீனிலும் தமிழ் போலவே எண்ணும்மை ஒவ்வொரு பெயருக்கும் பின்ஞலும் வருவதுண்டு; மற்றும், ஒவ்வொரு பெயருக்கும் முன்ஞலும் வரும்.

எடுத்துக் காட்டு:-

1) பின்னால் வருவது:

'Cælumque Deus terramque creavit'

'இறைவன் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தான்' - என்பது இதன் பொருள். Deus = இறைவன், (Cælum = விண்ணுலகை, que = உம்) cælumque = விண்ணுலகையும், (terram = மண்ணுலகை, que = உம்) terramque மண்ணுலகையும், creavit = படைத்தான் - என்பது சொற்பொருள். இந்த இலத்தீன் சொற்றொடரில் Cælumque - terramque என ஒவ்வொரு பெயருக்கும் பின்னால் que (உம்) என்னும் எண்ணும்மை வந்திருப்பது காண்க. ஆங்கிலத்தில் இவ்வாறு வராது.

மற்றும், 'Deus cælum terramque creavit' என 'que' (உம்) என்னும் எண்ணும்மை இறுதிப் பெயரின் இறுதியில் மட்டும் வருவதும் இலத்தீனில் உண்டு.

(2) முன்னால் வருவது:

'Et pecuniam et vestes dedit'.

'அவன் பணத்தையும் ஆடைகளையும் தந்தான்'- என்பது இதன் பொருள். et pecuniam = பணத்தையும், et vestes = ஆடைகளையும், dedit = (அவன்) தந்தான் — என்பது சொற்பொருள். இங்கே 'et' (உம்) என்னும் எண்ணும்மைச் சொல் ஒவ்வொரு பெயருக்கும் முன்னாலும் வந்திருப்பது காண்க.

ஒவ்வொரு பெயருக்கும் எண்ணும்மைச் சொல் வருவதில் தமிழும் இலத்தீனும் ஒத்திருப்ப தல்லாமல், 'விண்ணுலகையும் மண்ணுலகையும்' எனத் தமிழில் 'உம்' என்பது தனித்து நில்லாமல் சொல்லோடு சொல்லாய் இணைந்து நிற்பது போலவே, இலத்தீனிலும் 'Cælumque - terramque' என 'que' என்பது தனித்து நில்லாமல் சொல்லோடு சொல்லாய் இணைந்து நிற்பது குறிப் பிடத்தக்கது. ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் இந்த அமைப்பைக் காணமுடியாது; And, Et என்னும் எண்ணும்மைச் சொற்கள் தனித்துப் பிரிந்தே நிற்கும். எனவே, எண்ணும்மை ஆட்சியிலும் தமிழுக்கும் இலத்தீனுக்கும் ஒருசார் ஒற்றுமை யிருப்பதைக் கண்டு மகிழலாம்.

வினுத் தொடர் அமையும் முறை

தமிழ் மொழியில் எவன், எம் மாணுக்கன், ஏது, அவனே, யாது, யாங்ஙனம், இவனு, வந்தானே - என எ, ஏ, யா, ஆ, ஓ என்னும் எழுத்துக்கள் சொல்லின் முதலிலோ - இறுதியிலோ, சொல்லின் அகத்திலோ - புறத்திலோ நின்று வினுப்பொருள் தருவதைக் காணலாம். தமிழிலுள்ள என்ன, எது, யார், என்று, எங்கு, எப்படி - என்னும் பொருளில் ஆங்கிலத்தில் what, which, who, when, where, how ஆகியனவும், பிரெஞ்சு மொழியில் ce que, quel, qui, quand, où, comment ஆகியனவும், இலத்தீனில் qualis, quid, quis, quando, ubi, quomodo ஆகியனவும் வினுப்பொருளில் பயன் படுத்தப்படுகின்றன. ஆனுல் தமிழில் நீயா - நீயோ, எனக்கா - எனக்கோ, பணமா - பணமோ, தந்தாயா- தந்தாயோ என ஆ, ஓ என்னும் இரண்டும் சொல் லின் இறுதியில் சொல்லோடு சொல்லாய் இணைந்து நின்று வினுப்பொருளைத் தருவது போன்ற அமைப்பு ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் இல்லை; ஆனுல் இத்தகைய அமைப்பு ஒன்று இலத்தீனில் உள்ளது.

இலத்தீனில் an, utrum, anne, num, ne என்னும் ஐந்தும் தமிழிலுள்ள வினுவெழுத்துக் களைப்போல் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் முதல் நான்கும், எம் மாணுக்கன், யாங்ஙனம் எனத் தமிழில் உள்ளாங்கு, சொற்களுக்கு முன்னுல் பயன் படுத்தப்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டு:-

'utrum venerit nescio'

'வந்தானோ அறியேன்' – என்பது இதன் பொருள். venerit என்றால் 'வந்தான்', utrum என்றால் 'ஓ' (வினா), utrum venerit என்றால் 'வந்தானோ', nescio என்றால் 'அறியேன்'—என்பது பொருள். இங்கே utrum என்பது சொல்லுக்கு முன்னால் தனிச்சொல்லாக நின்று வினாப் பொருளைத் தருவதைக் காணலாம் அடுத்து,— ஐந்தனுள் இறுதியில் கூறப்பட்டுள்ள 'ne' என்பது, தந்தாயா - தந்தாயோ எனத் தமிழில் உள்ளாங்கு, சொற்களுக்குப் பின்னால் சொல்லோடு சொல்லாய் இணைந்து நின்று வினாப்பொருளைத் தருவது இவண் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டு:

1. Tu mihi pecuniam dedistine?
   நீ எனக்குப் பணம் தந்தாயா?
2. Tu mihi decemne nummos dedisti?
   நீ எனக்குப் பத்துப் பணமா தந்தாய்?
3. Tu mihine pecuniam dedisti?
   நீ எனக்கா பணம் தந்தாய்?
4. Tune mihi pecuniam dedisti?
   நீயா எனக்குப் பணம் தந்தாய்?

மேலுள்ள ஒவ்வொரு தொடரிலும் ஒவ்வொரு வகைச் சொல்லுக்கும் பின்னே 'ne' என்பது சொல்லோடு சொல்லாய் இணைந்து நின்று வினாப் பொருள் தந்து தமிழோடு ஒத்திருப்பதைக் கண்டு மகிழலாம். ஆங்கிலத்தில் இத்தகைய அமைப்பினைக் காண முடியாதன்றோ?

ஒரே வினையுருவம்

1. படித்தல், படிக்க, படித்திருக்க.
2. அவன் படித்துக்கொண்டிருந்தான்.
3. அவன் படித்திருந்தான்.
4. அவன் படிப்பான்.
5. அவன் படித்திருப்பான்.

என்பவற்றை ஆங்கிலத்தில் எழுதவேண்டுமானுல், முறையே,

1. To read, to read, to have read.
2. He was reading.
3. He had read.
4. He will read.
5. He would have read.

என எழுதவேண்டும். அதாவது, வினையை, துணை வினை (Helping verb) போட்டு இரண்டு உருவத்தில் எழுத வேண்டும். ஆனுல் இலத்தீனில், ஆங்கிலம் போல் தனித்தனியே இரண்டு உருவமாக எழுதாமல் தமிழ்போல் ஒரே உருவமாக இணைத்து எழுதலாம். மேலுள்ள ஐந்திற்கும் முறையே இலத்தீன் வருமாறு:-

1. legere, legere, legisse - (படித்தல், படிக்க, படித்திருக்க)
2. legebat - (அவன்) படித்துக்கொண்டிருந்தான்.
3. legerat - (அவன்) படித்திருந்தான்.
4. leget - (அவன்) படிப்பான்.
5. legerit - (அவன்) படித்திருப்பான்.

இலத்தீனில் legere என்றால் 'படித்தல்' என்று பொருளாம். இதில் 'leg' என்பதுதான் அடிப்படை உருவம். இந்த வேரிலிருந்தே, மேலே காட்டப்பட்டுள்ள பல்வேறு விகற்ப வடிவங்களும் உருவாகியுள்ளன. ஆங்கிலத்தில் முதல் வினையும் துணை வினையும் (was reading, had read, will read, would have read) தனித் தனிச் சொல்லாகப் பிரிந்து நிற்கின்றன. தமிழில், படித்துக்கொண்டிருந்தான், படித்திருந்தான், படித்திருப்பான் எனப் 'படி' என்னும் முதல் வினையோடு 'கொள் (கொண்டு)', 'இரு' என்னும் துணை வினைகள் இணைந்து நின்று ஒரே சொல் போல் இருக்கக் காணலாம். இவ்வாறே இலத்தீனிலும் ஒரே வினையுருவத்தைக் காண்கிறோம். இலத்தீனில் 'அவன்' என்னும் எழுவாய் வெளிப்படையாயின்றித் தோன்றா எழுவாயாய் மறைந்துள்ளது. legebat என்பதற்குப் 'படித்துக்கொண்டிருந்தான்' என்பதுதான் நேர்ப்பொருள்; இங்கே நாம் 'அவன்' என்பதையும் சேர்த்து 'அவன் படித்துக்கொண்டிருந்தான்' என்று பொருள் செய்துகொள்ளவேண்டும்.

எழுவாய் இல்லாத தொடர்

தமிழ் போலவே இலத்தீனில் எழுவாயில்லாமல் சொற்றொடர் அமைவதும் ஒரோவழி உண்டு. எ. கா:-

1. 'Dicunt illum esse bonum' (அவன் நல்லவனென்று சொல்கிறார்கள்.) illum esse bonum = அவன் நல்லவன் என்று, dicunt = சொல்கிறார்கள்.

2. 'Admirantur virtutem'. (நல் வினையைக் கண்டு வியக்கின்றனர்.) virtutem = நல் வினையைக் கண்டு, admirantur = வியக்கின்றனர்.

மேலுள்ள தொடர்களில் dicunt (சொல்கிறார்கள்), admirantur (வியக்கின்றனர்) என்னும் வினைகட்கு 'யார்' என அறிவிக்கும் எழுவாய் இல்லாமை அறிக. தமிழிலும் இந்த மரபு உண்டு. இதைத்தான் நாம் தமிழில் 'தோன்றா எழுவாய்' என்று கூறுகிறோம்.

*

மொழி என்ற முறையில் உலக மொழிகள் பலவற்றுக்குள்ளும் ஒருசில ஒற்றுமைகள் இங்கும் அங்குமாக இருப்பது இயற்கையெனினும், உலக மொழிக் குடும்பங்களுள் தொன்மையும் தலைமையும் சிறப்பும் மிக்க திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த இலத்தீன் ஆகிய இரண்டிற்கும் இடையே தற்செயலாக இத்துணை ஒற்றுமைகள் இருப்பது வியப்பாயுள்ளது. அதிலும், இலத்தீனுக்குத் தன் குடும்பத்து நெருங்கிய மொழிகளாகிய பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவற்றோடு இல்லாத ஒற்றுமைகள் சில தமிழோடு இருப்பது தான் வியப்பினும் வியப்பு. இதிலிருந்து நாம் அறிவது, தமிழும் இலத்தீனும் இயல்பான பழைய உயர்தனிச் செம்மொழிகள் என்பதாகும். இவ்விரண்டனுள்ளும், இலத்தீனைப்போல் தமிழைப் பேச்சு வழக்கினின்றும் வீழச் செய்யாமல்

அன்றுபோல் என்றும் பேணிக் காத்துவரும் தமிழ்மக்கள் திறமையானவர்கள் — மிகவும் போற்றுதலுக்கு உரியவர்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க உயர்தனிச் செம் மொழியாம் தமிழ்மொழி இலத்தீன் வாயிலாக உலக அரங்கில் பரவி 'உலகத் தமிழ்' என்னும் ஒப் பற்ற சிறப்புப் பெயர் பெறும்வகையில் தமிழ் - இலத்தீன் பாலமாகப் பன்னூற்கள் படைத்தளித் துள்ள பன்னூட்டறிஞர் பெருமக்களும் தமிழ் மக்களின் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவ ராவர்.

முதல் பாகம் முற்றிற்று.

தமிழ் இலத்தீன் பாலம்

-இரண்டாம் பாகம்-

தமிழ் - இலத்தீன் அகரவரிசை

குறிப்புரை:

இந்த அகர வரிசையில் ஏறத்தாழ 3830 தமிழ்ச் சொற்கட்கு நேர்ப்பொருளுடைய இலத்தீன் சொற்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள், பெரும்பாலான தமிழ்ச் சொற்கட்கு ஒரே பொருளில் - ஒரே இலத்தீன் சொல் தரப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டு:

அரசன் = rex. அரசி = regina (பக்கம்-244)

சில தமிழ்ச் சொற்கட்கு ஒரே பொருளுடைய பல இலத்தீன் சொற்கள் இடையிலே காற்புள்ளி (,) யிட்டுத் தரப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டு:

அகலம் = latitudo, amplitudo. (ப - 241)

அச்சம் = metus, timor, terror. (ப - 242)

சில தமிழ்ச் சொற்கட்குப் பல பொருள்கள் கொடுக்கப் பட்டிருக்கும்; தமிழ்ப்பொருள் அடைப்புக் ( ) குறிக்குள் இருக்கும்; அதற்குரிய இலத்தீன் சொல்லின் பக்கத்தே அரைப்புள்ளி (;) அமைந்திருக்கும். எடுத்துக் காட்டு:

அகம் = (வீடு) domus; (மனம்) Voluntas;
(இடம்) locus; (ப - 241)

சில தமிழ்ச் சொற்கட்கு நேரே, ஒரே பொருளில், பல இலத்தீன் சொற்கள் சேர்ந்த ஒரு தொடர் தரப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டு:

அக்காள் = Soror natu major (ப - 241)

அண்ணன் = frater natu major (ப - 243)

மேலே தரப்பட்டுள்ள குறிப்புக்களின்படி இந்த அகர வரிசை நூலைப் படித்துப் புரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பல இலத்தீன் சொற்களை அறிமுகப்படுத்துவதற்காக, வழக்கிலுள்ள வடமொழிச் சொற்கள் சிலவும் இவண் இடம்பெற்றுள்ளன.

அ

அஃகல்-deficientia
அஃது-(அது) illud
அஃறிணை-genus neutrum
அகடு-(வயிறு) venter; (நடுவிடம்)medium
அகத்தியம்- (அவசியம்) - necessitas
அகந்தை-arrogantia, petulantia, præsumptio
அகப்படுகிறது-capi, deprehendi
அகப்படுத்துகிறது-capere, deprehendere
அகப்பை-cochlear ollæ
அகம்- (வீடு) domus; (மனம்) voluntas; (இடம்) locus; (உள்ளிடம்) locus interior; (அகந்தை) arrogantia
அகராதி - dictionarium
அகலம்-latitudo, amplitudo
அகலிடம்-mundus
அகலுகிறது-(நீங்குகிறது) recedere, decedere; (அகலப்படுகிறது) extendi
அகல்- (விளக்கு) lampas fictilis
அகழி-mænia, vallum fossa arcis
அகழ்கிறது- fodere
அகற்றுகிறது - removere
அகில்-Hilaloe, seu, Aguila
அக்காள்-soror natu major
அங்கணே- ibi
அங்கம்-(உடம்பு) corpus
அங்கலாய்ப்பு-angustia, inquietudo
அங்கனம்-Terminalia
அங்காடி - taberna
அங்கு - ille locus
அங்ஙனம் - Terminalia
அசடு - intertia
அசட்டை - contemptus, negligentia
அசதி - lassitudo, oblivio
அசத்தியம் – mendacium
அசந்தர்ப்பம் inconvenientia, inoportunitas

அசை - (யாப்புஅசை) syllaba; (அசைபோடுதல்)ruminatio

அசைகிறது - moveri

அசைக்கிறது - movere

அசைதல் - motio

அச்சம் - metus, timor, terror

அச்சு – (அச்சு வடிவம்) forma;(அச்சு எழுத்து) typi; (வண்டி அச்சு) axis

அஞ்சலி - reverentia

அஞ்சு - (ஐந்து) quinque

அஞ்சுகிறது - timere

அஞ்ஞானம் - ignorantia

அடகு - pignus

அடக்கம் - (ஒன்றுள் அடக்கம்) inclusio; (மன அடக்கம்) modestia

அடக்குகிறது - includere, continere

அடங்கலும் - (முழுதும்) omnia

அடங்காமை - resistentia rebellio

அடங்குகிறது - contineri

அடி - (அடித்தல்) percute; (கால்) pes

அடிக்கடி - passim, sæpi

அடிக்கிறது - verberare

அடிசில் - oriza coota

அடிபடுகிறது - vapulare

அடிமை - servitus

அடுக்கு - ordinatio, dispositio

அடுக்கடுக்காய் - ordinatè, dispositè

அடுக்கிறது - appropinquare

அடுப்பு - focus, caminus

அடை - laganum (தின்பண்டம்)

அடைகிறது - obtinere

அடைக்கலம் - refugium, asylum

அடைக்கிறது - obturare

அடைப்பு - ocelusio

அட்டவணை - index, catalogus, summarium

அட்டை - hirudo, sanguisuga

அணி - (நகை) monile; (அழகு) pulchritudo; (வரிசை) ordo, series

அணிகிறது - indure monilia

அணிந்துரை - præfatio

அணிமை - tenuitas

அணுகுகிறது - accedere

அணை - (கட்டில்) cubile; (நீர்) அணை cataracta
அணைகிறது - extingui
அணைக்கிறது - extinguere
அண்டுகிறது - accedere
அண்டை - vicinia
அண்ணன் – frater natu major
அண்ணுருகிறது - suspi–cere
அண்மை - tenuitas
அதட்டுகிறது - minitari, exprobrare
அதிகம் - copia
அதிகரிக்கிறது - excellere, superare
அதிகாரம் - jurisdictio
அதிசயப்படுகிறது - admirari, stupere
அதிசயம் – admiratio, miraculum
அதிர்- அதிர்ச்சி– அதிர்வு- tremor
அது - illud
அத்தை - socrus
அந்தகாரம் - obscuritas
அந்தரங்கம் - solitudo
அபகரிப்பு - nocumentum
அபராதம் - pænitentia
அபிப்பிராயம் - intentio
அப்பம் - panis, placenta
அப்பன் - aba, pater
அப்பியாசம் - praxis
அப்புறம்- ultra in posterum
அப்பொழுது - tunc
அப்போதைக்கப்போது- identidem
அமங்கலம் - rusticitas
அமர் - (சண்டை) prœlium
அமர்த்துகிறது - placare
அமளி - tumultus
அமாவாசை - novilunium
அமிர்தம் - ambrosia, dulcedo
அமிழ்கிறது - submergi
அமிழ்தம் - ambrosia, dulcedo
அமிழ்த்துகிறது- submergere
அமுக்குகிறது- deprimere
அமுங்குகிறது - absorberi
அமுதம் } ambrosia,
அமுது } dulcedo
அமைகிறது - sedari
அமைச்சு – consiliarius
அமைதி - tranquillitas
அம்பு - sagitta

அம்மணம் - nuditas
அம்மா - mater
அயருகிறது - deficere
அயர்வு - அயர்ச்சி - fastidium
அயல் – vicinia
அயிர்ப்பு - suspicio
அயோக்கியம் - incongruitas
அரக்கர் - gigantes
அரங்கம் - cætus
அரசன் - rex
அரசி - regina
அரண் - arx, custodia
அரவு - serpens
அரி - (சிங்கம்) lèo; (கோடு) linea, (வண்டு) scarabæus
அரிசி - oriza
அரிப்பு - cribratio
அரிமா - (சிங்கம்) leo
அரியது - difficile
அரிவை - femina
அருகு - (அணிமை) tenuitas
அருமை - difficultas
அரும்பு - calix florum
அருவருக்கிறது - horrere
அருவருப்பு - horror
அருவி - rivilus é monte
அருளுகிறது - dignari
அருள் - misericordia, beneficium
அரை- (பாதி) dimidium; (இடுப்பு) zona
அரைக்கிறது - molere
அரையன் - (அரசன்) rex
அர்ச்சனை - adoratio
அர்ச்சிக்கிறது - adorare, venerare
அர்த்தம் – significatio, sensus
அலகு - (வாயலகு)maxilla
அலகை – dæmon
அலக்கண் - Vexatio
அலக்கழிக்கிறது-fatigare
அலங்கரிக்கிறது – ornare
அலங்காரம் - ornatus
அலசுகிறது - lavare
அலமரல் - turbo, gyratio
அலம்புகிறது jactari
அலர்- (மலர்) flos apertus
அலர்கிறது - florem aperire
அலறுகிறது - ejulare
அலட்சியம் - contemplus
அலி - eunuchus
அலுக்கிறது - fatigari
அலுப்பு - fatigatio, vexatio

அலுவல் - occupatio, negotium

அலை - fluctus

அலைகிறது - fluctuare

அலைச்சல் - அலைப்பு -

அலைவு - agitatio, concussio, vexatio

அலைதல் - vago

அல் - (இரவு) nox

அல்ல - non

அல்லது - vel, aut, sive

அல்லல் - afflictio, dolor

அல்லாமல் - præter

அவண் - ibi

அவர் - illi

அவன் - ille

அவா - ingens cupido

அவாவுகிறது - concupiscere

அவிகிறது - extingui

அவிக்கிறது - extinguere

அவிழ்கிறது - solvi

அவிழ்க்கிறது - solvere

அவை - (அவைகள்) illa; (சபை) cœtus, societas

அவ்வண்ணம்-ille modus, sic

அவ்வளவு - tantum

அவ்வாறு - ille modus, ita

அழகு - pulchritudo, formositas, elegantia

அழல் - (நெருப்பு) ignis

அழிகிறது - corrumpi

அழிக்கிறது - destruere

அழிவு - corruptio, destructio

அழுகிறது - flere

அழுகுகிறது - putrescere

அழுகை - fletus

அழுக்காறு - impatientia,

அழுக்கு - sordes

அழுங்கல் - depressio

அழுத்தம் - densitas

அழுத்துகிறது - infigere

அழுந்துகிறது - infigi

அழைக்கிறது - vocare

அளக்கிறது - metiri

அளத்தல் - mensuratio

அளவு - mensura

அளவிறந்த - immensus

அளவின்மை -immensitas

அளவை - (அளவு) mensura

அளி - miseratio, largitio

அளிக்கிறது - dare, tradere

அள்ளுகிறது - extrahere

அறம் - virtus

அறிகிறது - scire

அறிக்கை - notitia, instructio

அறிஞன் - qui scit, poeta

அறிமுகம் - familiaritas

அறியாமல் - neseiendo

அறியாமை - ignorantia

அறிவிக்கிறது - certiorem facere

அறிவு - ratio, ingenium, scientia, perceptio

அறுகிறது - secari, cessare

அறுக்கிறது - cædere

அறுதி - (முடிவு) finis

அறுபது - sexginta

அறுப்பு - (பயிர் அறுப்பு) messis

அறை - cubiculum

அறைகிறது - (ஓங்கியடித்தல்)infligere

அற்பம் - parvitas

அற்புதம் - admiratio

அனல் - ignis

அனுகூலம் - favor, clementia

அனுசரணை - convenientia

அனுபவம் - apprehensio, experientia

அனுபவிக்கிறது- experiri

அனுபோகம் - condelectatio

அனுப்புகிறது - mittere

அனுமதி-consensus, permissio

அனேகம் - copia, multi

அனைத்து- tantum, quantum

அனைத்தும் - omnia

அனைவரும் - omnes

அன்பு - amor

அன்மை - negatio

அன்றி - prœter

அன்று - (அன்றைக்கு) illa dies; (அல்ல) non

அன்றோ - nonne?

அன்னம் -(உணவு) cibus; (பறவை) cygnus

அன்னியம் - res externa

அன்னியோன்னியம் - reconciliatio

அன்னை - mater

அஸ்திவாரம் - fundamentum

ஆ

ஆ - (பசு) vacca
ஆகாசம் - ஆகாயம் - aer
ஆகாமை - inficientia
ஆகாரம் - (உணவு) cibus
ஆகிலும் - quamvis
ஆகில் - si sit
ஆகிறது - esse, fieri
ஆகையால் - quapropter
ஆக்கம்- (செல்வம்) felicitas; (நல்வாய்ப்பு) prosperitas; (வளர்ச்சி) incrementum
ஆக்கிரமம் - superbia
ஆக்கிரமிக்கிறது - superbire
ஆக்குகிறது - facere
ஆங்கு - ibi
ஆசாரம் - urbanitas
ஆசி - (வாழ்த்து) congratulatio
ஆசிர்வதிக்கிறது - benedicere
ஆசிர்வாதம் - benedictio
ஆசு - (குற்றம்) defectus
ஆசை - cupido, desiderium
ஆச்சரியம் - admiratio
ஆடல் - saltatio, choreæ
ஆடவன் - masculus aetale minor
ஆடு - (மிருகம்) ovis, capra
ஆடுகிறது - (கூத்தாடுகிறது) choreas ducere; (அசைகிறது) moveri; (விளையாடுகிறது) ludere
ஆடுதல் - saltatio, choreæ
ஆடை - (உடை) vestitus
ஆட்சி - dominium
ஆட்சேபணை - objectio
ஆட்டம் - saltatio
ஆட்டுகிறது - movere, agitare
ஆட்டை - (ஆண்டு) annus
ஆணி - clavus
ஆணை - juramentum
ஆண் - masculinus
ஆண்மை - virilitas, generositas
ஆண்டு (வருடம்) annus; (அங்கே) ibi, illic
ஆதரவு - protectio
ஆதரிக்கிறது - protegere, favere

ஆதலால் - quapropter
ஆதாரம் – fulcrum, basis
ஆதி - (முதன்மை) principium; (கடவுள்) Deus
ஆதிக்கம் - præfectura
ஆத்திரம் - præcipitatio
ஆந்தை - noctua
ஆபாசம் - deordinatio, irregularitas
ஆமை - testudo
ஆயத்தம் - præparatio
ஆயன் - pastores
ஆயாசம் - defatigatio
ஆயிரம் - mille
ஆயிருக்கிறது - esse tale
ஆயிற்று – actum est
ஆயினும் - quamvis
ஆயுசு - ஆயுள் - vita, ætas
ஆயுதம் - arma in gen
ஆய்கிறது seligere
ஆய்ப்பு - ஆப்பு – cuneus
ஆய்வு - selectio
ஆரம் - (மாலை) sertum
ஆரம்பம் - principium
ஆரம்பிக்கிறது - incipere
ஆரவாரம் - strepitus ingens
ஆராதனை - veneratio, cultus
ஆராய்கிறது - expendere
ஆராய்ச்சி - miles prœcipuus, quasi decurio
ஆரோக்கியம் - sanitas
ஆர் - (யார்) quis, quæ, quinam
ஆர்ப்பு - strepitus
ஆர்வம் – amor, desiderium
ஆலயம் - templum
ஆலை - moletrina
ஆலோசனை – deliberatio
ஆவல் - cupido
ஆவி - (புகைஆவி) fumus, vapor; (உயிர்) vita
ஆவேசம் - spatium
ஆழம் - profunditas
ஆழி - (மோதிரம்) annulus; (கடல்) mare
ஆழ்கிறது - deprimi
ஆளுகிறது - regnare
ஆள் - (பேர்வழி) persona, vir; (பணி ஆள்) servus
ஆள்வினை - exercitium
ஆறு - (எண்) sex;
(நதி) - pluvius;
(வழி) - via
ஆறுகிறது - refrigerari

ஆறுதல் - (குளிர்தல்) refrigerium; (தேறுதல்) consolatio
ஆற்றல் - (வலிமை) vis, potentia
ஆற்றுகிறது - refrigerare
ஆற்றுவிக்கிறது - confortare
ஆனதினுலே - quia
ஆனந்தம் - lœtitia
ஆனுலும் - quamvis
ஆனுல் - si, attamen
ஆனை - (யானை) elephas
ஆன் - (பசு) bos, vacca
ஆன்மா - anima, vita
ஆன்ருேர் - doctores
ஆஸ்தி - divitiæ

இ

இகல் - pugna, fortitudo
இகழ்கிறது contemnere, conviciari
இகழ்ச்சி - contemplus
இங்கு - hic locus
இசை - (இசைவு) concentus, conjunctio; (பாட்டு) sonus
இசைதல் - இசைவு - concentus, conjunctio
இஞ்சி - zingiber
இடது - sinister - a - um
இடம் - locus, magnitudo
இடர் - afflictio, calamitas
இடி - tonitru, fulmen
இடிக்கிறது - tonare
இடை - (நடு) medium; (இடுப்பு) ren
இடையன் - pastor
இணக்கம் - concordia
இணக்குகிறது - conjungere
இணங்கு - dœmonium
இணங்குகிறது - consentire
இணை - par (இரட்டை)
இணைக்கிறது - adjungere
இணைவு - copulatio, commixtio
இதழ் - labium, nictatis
இது - hoc
இந்த - hic, hæc, hoc,
இமை - palpelra
இமைக்கிறது - nutare
இயக்கம் - motus
இயக்குகிறது - movere
இயங்குகிறது - moveri

இயம்பல் - verbale a seq, proverbium
இயல்பு - qualitas, gressus, convenientia, rectitudo
இயற்கை - indoles,natura
இரக்கம் - misericordia, miseratio
இரட்டல் - duplum
இரட்டிக்கிறது - duplicare
இரண்டாம் – secundus
இரண்டாவது - secundò
இரண்டு - duo
இரவி - sol, mons
இரவு - nox
இருக்கிறது - esse, existere
இருக்கை - sedes, statio
இருட்டு tenebræ
இருபது - viginti
இருப்பிடம் - sedes
இருமல் - tussis hominum
இருமு - vox disyllaba
இருமுகிறது - tussire
இரும்பு - ferrum
இருவரும் - uterque
இருள் - tenebræ
இரை - (உணவு) esca,
இரைகிறது - strepere
இரைச்சல் - இரைதல் - strepitus
இரைப்பு - asthma
இலக்கணம் - regulæ grammaticæ
இலக்கு - signum
இலை - folium
இல் - locus; domus (வீடு)
இல்லாமை - carentia
இல்லை - non
இவை - hoec
இவ்வளவு - tantum
இவ்விடத்திலே - hic
இழவு - luetus de defuncto
இழிகிறது - descendere
இழிவு - res abjecta, culpa, damnum
இழுக்கிறது - trahere
இழை - filum
இளக்கம் - mollimentum
இளப்பம் - abjectio
இளமை – tenera ælas, teneritas
இளைக்கிறது - marcescere
இளைஞர் – minores
இளைஞன் - juvenis
இளைப்பு - defatigatio
இறகு - ala

இறக்கம் - descensus
இறக்கிறது - mori
இறங்குகிறது - descendere
இறப்பு - mors
இறவானம் - subgrunda
இறுகுகிறது - arctari
இறுதி - finis
இறுமாக்கிறது - exultare
இறுமாப்பு - arrogantia, exultatio
இறும்பூது - miraculum
இறை - (வரி) tributum; (கடவுள்) Deus; (அரசன்) Rex
இறைக்கிறது - rigare
இறைச்சி - caro
இறைஞ்சுகிறது - venerari
இறைத்தல் (நீர்) - irrigatio
இறைவன் - Deus (கடவுள்)
இனம் - prosapia
இனி - deincepo (இனிமேல்)
இனிக்கிறது - dulcé sapere
இனிப்பு - dulcedo
இன்சொல் - verbum amœnum
இன்பம்-suavitas, delectatio
இன்மை carentia
இன்றி - sine
இன்றைக்கு - hodie
இன்னல் - malum, afflictio
இன்னிசை - harmonia melodia
இன்னும் - adhue
இன்னுமில்லை - nondum
இன்னே - nunc

ஈ

ஈ - musca (பறக்கும் ஈ)
ஈகிறது - dare
ஈகை - largitio, donatio
ஈங்கு - hic
ஈடு - (அடகு) pignus; (பெருமை) magnitudo
ஈட்டம் - turma, collectio
ஈட்டி - lancea
ஈட்டுகிறது - colligere
ஈண்டு - (இங்கே) hic
ஈண்டுகிறது-sociari, coalescere

ஈரம் - (நீர்ஈரம்) humiditas; (இரக்கம்) miseratio

ஈரல் - jecur

ஈர்க்கிறது-trahere, extrahera

ஈளை - asthma

ஈறு - (இறுதி) finis

ஈனுகிறது - parere

ஈனுதல் – (பிள்ளைபெறல்) partura

உ

உகிர் - unguis

உகுக்கிறது - effundere

உசாவுகிறது - expendere

உச்சம் - altitudo, apex

உச்சரிப்பு - pronuntiatio

உச்சி - pars superior, canis

உடந்தை - amicitiæ

உடம்பு, உடல் — corpus

உடனே - statim, cum

உடுக்கை - parvum tympanum

உடுத்துகிறது - vestire

உடுப்பு, உடை — vestitus

உடைகிறது - frangi

உடைக்கிறது - frangere

உடைமை - monilia

உட்கு - timor

உணர்கிறது - scire, intelligere

உணர்ச்சி, உணர்தல் — intelligentia, memoria

உணர்த்துகிறது - imperare

உணர்த்துதல் - instructio

